Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஆனி 29 சனிக்கிழமை (13-07-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:230

# சர்ச்சைக்குரிய பிரதேசங்களில் ஹர்த்தால் நடத்துவதற்கு தடை!

## அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்; பாதுகாப்பு அமைச்சர் நேற்று அறிவிப்பு

கொழும்பு,ஜூலை13

**☆ மோதல்களுக்கு வழிவகுக்கப்படக்கூடிய பிரதேசங்களில் ஹர்த்தால்கள் நடத்துவதை நிறுத்த அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளும்.**

**☆ அப்பிரதேசங்களில் சமூகத் தலைவர்களின் ஒத்துழைப்புடன் நல்லெண்ண நடவடிக்கைகளை எடுக்கக் கண்காணிப்புக் குழுவினர் கோரப்பட்டிருக்கின்றனர்.**

**☆ வாழைச்சேனைப் பகுதியில் கண்காணிப்புக் குழு அலுவலகம் ஒன்றைத் திறக்கவும் கோரப்பட்டிருக்கின்றது.**

**- பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன நேற்று முற்பகல் நாடாளுமன்றத்தில் இவற்றை அறிவித்தார்.**

கிழக்கு மாகாணச் சம்பவங்கள் தொடர்பாக விரிவான அறிக்கை ஒன்றை விடுத்து, அமைச்சர் சபையில் உரையாற்றினார்.

வாழைச்சேனைப் பகுதியில் ஏற்பட்ட சேதங்களை மதிப்பீடு செய்ய மூவர் கொண்ட குழு ஒன்றை அரசு நியமிக்கும் என்றும் -

நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் வாழைச்சேனை நகரைப் புனரமைக்க அரசு தீர்மானித்திருக்கிறது என்றும் -

அமைச்சர் தனதுரையில் குறிப்பிட்டார்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டுறவுத்துறை அமைச்சர் இன்று யாழ். வருகின்றார்

யாழ்ப்பாணம்,ஜூலை13

யாழ்ப்பாணத்துக்கான உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு கூட்டுறவுத்துறை அமைச்சர் ஏ.ஆர். எம்காதர் இன்று சனிக்கிழமை வருகை தரவுள்ளார்.

ஏ-9 தரைவழிப் பாதை ஊடாக வருகைதரும் அமைச்சர், யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு அரசாங்க அதிபர் மற்றும் திணைக்களத் தலைவர்கள், கூட்டுறவுத் துறை அதிகாரிகள், பிரமுகர்கள், அரச அதிகாரிகளுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளார்.

யாழ்மாவட்ட கூட்டுறவு அபிவிருத்திச் சபைக்கும் அமைச்சர் விஜயம் செய்து பார்வையிடவுள்ளார்.

(ம-8-10-15)

## உடத்தலவின்ன படுகொலைகள்: ரத்வத்தை மற்றும் 14பேர் மீதும் மொத்தம் 75 குற்றச்சாட்டுக்கள்

கொழும்பு,ஜூலை13

உடத்தலவின்ன முஸ்லிம் இளைஞர்கள் பத்துப் பேர் தேர்தலன்று படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை மற்றும் அவரது இரு புதல்வர்கள் உட்பட 15 சந்தேக நபர்கள் மீதும் மொத்தம் 75 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

இந்த வழக்கு நேற்று தெல்தெனிய நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது குற்றப்பத்திரிகைகள் சந்தேக நபர்களிடம் கையளிக்கப்பட்டன.

மூன்று நீதிபதிகளைக் கொண்ட 'ட்ரயல் அட்பார்' நீதிமன்றத்தின் முன் இந்த வழக்கு விசாரணையை நடத்தச் சட்டமா அதிபர் தீர்மானித்துள்ளார் என நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

தெல்தெனிய நீதிவான் இனோகா ரணசிங்க வழக்கை 26ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ம)

## நெடுந்தீவில் புலிகளின் அலுவலகம்

மண்டைதீவு,ஜூலை13

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பணிமனை ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நெடுந்தீவில் திறந்துவைக்கப்படவிருக்கிறது.

நெடுந்தீவு மகாவித்தியாலயத்திற்கு அருகில் உள்ள கட்டடம் ஒன்றில் இந்த அலுவலகம் திறந்து

(14 ஆம் பக்கம் பார்க்க)

## பிரபா – ஹக்கீம் சந்திப்புக்கு கூட்டமைப்புக் குழுவினர் தூது!

### சம்பந்தன், விநாயகமூர்த்தி, ஸ்ரீகாந்தா வன்னி செல்வர்

கொழும்பு,ஜூலை13

புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமுக்கும் இடையில் நேரடிப் பேச்சுக்களை ஒழுங்குசெய்யும் நோக்குடன் தமிழக் கட்சிக் கூட்டமைப்பின் தூதுக்குழு ஒன்று விரைவில் வன்னி செல்லவிருக்கிறது.

அமைச்சர் ரவூப் ஹக்கீமின் விருப்பத்தின்பேரிலேயே இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்படவிருக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற நீண்ட சந்திப்பின்போது இந்த விடயம் பற்றித் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிகின்றது.

வன்னி செல்லவுள்ள கூட்டமைப்பின் தூதுக்குழுவில் கூட்டணியின் செயலாளர் நாயகம் சம்பந்தன், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அ.விநாயகமூர்த்தி, ரெலோ முதல்வர் ஸ்ரீகாந்தா ஆகியோர் இடம்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## பொ.ஐ.முன்னணி, ஜே.வி.பியுடன் தடை நீக்கப்பட்டதும் பேசுவோம்!

### தமிழ்ச் செல்வன் கூறுகிறார்

கொழும்பு,ஜூலை13

புலிகள் இயக்கம் மீதான தடை நீக்கப்பட்டதும் பொ.ஐ.முன்னணி, ஜே.வி.பி., சிஹல உறுமய உட்பட தென்னிலங்கை அரசியல் கட்சிகளுடன் பேச நடவடிக்கை எடுப்போம்.

புலிகள் இயக்க அரசியல் துறைப் பொறுப்பாளரான தமிழ்ச்செல்வன் இவ்வாறு கூறியிருக்கிறார்.

கிளிநொச்சியில் கடந்த புதனன்று நடைபெற்ற ஒரு சந்திப்பின் போது இதைக் கூறிய அவர், தென்னிலங்கை அரசியல் கட்சிகளுடன் பேச்சு நடத்துவதால் இனப்பிரச்சினையைத் தீர்க்க திருந்திய அரசியல் தீர்வைக் காண முடியும் என்ற நம்பிக்கையைப் புலிகள் இயக்கம் கொண்டிருக்கிறது என்றும் சொன்னார்.

புத்தநிறுத்த ஒப்பந்தத்தின் நிபந்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## 24 ஆம் திகதி பிரதமர் புஷ்ஷை சந்திப்பார்!

கொழும்பு,ஜூலை13

எதிர்வரும் 19 ஆம் திகதி அமெரிக்கா புறப்படும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அதிபர் ஜோர்ச் புஷ்ஷுடன் 24 ஆம் திகதி பேச்சுக்களை நடத்தவிருக்கிறார்.

தற்சமயம் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகள் தொடர்பாகவும் பொருளாதார உறுதி குறித்தும் இரு தலைவர்களும் கலந்துரையாடுவர்.

பிரதமர் நாடு திரும்பியதும் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க வெளிநாட்டுப்பயணம் ஒன்றை மேற்கொள்ளவிருக்கிறார்.

அமெரிக்கா, பிரான்ஸ், லண்டன் ஆகிய நாடுகளுக்கு அவர் செல்வார்.

சமாதான முயற்சிகள் குறித்தும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மீது அரசு மேற்கொண்டுள்ள நெருக்குதல்கள் குறித்தும் ஜனாதிபதி அந்த நாடுகளின் தலைவர்களுடன் கலந்துரையாடுவார். (ம - 3)

## விடுதலைப் புலிகள் மீதான தடை தொடரும் அது சமாதான முயற்சிகளைப் பாதிக்காது!

### இந்திய வெளியுறவு அமைச்சர் சின்ஹா தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை13

இந்தியாவில் விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடை தொடர்ந்து இருக்கும். அந்தத் தடை இலங்கையில் தற்சமயம் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சியை எந்தவகையிலும் பாதிக்காது என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா தெரிவித்தார்.

இலங்கை விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்றுத் தாயகம் திரும்புமுன் இந்திய செய்தியாளருக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இப்படிக் கூறினார்.

இலங்கையில் மேற்கொள்ளப்படும் சமாதான நடவடிக்கைகளுக்குத் தேவை ஏற்பட்டால் இந்தியா ஆலோசனைகளை வழங்கும்.

இனப்பிரச்சினை இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினை. அதை உள்நாட்டிலேயே தீர்க்கவேண்டும் என்பதே இந்தியாவின் விருப்பமும் நிலைப்பாடுமாகும். பேச்சுமூலம் தீர்வு காணும் முயற்சிகளை இலங்கை தொடரவேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை நேற்றுச் சந்தித்து அவர் கலந்துரையாடினார்.

சமாதான முயற்சிகளில் இந்தியாவின் பங்களிப்பு தொடர்பாக ஜனாதிபதி எடுத்துக்கூறினார்.

பேச்சுக்கள் விரைவில் ஆரம்பிக்கப்படவேண்டிய அவசியம் குறித்து ஜனாதிபதியிடம் சின்ஹா எடுத்துக் கூறினார்.

பல்வேறு நிகழ்ச்சிகளில் சின்ஹா நேற்றுப் பங்குபற்றினார். (ம-3-12)





இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா பிரதமர் ரணிலையும், ஜனாதிபதி சந்திரிகாவையும் சந்தித்துப் பேசியபோது எடுக்கப்பட்ட படங்கள்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# விளையாட்டு

## 'வடக்கின் பெரும் போர்' நேற்று ஆரம்பமானது!

### யாழ். மத்திய கல்லூரி முன்னணி

யாழ்ப்பாணம்,ஜுலை13

'வடக்கின் பெரும்போர்' என்று வர்ணிக்கப்படும் யாழ்.மத்திய கல்லூரி - சென்.ஜோன்ஸ் கல்லூரி இடையேயான கிரிக்கெட் போட்டி நேற்று ஆரம்பமானது.

நேற்றைய ஆட்டநேர இறுதியில் சென்.ஜோன்ஸ் அணி தனது இரண்டாவது இனிங்ஸை ஆட ஆரம்பித்திருந்தது.

நேற்றுக்காலை ஆட்டம் ஆரம்பமானபோது, நாணயச் சுழற்சியில் மத்திய கல்லூரி அணித்தலைவர் வெற்றிபெற்றார். சென்.ஜோன்ஸ் அணியை முதலில் துடுப்பெடுத்தாடுமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

துடுப்பெடுத்தாடக் களம் இறங்கிய சென்.ஜோன்ஸ் அணி வீரர்கள் மத்திய கல்லூரி வீரர்களின் பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் திணறினர். சென்.ஜோன்ஸ் அணியின் முன்வரிசை ஆட்டக்காரர்கள் எவரும் சிறப்பாக ஆடவில்லை.

உணவு இடைவேளையின் பின்னர் ஆட்டம் ஆரம்பமான சுமார் அரை மணி நேரத்தில் சென்.ஜோன்ஸ் அணி அனைத்து விக்கெட்களையும் இழந்து 102 ஓட்டங்களை மட்டும் பெற்றிருந்தது.

மத்திய கல்லூரி பந்து வீச்சாளர்கள் எஸ்.விமலகாந்த் 20 ஓட்டங்களை விட்டுக்கொடுத்தும், எஸ்.சிவகுமார் 48 ஓட்டங்களை விட்டுக் கொடுத்தும் தலா 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாட மத்திய கல்லூரி அணி பிற்பகல் 1.45 மணியளவில் களம் இறங்கியது. ஆரம்பம் முதலே அந்த அணி வீரர்கள் அதிரடியாக ஓட்டங்களைக் குவித்தனர்.

மத்திய கல்லூரி வீரர் கே.கார்த்திக் 76 ஓட்டங்களைப் பெற்று அணி வலுவான நிலையை அடைய அடித்தளம் இட்டுக்கொடுத்தார். அணியின் மற்றைய வீரரான வி.இரஜீவகுமார் 30 ஓட்டங்களையும் அணித்தலைவர் எஸ்.கார்த்தீபன் ஆட்டமிழக்காமல் 18 ஓட்டங்களையும் பெற்றனர்.

இறுதியில் 9 விக்கெட் இழப்பிற்கு 176 ஓட்டங்கள் என்ற நிலையில் தனது முதல் இனிங்ஸ் ஆட்டத்தை மத்திய கல்லூரி அணி நிறுத்திக்கொண்டது.

சென்.ஜோன்ஸ் வீரர்கள் ப.லவேந்திரா 71 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியிருந்தார். சி.அகிலன் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இந்த நிலையில் முதல் நாளே இரண்டாவது இனிங்ஸை ஆடவேண்டிய கட்டாயத்திற்கு சென்.ஜோன்ஸ் அணி தள்ளப்பட்டது.

மாலை 5.45 மணிக்கு தனது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த சென்.ஜோன்ஸ் அணி முதலாவது ஓவரிலேயே தனது முதல் விக்கெட்டை இழந்தது. தொடர்ந்து மேலும் இரு ஓவர்கள் பந்து வீசப்பட்டது. பின்னர் போதிய வெளிச்சமின்மையால் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

ஆட்ட முடிவில் தனது இரண்டாவது இனிங்ஸில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 2 ஓட்டங்கள் என்ற நிலையில் சென்.ஜோன்ஸ் அணி இருந்தது. ஆட்டம் இன்றும் தொடரும்.

(ம)

## சிறந்த வீரர் கில்கிறிஸ்ட்

லண்டன்,ஜுலை13

சர்வதேச கிரிக்கெட் வீரர்களின் சங்கத்தின் கடந்த வருடத்திற்கான சிறந்த வீரர் விருதை அடம் கில்கிறிஸ்ட் வென்றுள்ளார்.

வருடாந்தம் சிறந்த வீரர் விருதை சர்வதேச கிரிக்கெட் வீரர்களின் சங்கம் வழங்கி வருகிறது. இவ்விருதை வென்ற மூன்றாவது ஆஸ்திரேலிய வீரர் அடம் கில்கிறிஸ்ட் ஆவார்.

ஆஸ்திரேலியா அணியின் உபதலைவரும் விக்கெட் காப்பாளருமான அடம் கில்கிறிஸ்ட்டின் டெஸ்ட் துடுப்பாட்டச் சராசரி 60.00 ஆகும். தற்போதைய டெஸ்ட் கிரிக்கெட் வீரர்களில் அதிகூடிய சராசரி இது.

பிரைஸ்வோட்டர் ஹவுஸ் கூப்பர் நிறுவனத்தின் டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களின் தர வரிசையிலும் தற்போது கில்கிறிஸ்ட் முன்னணியில் உள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் வீரர்கள் சங்கத்தின் சிறந்த வீரா வருதுக்கு இம்முறை முத்தையா முரளிதரன், மஹேல ஜயவர்த்தன, சச்சின் டெண்டுல்கர், ஜக் கலிஸ், மத்தியூ ஹைடன் ஆகியோரின் பெயர்கள் சிபாரிசு செய்யப்பட்டிருந்தன.



இதேவேளை, வருடத்தின் சிறந்த இளம் வீரருக்கான விருது இலங்கையரான குமார் சங்கக்காரவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

(ம)

## இந்திய கிரிக்கெட் அணி தவறான நேரத்தில் சாதிக்கிறது

### முன்னாள் தலைவர் கருத்து

இந்திய அணி தவறான நேரத்தில் சாதிக்கிறது என்று பிஷன்சிங் பெடி கூறியுள்ளார்.

இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்துள்ள இந்திய கிரிக்கெட் அணி அபாரமாக ஆடி இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளது.

இந்த நிலையில் இந்திய அணியின் முன்னாள் தலைவர் பிஷன்சிங் பெடி வழக்கம்போல் இந்திய அணியை குற்றம் சுமத்தியுள்ளார். புதுடில்லியில் நடந்த விழாவில் அவர் பேசும்போது இதனைத் தெரிவித்தார்.

"உலகக் கிண்ணப் போட்டிக்கு இன்னும் 6 மாதங்கள் இருக்கிறது. அதற்குள்ளாகவே இந்திய அணி [illegible]க்கட்டவலுவை எட்டிவிட்டது. [illegible]ங்கிண்ணப் போட்டியின்போது இந்திய வீரர்கள் சோர்ந்து விடுவார்கள்.

உலகக் கிண்ணத்திற்கு முந்தைய சில நாள்கள் வரை இந்திய அணிக்கு மோதல்கள் இருக்கிறது. இதனால் வீரர்கள் ஓய்வு கிடைக்காமல் தவிக்கப் போகிறார்கள்.

கிரிக்கெட் சபையின் இந்த செயற்பாடுகள் எந்த வகையிலும் ஏற்கத்தக்கதாக இல்லை. இந்திய அணித் தலைவர் கங்குலியின் களத் தடுப்பு அனைவருக்கும் வெறுப்பை உண்டாக்குவதாக இருக்கிறது. மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டிய கங்குலி இதுபோல் செயற்பட்டால் இந்திய அணியின் எதிர்காலம் கேள்விக்குறியாகும்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-ரி)

# யாழ். வர்த்தகக் கண்காட்சி அடுத்தமாத முதல் வாரத்தில்

## 13 அமைச்சர்கள் கலந்துகொள்வர்

யாழ்ப்பாணம்,ஜுலை13

'வர்த்தகத்தின் ஊடாக சமாதானம்' என்ற தொனிப்பொருளுடன் யாழ்.வர்த்தகக் கண்காட்சி அடுத்த மாதம் 3 ஆம் திகதிமுதல் 5 ஆம் திகதிவரை யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

தென்பகுதியில் வாழும் வர்த்தக சமூகத்தினர் வடக்கில் உள்ள ஆற்றல் மிக்க தொழிற்றுறை உரிமையாளர்களைச் சந்திக்க ஒரு முழுமையான வாய்ப்பை வழங்கவும் -

வர்த்தகத் தொடர்புகளை மீளமைத்து எதிர்கால வர்த்தக வாய்ப்புகள் பற்றிக் கலந்துரையாடவும் - இந்தக் கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக கண்காட்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இந்தக் கண்காட்சியை ஒட்டி நிதி நிறுவனங்கள் மற்றும் வர்த்தக சம்மேளனங்களின் உதவியுடன் விசேட கருத்தரங்குகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

மூலதன வாய்ப்புகள் குறித்தும் - நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தி வடக்கில் தேர்ந்தெடுக்கப்பட்ட கைத்தொழில்களை முன்னேற்றுவது குறித்தும் - இக்கருத்ரங்கில் ஆராயப்படவிருக்கின்றது.

விவசாயம், கால்நடை அபிவிருத்தி, தகவல் தொழில்நுட்பம், உணவுப் பொருள்களைப் பதனிடுதல் மற்றும் தகரத்தில் அடைத்தல், கொழும்புச் சந்தை தொடர்பான முதலீட்டு அறிவுரைகள் தொடர்பாக இந்தக் கருத்தரங்கில் ஆராயப்படும்.

மூன்று தினங்கள் இடம்பெறும் இக்கண்காட்சியில் 13 அமைச்சர்கள் மற்றும் பல பிரதி அமைச்சர்கள் கலந்துகொள்வர்.

இந்தக் கண்காட்சி தொடர்பான விவரங்களை "CDC CONVENTIONS (PVT) Ltd," உடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-3-10)

## கயிற்றால் கட்டிவைத்து இளைஞன் மீது தாக்குதல்

### நகரக் கடையொன்றில் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஜுலை13

[illegible]

தாக்கப்பட்ட நபர் ஆபத்தான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி நபரை கடைக்கு உள்ளே கூட்டிச் சென்று அங்குள்ள மறைவிடம் ஒன்றில் அவரைக் கதிரையுடன் சேர்த்து கயிற்றினால் இறுகக் கட்டிய பின்னர் பலகைச் சட்டம் ஒன்றினால் கடையில் இருந்தவர்கள் அவரைக் கடுமையாகத் தாக்கியுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

வேதனை தாங்க முடியாது அவர் சத்தமிடவே அயலில் உள்ள கடைககாரரும் பொதுமக்களும் கடைக்குள் புகுந்து பார்த்தபோது அந்த இளைஞன் கதிரையுடன் கட்டப்பட்டு இரத்தம் தோய்ந்த நிலையில் காணப்பட்டதாகவும் -

பின்னர் அவரை பொதுமக்கள் வைத்தியசாலைக்கு கொண்டுசென்று அனுமதித்ததாகவும் -

பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

தாக்கப்பட்ட இடத்தில் இரத்தம் சிந்திக் காணப்பட்டது. தாக்கிய பலகைச் சட்டமும் அங்கேயே காணப்பட்டது என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலீஸார் கடையில் இருந்தவர்களைக் கைது செய்ததுடன் கடையையும் மூடினார்கள். கடையின் உரிமையாளர் தலைமறைவானதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடன் விவகாரம் ஒன்று தொடர்பாகவே இளைஞர் தாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. (ம-8)

## லொறி - தட்டிவான் விபத்தில் நேற்று ஒன்பது பேர் காயம்

யாழ்ப்பாணம்,ஜுலை13

அரியாலை, மாம்பழம் சந்தியில் நேற்று நண்பகல் இடம்பெற்ற லொறி - தட்டிவான் விபத்தில், தட்டிவான் சாரதி உட்பட 9 பேர் படுகாயம் அடைந்தனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து நேற்று நண்பகல் 12.30 மணிக்கு சுமார்15 பயணிகளுடன் கொடிகாமம் நோக்கிப் புறப்பட்ட தட்டிவானே, மாம்பழம் சந்தியில் விபத்திற்குள்ளானது.

இச்சம்பவத்தில் தட்டிவான் சாரதியான கொடிகாமத்தைச் சேர்ந்த இராமலிங்கம் பத்மநாதன் (வயது25) மற்றும் பயணிகளான சாவகச்சேரியைச் சேர்ந்த சுப்பையா திருநாவுக்கரசு(வயது 47), வரணிவடக்கைச் சேர்ந்த தம்பிராசா இராசாத்தி (வயது 48), அவரது பேரப்பிள்ளையான நிதுசன் பிரதீபன் (வயது 3), கொடிகாமத்தைச சேர்ந்த சுப்பையா கணேசன் (வயது 35), வேலணை யைச்சேர்ந்த கே.செந்தில்வேல் (வயது 57), சங்கத்தானையைச் சேர்ந்த முத்தையா நாகராசா (வயது 65), வட்டுக்கோட்டையைச் சேர்ந்த தம்பு கந்தையா (வயது 65), மட்டுவிலைச் சேர்ந்த ஜெயசீலன் சசிகலா (வயது 22), ஆகியோரே படுகாயம் அடைந்தவர்கள் ஆவர்.

படுகாயம் அடைந்தவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.லொறிச்சாரதி தலைமறைவாகிவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ம-15)

### விபத்துகளில் உயிரிழப்போர் அதிகரிப்பு!

கொழும்பு தேசிய வைத்தியசாலை விபத்துச் சிகிச்சைப் பிரிவின் பதிவுகளின்படி ஒருநாளின் ஒவ்வொரு ஐந்து மணித்தியாலங்களுக்கு ஒருவர் வீதி விபத்தினால் இறப்பதாகத் தெரிய வருகிறது. இவ்வாறு இறப்பவர்களில் 75 சதவீதமானோர் 20இற்கும் 50இறகும் இடைப்பட்ட வயதுள்ளோர் ஆவர். இவர்களில் பெரும்பாலனோா தமது குடும்பத்தின் வருமான உழைப்பாளிகளாவர்.

இந்த வருடத்தின் முதல் ஐந்து மாதங்களில் மட்டும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் காயங்களுக்கு சிகிச்சைபெற அனுமதிக்கப்பட்டோரில் 141பேர் வீதி விபத்துக் காயங்கள் காரணமாக இறந்துள்ளனர்; இதைவிட ரயில் விபத்துக்களும் அதிகரித்து வருகின்றன எனவும் தெரியவருகிறது.

மேலும் வீதி விபத்துக்களில் அனேகமானவற்றிற்கு வாகனச் சாரதிகள் குடிபோதைக்கு உட்பட்டிருத்தல், தலைக்கவசம் அணியாமை, சாரதிகளின் அனுபவக்குறைவு, தரக்குறைவான வீதி நிலைமைகள் மற்றும வாகனங்கள் போக்குவரத்து விதிகளை அனுசரிக்கத் தவறுதல், வாகனங்களில் விளக்குகள் இன்மை, பரீட்சயமற்ற வீதிகளில் விசேட கவனம் செலுத்தாமை போன்றவைகள் முக்கிய காரணிகளாக அமைகின்றன. வீதி விபத்துக்குள்ளானோரில் ஆண், பெண் விகிதாசாரம் 5:1 எனவும் அக கணிப்பீடு தெரிவிக்கின்றது. (ஓ-ரி)

## இத்தாவில், முகமாலை, பளைப் பகுதிகளில் களவுபோன பொருள்கள் காவல்துறையினரால் மீட்பு!

யாழ்ப்பாணம்,ஜுலை13

இத்தாவில், முகமாலை, பளைப் பகுதிகளில் உள்ள வீடுகளில் திருடப்பட்ட வீட்டுத் தளபாடங்கள், இரும்புக் கேற்றுகள் என்பன தம்மால் மீட்கப்பட்டுள்ளதாக தமிழீழ காவல்துறையினர் அறிவித்துள்ளனர்.

போர் அழிவால் மிகவும் பாதிக்கப்பட்ட பச்சிலைப்பள்ளி மேற்குப் பிரதேச மக்கள் ஒன்றியத்துக்கு அவர்கள் இதனை அறிவித்துள்ளனர். அதனுடன் இத்திருட்டு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளவர்களையும் காவல்துறையினர் கைதுசெய்துள்ளனர்.

மேற்குறிப்பிட்ட பிரதேசங்களில் உள்ள தமது வீடுகளில் இருந்து பொருள்களைப் பறிகொடுத்த மககள், தங்கள் பொருள்களை அடையாளம் காட்டுவதற்காக இன்று காலை 10 மணிக்கு பளையில் உள்ள தமிழீழ காவல்துறைப் பணிமனைக்கு வருகை தருமாறு போர் அழிவால் மிகவும் பாதிக்கப்பட்ட பச்சிலைப்பள்ளி மேற்குப் பிரதேச மக்கள் ஒன்றியத்தினர் அறிவித்துள்ளனர்.

(ம-8)



இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா புத்தசாசன அமைச்சர் டபிள்யூ. ஏ.லொக்குபண்டார சகிதம் வணக்கம் செலுத்துவதற்காக விகாரைக்குச் செல்லும் காட்சி.

# அக்கரைக்கு இக்கரைபச்சை

இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை என்பது சரியாகத்தான் இருக்கிறது. எமது பெண்கள் தமது அழகை அதிகரிக்க வெளிநாட்டு 'கிறீம்'கள் மேல் மோகம் கொண்டு அலைகிறார்கள். ஆனால் இங்கே பாருங்கள் தென்கொரியாவின் கொஞ்சும் குமரிகள் தங்களை அழகுபடுத்தத் தேர்ந்தெடுத்திருக்கும் அழகு சாதனத்தை.


உள்ளூர் அழகு சாதனமான மருதாணியைக் கொண்டுதான் அவர்கள் தம்மை அழகுபடுத்திக் கொண்டுள்ளனர். இந்தியாவின் கொச்சியில் கணனிக் கல்வி கற்பதற்காக வந்த இடத்தில் இவர்களுக்கு மருதாணி மீது ஒரு காதல் வந்துள்ளது. கை நிறைய மருதாணி பூசிக்கொண்டு குதூகலித்திருக்கும் அவர்களைப் பார்க்கும் போது ஆரம்பத்தில் சொன்னது நினைவுக்கு வருகிறதா உங்களுக்கு?



# மருந்து ஆடைகள்

"உங்கள் ஆடைகளை ஒழுங்காகத் தோய்த்துப் பயன்படுத்துங்கள். இல்லையேல் அதிலுள்ள அழுக்குகளும், கிருமிகளும் உங்களுக்கு நோய்த் தொற்றை ஏற்படுத்தலாம்" – என்று டாக்டர்கள் அடிக்கடி புத்திமதி கூறுவதைக் கேட்டிருப்பீர்கள்.

அந்தக் காலம் மலையேறிவிட்டது. நோய்க் காரணிகளில் ஒன்றாக ஆடை இருந்தது போய், நோய் தீர்க்கும் மருந்தாக ஆடை மாறி விட்டது. ஆம் இதுதான் உண்மை. நோயைக் குணப்படுத்துமா ஆடைகள் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?



ஜேர்மனிய மருத்துவர்கள் இத்தகைய ஆடைகளை வடிவமைத்துள்ளார்கள். இறுக்கமாக அணியக்கூடிய இத்தகைய ஆடைகள், விட்டமின் ஏ, பி, சி ஆகிய சத்துக்களை நேரடியாகக் கால்களுக்கு அளிக்கின்றன.

இத்தகைய ஆடைகளில் சேர்க்கப்பட்டுள்ள வலி நீக்கும் மருந்துப் பொருள் (Pain Killer) கீழ்வாத நோயால் பாதிக்கப்பட்டோரை நன்கு குணமாக்குவதாகக் கூறப்படுகிறது.

அவுஸ்திரிய நாட்டில் இத்தகைய 'மருந்து ஆடைகள்' ஒருசோடி இந்திய மதிப்பில் சுமார் 200 ரூபாய்க்கு விற்பனையாகின்றன. விட்டமின் மருந்துகளை எல்லாம் ஓரங்கட்டிவிட்டுத் தற்போது இந்த ஆடைகள்தான் சந்தையில் மார்தட்டி நிற்கின்றன.

# விமானத்திலும் இன்ரநெற்

தொழில்நுட்பம் வளரவளர மனிதனுக்கான வசதிகளும அதிகரித்துச் செல்கின்றன. கொஞ்சம் பணக்காரராக இருந்தால் அனைவருமே இந்த வசதிகளை அனுபவிக்கலாம் (இலங்கையர்கள், அதிலும் தமிழர்கள் விதிவிலக்கு).

விமானங்களில் பயணிப்பவர்கள் தம்முடன் எடுத்துச் செல்லும் 'லப்டப்' கணனிகளைப் பயன்படுத்தும் வசதி மட்டுமே இதுவரை இருந்துவந்தது. ஆனால் இப்போது அத் தகைய 'லப்டப்' கணனிகளை விமானத்தில் பயன்படுத்துவோரின் தொடர்பாடலுக்கு வசதியாக இன்ரர்நெற் இணைப்பு வசதிகளையும் விமானங்களில் செய்து கொடுத்துள்ளார்கள். செயற்கைக் கோள் தொடர்பு மூலமாக இந்த இன்ரர்நெற் இணைப்பு ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளது.



பிரிட்டிஷ் எயர்வேஸ் விமான நிறுவனம் தனது பயணிகளுக்காக உலகில் முதன்முதலாக இந்த வசதியை ஏற்படுத்திக்கொடுத்துள்ளது.

இந்த இன்ரர்நெற் வசதியை வழங்குவதற்காக போயிங் விமானத் தயாரிப்பு நிறுவனம் தமது புதிய விமானங்களில் பல வசதிகளை ஏற்படுத்தி வருகின்றது.

மூன்று மாத காலத்துக்குப் பரீட்சார்த்த அடிப்படையில் குறிப்பிட்ட சில விமானங்களில் மட்டும் இந்த வசதி ஏற்படுத்தப்படும். இதனைப் பயணிகள் பயன்படுத்தும் அளவைப் பொறுத்து அது ஏனைய விமானங்களிலும் முழுமையாக அறிமுகப்படுத்தப்படும்.

… விமானத்தில் பறந்தபடி இன்ரநெற் மூலம் காதல்…(இந்தக் கதை நல்லாயிருக்கேன்னா என்கிறார் ஹொலிவூட் இயக்குநர் ஒருவர்)

# பாஷன்

விதம்விதமான ஆடைகளை அறிமுகப்படுத்துவதற்கான நவீன பாஷன் ஷோக்கள் நடத்தப்படுவது மேல்நாடுகளில் சகஜம். அதுதான் நாகரிகம் என்றும் ஆகிவிட்டது.

மேல்நாடுகளில் மட்டுமல்ல, வளர்ந்துவரும் நாடுகளிலும் தமது அழகு சாதனப் பொருள்களை மக்களின் தலையில் கட்டியடிப்பதற்காக இத்தகைய ஆடைக் கண்காட்சிப் போட்டிகள், அழகிப் போட்டிகள் என்பன நடத்தப்படுகின்றன. ஆனாலும் இத்தகைய கண்காட்சிகளில் ஏடாகூடமான வடிவமைப்புகளுக்கும் மிரட்சியை ஏற்படுத்தும் பிரமாண்டங்களுக்கும் மேற்குலக நாடுகளே இன்றும் கொடிகட்டிப் பறக்கின்றன.

இங்கே, அண்மையில் பாரிஸில் நடந்த பாஷன் ஷோ ஒன்றில் கலந்துகொண்ட மாடல் பெண் ஒருவரையே காண்கிறீர்கள். இவர் மாடலாக வந்தது என்னவோ பிரிட்டிஷ் ஆடைவடிவமைப்பாளர் ஒருவரின் ஆடைகளுக்குத் தான். ஆனால் பாருங்கள் அவரது ஆடையைவிட தலையில் என்னவோ செய்திருக்கிறாரே அதுதான் அனைவரையும் ஒருமுறைக்கு இரு முறை பார்க்க வைக்கிறது.



# அட! அப்படியா!!

தயாரிப்பு: கனிமொழி

# முட்டும் காளை



*ஸ்பெயின் நாட்டின் பாரம்பரியத் திருவிழாவான காளை அடக்கும் விழா கடந்த ஞாயிறன்று ஆரம்பமானது. சுமார் ஒரு வாரத்துக்கு இது வெகு கோலாகலமாக நடைபெறும்.*

*நூற்றுக்கணக்கான காளைகள் இதில் கலந்துகொண்டுள்ளன. சீறிவரும் காளையை அடக்கும் துணிவுள்ள இளைஞர்கள் அதனுடன் மல்லுக்கட்டுகிறார்கள். ஆத்திரமடையும் காளைகள், அடக்குபவர்களை மட்டுமல்ல வீதியோரம் நின்று வேடிக்கை பார்ப்பவர்களையும் முட்டி மோதிக் காயப்படுத்துகிறது.*

*இங்கே பாருங்கள் வேடிக்கை விளையாவதை. சிவனே என்று தன்பாட்டில் வீதியோரம் நின்று கொண்டிருந்தவரைத் தேடிவந்து முட்டுகிறது காளை (தேவையா இது….!)*

# இன்ரநெற்றில் பயங்கரம்

இது தகவல் தொழில்நுட்பயுகம். உலகத்தை உள்ளங்கைக்குள் அடக்கித் தந்தது இந்த தகவல் தொழில்நுட்பம் தான்.

தகவல் தொழில்நுட்பத்தின் அசாதிய வளர்ச்சிக்கு இன்ரர்நெற் எனப்படும் கணனி வலைப் பின்னலுக்கு மிக முக்கிய இடம் உண்டு.

மேற்கு நாடுகளில் உள்ளவர்களின் உயிர்நாடியாகவும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் மிக வேகமாகப் பயன்பட்டு வந்து கொண்டிருப்பதாகவும் உள்ளது இன்ரநெற் பயன் பாடு.

இன்ரநெற்றும் தகவல் தொழில்நுட்பமும் எவ்வளவு வேகமாக வளர்கின்றதோ, அதேவேகத்திலேயே அதன் அனுகூலங்களும் பிரதிகூலங்களும் அதிகரித்து வருகின்றன.

இளைஞர்களைக் கவரும் விதத்தில் அமைந்த மோசமான இணையத்தளங்கள் இருப்பது ஒரு பக்கம் இந்த இன்ரநெற்றின் பிரதிகூலம் என்றால -

இன்ரநெற் மூலம் சில கணனி கிரிமினல்கள் உருவாவது அதன் மற்றொரு பிரதிகூலம்.

கணனிகளைத் தாக்கும் வைரஸ் குறித்து நாம் அடிக்கடி கேள்விப்பட்டு இருக்கின்றோம். இதனை உருவாக்கும் கணனி கிரிமினல்களின் எண்ணிக்கை வரவர அதிகரித்துக் கொண்டிருக்கின்றது. இதில் துரதிர்ஷ்டம் என்னவென்றால் ஏனைய கிரிமினல்களைப போலல்லாது கணனிக் கிரிமினல்கள் அதி புத்திசாலிகளாக இருப்பதுதான்.

இன்ரநெற் வைரஸ் குறித்த புதிய - படுபயங்கரமான - தகவல் ஒன்றைத் தகவல் தொடர்புத்துறை நிபுணர்கள் மூவர் வெளியிட்டு இருப்பதே இந்த அலசலுக்கு எல்லாம் காரணம்.

அவர்கள் சொல்லி இருப்பது எல்லாம் இதுதான். "வைரஸ் புரோகிராம்களை எழுதும் கணனி கிரிமினல்கள், தாம் ஓய்வாக இருக்கும் போதுகூட இன்ரநெற்றைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கலாம்" - என்பதுதான்.

இன்ரநெற்றுடன் இணைந்துள்ள ஒருகோடி கணனிகளை சிலமணி நேரத்தில் தாக்கி, துவசம் செய்யக் கூடிய வோர்ம் (வோர்ம் என்பது கட்டுப்பாடின்றிப் பெருகிக் கொண்டே போகும் வைரஸ் வகை) ஒன்றை இத்தகைய கணனி கிரிமினல்கள் இன்ரநெற்றில் உலவ விடுவார்கள் என்றும் அந்த மூன்று நிபுணர்களும் எச்சரித்துள்ளனர்.



அண்மையில்கூட இத்தகைய வோர்ம் ஒன்று இன்ரநெற்றில் பரவியது. SQL Snake என்ற அந்த வோர்ம், இதுவரை உலகில் 6 லட்சத்துக்கும் மேற்பட்ட கணனிகளைச் தாக்கிச் செயலிழக்கச் செய்துள்ளது. அதன் அட்டகாசம் இன்னும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது.

இதுவரை இன்ரநெற்றில் பரவிய வைரஸ்களிலேயே இதுதான் மிக வலுவானது என்றும் மிக ஆபத்தானது என்றும் வைரஸ் நிபுணர்கள் கூறுகின்றார்கள்.

ஆனால், இனி வரும் காலங்களில் இதைவிடவும் மிக மிக மோசமான தாக்கங்கள் ஏற்படலாம் என்று எச்சரிக்கின்றார்கள் நிபுணர்கள்.

கணினி வைரஸ் இதுவரை பொதுவாக - அதிகமாக - ஈ-மெயில் மூலமாகவே பரவிவந்தது. "என் படுக்கையறைக் காட்சிகளை இலவசமாகப் பாருங்கள்", "இந்த மென்பொருளை படியிறக்கம் செய்யவும்" என்ற செய்திகளுடன் வரும் ஈ-மெயில்கள் மூலம் வைரஸ்கள் வேகமாகப் பரவிவந்தன.

இப்போது, இது தவிர இன்டன்ட் மெசேஜிங், இன்ரநெற்றிலே சற் (IRC) போன்ற தொடர்பாடல் வழிமுறைகள் மூலமாகவும் வைரஸ்கள் வேகமாகப் பரவுகின்றன என்று கண்டுபிடித்திருககிறார்கள்.

இத்தகைய வழிமுறைகளைப் பின்பற்றி 'ஒரு கணனி கிரிமினல் வைரஸ்கள் மூலம் 10 லட்சம் முதல் ஒரு கோடி இன்ரநெற் இணைப்பிலுள்ள கணனிகளைத் தன் கட்டுப்பாட்டில் கொண்டுவர முடியும்' - என்கிறது ஓர் அறிக்கை.

## பிரேம்

கணனி பாதுகாப்பு நிறுவனமான சிலிக்கன் டிஃபென்ஸினில் பணியாற்றும் டுவர்ட் டானிட் போர்ட், ஐ.சி.எ.ஐ. இன்ரநெற் ஆராய்ச்சி மையத்தில் பணியாற்றும் வெர்ன் பாக்ஸன், பேர்கிலி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த நிக்கோல் வீவர் ஆகிய கணனி நிபுணர்கள் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

'How to Own the Internet in your Spare time' என்ற தலைப்பில் இந்தக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

[0 வுக்குப் பதில் 0(பூச்சியம்) போடுவது கணனி கிரிமினல்களின் பழக்கம்]

லட்சக்கணக்கில் கணனிகளை கிருமினல்கள் தமது கட்டுப்பாட்டின்

(4ஆம் பக்கம் பார்க்க)

# நெஞ்சில் நிறைந்த சஞ்சீ...
## ஈராண்டு நினைவலைகள்

மண்ணில் 26 . 07 . 1982



விண்ணில் 13 . 07 . 2000

## சோமசுந்தரம் சஞ்சீவன்

*(யாழ். இந்துக் கல்லூரி 2001 கணிதப் பிரிவு மாணவன்)*

புன்னகைக்கோர் புதல்வனாய்
பூத்திருந்தாய் அழகனாய்
இந்து அன்னை மடிதனில்
தவழ்ந்திருந்தாய் மைந்தனாய்
நல்லதொரு பிள்ளையாய்
நண்பர்க்கு அன்பனாய்
நினைவுகளில் நின்றிருந்தாய்
கனவுகளில் தவழ்ந்திருந்தாய்
ஈராண்டு சென்றாலும்
என்றுமே உனை மறவோம்!

**- இந்துவின் மைந்தர்கள் -**

*குறிப்பு:* அமரர் சஞ்சீவன் நினைவாக திங்கட்கிழமை (15.07.2002) இரத்ததானம் செய்ய இருப்பதால் இந்துவின் மைந்தர்களைக் கலந்து கொள்ளுமாறு கேட்கின்றோம். (5944)

# ஏ-9 பாதையில் வேகக்குறைப்பு நடவடிக்கை

வலி.வடக்கு,ஜுலை13

ஏ-9 தரைவழிப் பாதையின் ஓமந்தை முதல் வவுனியா வரையான பகுதியில் பயணிக்கும் வாகனங்களின் வேகத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் ஒரு கட்டமாக தண்டவாளம் அமைக்கப் பயன்படுத்தப்படும் சிமெந்து சிலிப்பர்கட்டைகளை வீதியில் போட்டு வேகத் தடைகள் உருவாக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

சுமார் ஒரு கிலோமீற்றர் தூர இடைவெளிகளில் வீதியில் கரைகளையொட்டி சிலிப்பர் கட்டைகள் வைக்கப்பட்டுள்ளதாகவும்-

இதனால் அந்த இடங்களில் வாகனங்கள் வேகத்தை குறைக்க வேண்டிய நிலைமை உருவாக்கப்பட்டுள்ளதாகவும் -

அப்பாதையூடாகப் பயணம் மேற்கொண்டோர் தெரிவிக்கின்றனர்.

யாழ். கண்டி வீதியில் பயணம் மேற்கொள்ளும் வாகனங்களின் எண்ணிக்கையும் அவற்றின் வேகமும் அதிகரித்திருப்பதால் அடிக்கடி அந்த வீதியில் விபத்துக்கள் இடம்பெறுவதாகக் கூறப்படுவது குறிப்பிடத்தக்கது. (ஓ-86)

# இன்றநெற்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

கீழ் கொண்டுவந்தால் அந்தக் கணனிகளை வைத்து மிகப்பெரிய அளவில் டிஸ்ரிபியூட்டட்டினையில் ஒப்சேர்விஸ் (DDOS) தாக்குதலைத் தொடுக்கலாம் என்றும் -

அதன்மூலம் ரகசியமான - முக்கியமான - தகவல்களை ஏனையோரின் கணனிகளில் இருந்து திருடவோ, சேதப்படுத்தி அழிக்கவோ முடியும் என்றும் -

அந்த அறிக்கை கூறுகின்றது. SQL Snake, Code Red, Nimda போன்ற வைரஸ்கள் இதற்கான முன்னறிவித்தல்கள் என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தகவல் தொழில்நுட்பத்தில் பெரிதும் தங்கியுள்ள அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு இது பெரும் அச்சுறுத்தலாக மாறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ★


## A/L 2003 & 2004
## PHYSICS GROUP CLASSES
### By Mr.K.Sivalingam B.Sc.(Spl.)

மாணவர் விரும்பிய அலகுகளில் முழுமையான மீட்டலும், வினா - விடை பயிற்சியும் அளிக்கப்படும்.

தொடர்பு:-
109, அரசடி றோட், (பிறவுன் றோட் சந்தி அருகில்)
Phone - 2054
இணுவில் ஆஸ்பத்திரி முன் ஒழுங்கை, இணுவில் மேற்கு. (5942)


கத்தோலிக்க மாணவர் ஒன்றியம் - யாழ்.பல்கலைக்கழகம்

## பிரிவுபசார விழா அழைப்பு

*இடம்:* நல்லாயன் நடு நிலையம்
*காலம்:* நாளை (14.07.2002) ஞாயிறு காலை 9.00 மணி (திருப்பலி)

எமது கத்தோலிக்க இறுதி வருட அனைத்து மாணவர்களையும் இதனைத தனிப்பட்ட அழைப்பாக ஏற்று விழாவில் கலந்துகொள்ளுமாறும், ஏனைய முதலாம், 2ஆம், 3ஆம் வருட மாணவர்களையும் வருகை தந்து சிறப்பிக்குமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

(5935) **கத்தோலிக்க மாணவர் ஒன்றியம், நல்லாயன் நடு நிலையம்.**

## அவசர கலந்துரையாடல்

தேசிய கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையினூடாக மின்சார சபையில் பயிற்சி பெற்ற அனைத்துப் பயிலுநர்களுக்குமான கலந்துரையாடல் நாளை (14-07-2002) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் சுன்னாகம் சிவன் சனசமூக நிலைய முன்றிலில் நடைபெறவுள்ளது. எனவே சகலரும் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

(5927) *தலைவர்* பா. நகுலேஸ்வரன்

# முதலாவது வருட நினைவஞ்சலி

மண்மகிழ 11 . 05 . 1959



கண்நெகிழ 14 . 07 . 2001

**அமரர் ஸ்ரீ வள்ளிநாயகி கந்தையா (பாமா/வள்ளி)**

(எழுதுவினைஞர், யாழ். மாவட்ட அரச செயலக ஓய்வூதியக் கிளை)

இன்று ஒரு வருட நிறைவில் உங்களை நினைவு கூருகின்றோம்

*சிவன் கோயிலடி, புத்தூர் மேற்கு, புத்தூர்.* (C/22922) தகவல்: குடும்பத்தினர்.


ரூபா 5,00,000

மாதச் சம்பளமாகப் பிரதேசத்தில் உழைக்கும் திறமையும் தகுதியும் பெற A/L படித்தவர்களாயிருக்க வேண்டும். மூன்று வருடப் பயிற்சி, 24 சோதனைகள், செலவு 41/2 லட்சம்.

தொடர்பு:

திருஞானாஸ் கட்டடம் (மத்திய பேருந்து நிலைய முன்பாக) 141, பின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.


# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 04 - 12 - 1927



மறைவு 13 - 06 - 2002

## அமரர் நாகர் சின்னராசா

அன்பு என்னும் நீர் ஊற்றி எம்மை
அரவணைத்த எம் தந்தையே!
மாதம் ஒன்று சென்றாலும்
ஆறாதையா உங்கள் பிரிவு!
எம்மைத் துன்பம் அணுகாதவாறு
காத்து வளர்த்தீர்களே!
உங்கள் அன்பு முகம் காணத் தவிக்கின்றோம்.
காலங்கள் மாறினாலும் உங்கள் நினைவுகள் மாறாது!

*பாரதிபுலம், கலாசாலை றோட், திருநெல்வேலி வடக்கு.* (C/22915)

*என்றும் உங்கள் பிரிவால் வாடும்:* குடும்பத்தினர்.

# திறப்பு விழா அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் சித்திரபானு வருஷம் ஆனித் திங்கள் 29ஆம் நாள் இன்று (13.07.2002) சனிக்கிழமை காலை 10.31மணி தொடக்கம் 11.28மணிவரை வரும் கன்னிலக்கின சுபவேளையில்

எம்மால் புதிதாகத் தொடங்கவுள்ள

## ஹரன் கொமினிக்கேசன்

தொடக்க விழா நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது. அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சமேதராய் வருகைதந்து சேவைதனை சிறப்புற தொடர ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

*உள்நாடு:* 021 63212, *வெளிநாடு:* 0094 2163212

திறந்து வைப்பவர்:


திரு.ந.இராஜகோபால் *(உதவி முகாமையாளர், இலங்கை வங்கி, நெல்லியடி.)*

*அல்வாய் கிழக்கு, அத்தாம், அல்வாய்* (5940)

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்
திரு. திருமதி சி.பிரபாகரன்

# 41ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 19 - 07 - 1987



உதிர்வு 03 - 06 - 2002

## செல்வன் மகேஸ்வரதாசன் சுதர்சன்

*அழகுச் சிரிப்பெங்கே? அன்பான பேச்செங்கே?*
*ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

இன்று (13.07.2002) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

*உங்கள் பிரிவால் துயருறும்:* அம்மா, அப்பா, அண்ணா, தம்பி, தங்கை, இரத்தினம் குடும்பத்தினர், பரராசன் குடும்பத்தினர், நண்பர்கள்.

தகவல்: இரத்தினம் (தோரியே).

நிரந்தர முகவரி: *வீணியவரை, மாவிட்டபுரம்.*
தற்காலிக முகவரி: *1/1 றக்கா லேன், சுன்னாகம்.* (5932)

# சிறுவர்களுக்காகச் செயற்படுவோம்!

சிறுவர்களது உரிமைகள் பற்றி நாம் சிந்திக்கின்ற போது நாம் அவர்களது பொறுப்புகள் குறித்தும் கவலைப்படுகின்றோம். அதேவேளை நாமே "சிறுவர் துஷ்பிரயோகம்" முதலான பொறுப்பற்ற நடவடிக்கைகளில் செயல்களில் ஈடுபடுகின்றோம். இத்தகைய முரண்பாட்டுச் சிக்கல்களிலிருந்து விடுபடுவதனூடாக நாம் எமது நாளாந்த செயற்பாடுகளில் பிள்ளைகளை மையமாகக் கொண்டு அவர்களது உயரிய நலன்களை முதன்மையானதாகக் கொண்டு செயற்படுவோம்.

ஜெ.தற்பரன்.



உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு
அறை எண் - 30
யாழ். போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.
- சிறுவர் பாதுகாப்பு (ஐ.சி) அனுசரணையுடன்
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவினரின் வெளியீடு. (5930)

உதயன்

## இது ஓர் அக்னிப் பரீட்சை

கடந்த சில நாள்களாகப் பரபரப்புடன் எதிர்பார்க்கப்பட்டபடி ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கைது செய்யப்பட்டிருக்கின்றார். எதிர்வரும் ஓகஸ்ட் 7 ஆம் திகதி வரை அவரைத் தடுப்புக்காவலில் வைக்கும்படி உத்தரவிடப்பட்டிருக்கிறது. இதையடுத்து வேலூர் சிறையில் அவர் அடைக்கப்பட்டிருக்கின்றார்.

இந்தியாவில் தடைசெய்யப்பட்டிருக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு ஆதரவு தெரிவித்ததாகக் குறிப்பிட்டே பயங்கரவாதத் தடுப்பு (பொடா) சட்டத்தின் கீழ் அவர் கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

இலங்கையில் தமது உரிமைகளுக்காகப் போராடும் தனது இன உடன்பிறப்புகளுக்கு தார்மீக ஆதரவு தெரிவித்து பொதுக்கூட்டத்தில் உரையாற்றியதே வைகோ செய்த தவறு என்று பிரஸ்தாபிக்கப்படுகின்றது.

அரசியல் பழிவாங்கல் மேற்கொள்ளும் தமது அராஜக ஆட்சியின் கொடூரப் போக்கை தனது அரசியல் எதிரியான வைகோ மீது திருப்பி விட்டிருக்கின்றார் தமிழக முதல்வர் ஜெயலலிதா என்ற பொதுவான அபிப்பிராயம் பரவலாக எழுந்துள்ளது.

இந்தியாவில் பயங்கரவாத அமைப்புகளுக்கு எதிராக நடைமுறையில் இருந்த 'தடா' சட்டத்துக்குப் பதிலாக 'பொடா' சட்டம் கடந்த ஆண்டில் கொண்டு வரப்பட்டது.

மாநிலங்களில் ஆட்சியிலிருக்கும் அரசுகள் இந்தச் சட்டத்தை தவறாகத் தமது கையில் எடுத்துக் கொண்டு தங்கள் அரசியல் எதிரிகளைப் பழிவாங்க இதனைப் பிரயோகிக்கலாம் என்ற அபாயமணி, இந்தச் சட்டம் அப்போது கொண்டுவரப்பட்டபோதே எழுப்பப்பட்டது.

ஆனால், 'அப்படியெல்லாம் நடக்காது; அப்படி நடந்தால் பாதிக்கப்படுபவர் சரியான பதில் நடவடிக்கை எடுக்க இந்தச் சட்டத்திலேயே மாற்று ஏற்பாடுகள் உள்ளன' - என்று இச்சட்டத்தைக் கொண்டு வருவதற்குப் பொறுப்பாக இருந்த - தற்போது மத்தியில் ஆட்சியில் இருக்கின்ற - பாரதீய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயக முன்னணி அரசு கூறியிருந்தது. அதன் பிரதமர் வாஜ்பாயும் அப்படித்தான் கூறியிருந்தார்.

இப்போது அவர்களது கூட்டணி அரசில் முக்கிய பங்கு வகிக்கும் ஒரு கட்சியின் தலைவர், அரசியல் பழிவாங்கும் நோக்கம் கொண்ட ஒரு மாநில அரசினால் இதே சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

பிரதமரும், அவரது அணியினரும் கூறியபடி, 'பொடா' சட்டத்தின் கீழ் தவறாக இம்சைப்படுத்துபவர்களைப் பாதுகாக்க அந்தச் சட்டத்தில் உள்ள ஏற்பாடுகள் என்ன பயனைத் தரப்போகின்றன என்பது இனித்தான் தெரியவரும்.

ஆனால், 'பொடா' சட்டத்தை மாநில அரசுகள் தவறாகப் பயன்படுத்தமாட்டா என்ற பிரதமர் வாஜ்பாயின் நம்பிக்கை பொய்த்துப் போய்விட்டது என்று அவரது ஆளும்கட்சிக் கூட்டணியில் இடம்பெறும் முக்கிய கட்சியான தி.மு.க.வின் தலைவர் மு.கருணாநிதி அறிவித்திருக்கின்றார்.

தடைசெய்யப்பட்ட இயக்கத்துக்கு உதவியாகச் செயற்படும் ஒருவரை 'பொடா' சட்டத்தின் கீழ் கைது செய்வதற்கான அதிகாரம் மாநில அரசின் பொலீஸாருக்கு உள்ளது. அத்தகைய கைதுக்கு நீதிமன்ற 'வாரண்ட்' உத்தரவு அவசியமானதல்ல.

ஆனால், கடந்த வருடம், முன்னாள் தமிழக முதல்வர் கருணாநிதியையும் அவரது சகாக்களையும் நள்ளிரவில் தன்பாட்டில் கைது செய்து, அதனால் 'வாங்கிக் கட்டிக் கொண்ட' ஜெயலலிதாவின் மாநில அரசு, இம்முறை வைகோவைக் கைது செய்ய முன்னர் அதற்கு நீதிமன்றத் துணையை நாடியது. நீதிமன்றம் கைதுக்கான 'வாரண்ட்' உத்தரவைப் பிறப்பித்தது.

- இவ்வாறு திருமங்கலம் நீதிமன்றம் வழங்கிய உத்தரவும் இப்போது சர்ச்சைக்குள்ளாகியிருக்கின்றது.

'வாரண்ட்' உத்தரவு இல்லாமலேயே கைது செய்யப்படக் கூடிய விவகாரத்துக்கு, அந்த உத்தரவைக் கோரி மாநிலப் பொலீஸார் வந்தபோதே நீதிமன்றம் எச்சரிக்கை அடைந்திருக்க வேண்டும் என்கின்றனர் சட்ட அறிஞர்கள்.

'ஏதேனும் ஒரு தவறுக்காக ஒருவரைக் கைது செய்யலாம் என்று சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதால் அவரைக் கட்டாயம் கைது செய்யவேண்டும் என்று கருதுவது தப்பு. அவ்வாறு கைது செய்ய வேண்டிய தேவை - அவசியம் - உண்டா, குற்றத்தின் தாக்கம், கைது செய்யாமலேயே உரிய சட்ட நடவடிக்கையைத் தவறேதுமின்றி மேற்கொள்ள வாய்ப்பு உள்ளதா, சம்பந்தப்பட்டோர் தலைமறைவாக இடமுண்டா? - என்பன குறித்தெல்லாம் ஆராய்ந்து பார்த்த பின்னே கைது குறித்து முடிவு செய்யப்பட வேண்டும்" - என்று இந்திய உச்ச நீதிமன்றம் வழங்கிய ஓர் ஆணையை சட்ட அறிஞர்கள் இப்போது சுட்டிக்காட்டுகின்றனர்.

வைகோ கைது ஓர் அரசியல் விவகாரம் மட்டுமல்ல 'பொடா' சட்டத்துக்கும் ஓர் அக்னிப் பரீட்சையாகப் போகின்றது என்பது மட்டும் இப்போதைக்கு நிச்சயம்.

# அரச நிறுவனப் பணிகளுக்கு ஆள்சேர்ப்பு இடைநிறுத்தம்!

ஊர்காவற்றுறை,ஜூலை13

அரச நிறுவனங்களில் உள்ள பதவிவெற்றிடங்களுக்கு புதிதாக ஆள்சேர்ப்பு செய்யும் நடவடிக்கைகளை மறுஅறிவித்தல் விடுக்கப்படும்வரை உடனடியாக நிறுத்திவைக்கும்படி பொதுத் திறைசேரியினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை வடக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இச்சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளூராட்சி அதிகாரசபைகள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டமுறைச் சபைகள், அரச உடைமையாக்கப்பட்ட நிறுவனங்கள் ஆகியவற்றை உள்ளடக்கி அரசசேவையிலும் மாகாண அரசாங்க சேவையிலுமுள்ள பதவி நிலை உத்தியோகத்தர், உபநிலை உத்தியோகத்தர் மற்றும் சிறுபணியாளர் தரங்களுக்கு ஆள்சேர்ப்பு நடவடிக்கை கள் நிறுத்திவைக்கப்படும்.

நிரந்தர பதவிகளாகவிருந்தாலும் சரி அல்லது அமைய அல்லது பதிற்கடமை அல்லது ஒப்பந்த அடிப்படை அல்லது எந்தவித அடிப்படையிலானவர்களாகவிருந்தாலும் சரி மறு அறிவித்தல் விடுக்கப்படும் வரை உடனடியாக அவற்றுக்கான ஆள்சேர்ப்பு பணி நிறுத்தப்படும்.

எனினும் அவசரமானவைகளும் அத்தியாவசியமானவைகளுமான பதவிகள் உருவாக்கப்படுதலும், சேவையின் அத்தியாவசிய தன்மைகளைப் பொறுத்து முக்கியமான வெற்றிடங்களை நிரப்புவதற்கு திறைசேரி செயலாளரின் ஒப்புதலுடன் நடவடிக்கை மேற்கொள்ளமுடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, பல்வேறு சேவைத்தரங்களிலுள்ள மிகை பதவிகளைக் கண்டறிந்து அவர்களிடையே வேலையை மீள் ஒதுக்கீடு செய்யுமாறும் கோரப்பட்டுள்ளது. (ஒ-16)

## விற்பனை நிலையத்திலிருந்து அமைச்சகத்தின் கார் மீட்பு!

கொழும்பு,ஜூலை13

விவசாய அமைச்சகத்துக்கு சொந்தமான கார் ஒன்று கார் விற்பனை நிலையத்திலிருந்து புலனாய்வு அதிகாரிகளால் மீட்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

கடந்த பொ.ஐ.மு.அரசின் ஆட்சிக்காலத்தின்போது அரச வாகனங்கள் விதிகளுக்குப் புறம்பான முறையில் பயன்படுத்தப்பட்டமை சம்பந்தமாக ஆராய்ந்த புலனாய்வு அதிகாரிகள் அது தொடர்பாக முன்னாள் விவசாயத்துறை உதவி அமைச்சரின் தனிப்பட்ட உதவியாளர்கள் இருவரைக் கைதுசெய்துள்ளனர்.

விவசாயத்துறை அமைச்சுக்குச் சொந்தமான வாகனம் ஒன்று களனியில் கார் விற்பனை நிலையம் ஒன்றிலிருந்ததை புலனாய்வுத் துறையினர் கண்டுபிடித்து மீட்டுள்ளனர். இதனையடுத்தே இருவர் கைதுசெய்யப்பட்டனர்.

இந்த அரச வாகனம் குறிப்பிட்ட அந்தக் கார் விற்பனை நிலையத்திற்கு 6 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவுக்கு விற்கப்பட்டுள்ளதாகப் புலனாய்வுத் துறையினரின் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து அமைச்சரின் தனிப்பட்ட உதவியாளர் ஒருவர் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு மேற்படி விற்பனை தொடர்பான கொடுப்பனவில் ஒரு பகுதியான 2 லட்சம் ரூபாவை அவரிடமிருந்து மீட்டதாகக் கூறப்படுகிறது.

கடந்த பொதுத்தேர்தல் காலத்தின்போது தவறான முறையில் பாவிக்கப்பட்டுப் பின்னர் காணாமற்போன வாகனங்கள் 15 யும் தாங்கள் கண்டுபிடித்துள்ளதாக புலனாய்வு பிரிவு சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கண்டுபிடிக்கப்பட்ட அந்த வாகனங்களில் அனேகமானவை படுமோசமாகப் பழுதடைந்த நிலையில் உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-ரி)

### எழுதுமட்டுவாழ் பிரதேசத்தில்

## மீள்குடியமர அனுமதி கோரி போராட மக்கள் முஸ்தீபு!

தென்மராட்சி,ஜூலை13

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு நான்கு மாதங்கள் பூர்த்தியடைந்த நிலையிலும் இதுவரை தமது வீடுகளைப் பார்வையிட அனுமதிக்கப்படாததைக் கண்டித்து -

எழுதுமட்டுவாழ் வடக்கு, தெற்கு, கரம்பகம், ஒட்டுவெளி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் விரைவில் வீதி மறியல் போராட்டம் ஒன்றில் இறங்க முஸ்தீபு செய்துவருவதாகக் கூறப்படுகிறது.

எழுதுமட்டுவாழ் ஆசைப்பிள்ளை ஏற்றம் தொடக்கம் எழுதுமட்டுவாழ் சந்திவரை படையினரால் அதி உச்ச பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. தமது வீடுகளை வீதியில் நின்று கூடப் பார்க்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக மேற்படி பகுதியைச் சேர்ந்த மக்கள் தெரிவித்தனர்.

தமது வீடுகளைப் பார்வையிட அனுமதிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பலமுறை தாம் கோரியதாகவும் -

ஆயினும் இதுவரை உரியபதில் கிடைக்காததால் விரைவில் வீதிமறியல் போராட்டத்தில் இறங்கவுள்ளதாகவும் - அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (ஒ-117)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் குடி தண்ணீர் பற்றாக்குறை

தென்மராட்சி,ஜூலை13

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலைக்கு வரும் வெளிநோயாளர்கள் குடிதண்ணீர் பிரச்சினையை எதிர்நோக்குவதாகக் கூறப்படுகிறது.

தினமும் சுமார் 150க்கு மேற்பட்ட நோயாளர்கள் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுகின்றனர். இந்த நிலையில் அன்றாடத் தேவைக்கு போதிய அளவு குடிதண்ணீர் இல்லாததால் சுமார் அரை மைலுக்கு அப்பால் உள்ள சாவகச்சேரி நகர்ப் பகுதிக் கடைகளுக்குச் செல்லவேண்டியுள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது ஆஸ்பத்திரி இயங்கும் கட்டடத்திற்கு அருகில் முன்னர் அமைக்கப்பட்டிருந்த குழாய்க் கிணறு தற்போது தூர்ந்துபோய்விட்டது. இதனால் ஆஸ்பத்திரியிலிருந்து 200 மீற்றர் தூரத்திலுள்ள கிணற்றிலிருந்தே வாளிகளில் குடிதண்ணீர் எடுத்து வரப்படுகிறது. இந்தக் குடிதண்ணீர் நோயாளர்களின் தேவைக்குப் போதாமல் உள்ளதாகக் கூறப்படுகிறது.

இவ்வைத்தியசாலைக்கு இன்னமும் மின்சார வசதி செய்து கொடுக்காததாலும் -

ஆஸ்பத்திரி வளவில் சேதமடைந்துள்ள தண்ணீர்த் தொட்டி திருத்தப்படாததாலும் - குழாய் மூலம் குடிதண்ணீர் வழங்கப்பட முடியாமல் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

**நாளை**

ஆனி 30
ஞாயிற்றுக்கிழமை
(14.07.2002)
திதி : சதுர்த்தி
முற்பகல் 9.23 வரை.
நட்சத்திரம்: பூரம்
பின் இரவு 4.28 வரை.
ஸ்கந்த பஞ்சமி
சுபநேரம் : 9.10 - 10.30
ராகுகாலம் : 4.30 - 6.00
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

உடல் வசப்படாவிட்டால் வாழ்க்கை துன்பமாகும்.

## புலிகளின் பிரதிநிதிகளுக்கு நியமனக்கடிதம் தரவில்லை

### கண்காணிப்புக்குழுத் தலைவரிடம் முறைப்பாடு

கொழும்பு,ஜூலை13

இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் விடுதலைப் புலி பிரதிநிதிகளுக்கு நியமனக் கடிதம் வழங்குவதில் தொடர்ந்தும் இழுபறிநிலை நிலவுவதாகக் கூறப்படுகிறது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ரொண்ட் புருஹேராவிடம் கடந்த புதன்கிழமை கொக்கட்டிச்சோலை விடுதலைப் புலிகளின் அரசியல் அலுவலகத்தில் புலிகளின் பிரதிநிதிகளான ஆர்.சண்முகநாதன், ஏ.சௌந்தரராஜா ஆகியோர் சந்தித்து தமது பிரச்சினைகளை எடுத்துக்கூறினர்.

அவர்களுக்கான கொடுப்பனவு பற்றி பேசப்பட்டபோது நோர்வே அரசுடன் பேசி இதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகக் கண்காணிப்புக் குழுத் தலைவர் உறுதியளித்தார்.

"நியமனக் கடிதம் இல்லாமல் கடமை லீவு பெறமுடியாமலுள்ளது. கடந்த மே 14ஆம் திகதி தங்களுக்கும், பிரதமர் ரணிலுக்கும் நாம் எழுதிய கடிதத்திற்குப் பதில் இல்லை. இனிமேலாவது நியமனக் கடிதத்தை வழங்கி எமது சுமையைக் குறையுங்கள் என்று வேண்டுகோள் விடுத்தார் பிரதிநிதி சண்முகநாதன்.

அம்பாறை மாவட்ட யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழு அறிக்கையை தலைவர் ஹொப்டேயிடம் பிரதிநிதிகள் கையளித்தனர். (ஒ)

## மாவை ஆலய உற்சவத்துக்கு விசேட பஸ் சேவைகள்

யாழ்ப்பாணம்,ஜூலை13

வரலாற்றுப் பிரசித்திபெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த காம்யோற்சவம் நாளைமறுதினம் திங்கட்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 25தினங்கள் நடைபெறவுள்ளது.

உற்சவதினங்களில் தினமும் ஸ்நபனாபிஷேகம், அலங்கார பூசைகள், ஆராதனைகள், பிரார்த்தனைகள், திருமுறை ஓதல், மகேஸ்வர பூசை என்பன இடம்பெறும்.

எதிர்வரும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை திருநடனம், அடுத்த மாதம் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆடிக்கிருத்திகை விழாவும், 7ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும், 8ஆம் திகதி வியாழக்கிழமை ஆடிஅமாவாசை தினத்தன்று தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

உற்சவ நிகழ்வுகள் தினமும் காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 2.45 மணிவரை இடம்பெறும்.

உற்சவங்களில் கலந்துகொள்ளச் செல்லும் அடியவர்களின் நன்மைகருதி வடபிராந்திய போக்குவரத்துச் சபையினர் விசேட பஸ்சேவைகளை நடத்தவுள்ளனர் என மாவை ஆதீனகர்த்தா மஹாராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாதக்குருக்கள் அறிவித்துள்ளார். (எ)

## மணற்திட்டில் தவித்த அகதிகளை மீட்டது இந்தியக் கடற்படை

சென்னை,ஜூலை13

இலங்கைக் கடற்படையினரால் நடுக்கடலில் மணற்திட்டு ஒன்றில் தவிக்கவிடப்பட்டதாகக் கூறப்படும் யாழ் அகதிகள் அறுவரை இந்தியக் கரையோரக் காவல்படையினர் மீட்டுக் கரைசேர்த்திருக்கின்றார்கள்.

இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை இரவு இடம்பெற்றிருப்பதாகத் தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது:-

யாழ்ப்பாணம், காங்கேசன்துறையைச் சேர்ந்த ஆறு அகதிகள் ஒரு படகில் இராமேஸ்வரம் நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். அவர்களை இலங்கைக் கடற்படையினர் வழிமறித்தனர். இந்தியக் கடல்எல்லைக்குள் கூட்டிச்சென்று தனுஷ்கோடிக்கு அருகேயுள்ள இரண்டாம் திட்டை என்ற மணற்திட்டில வைத்து விசாரித்தனர்.

பின்னர் அகதிகளை அங்கேயே தவிக்கவிட்டுவிட்டு அவர்களது படகை எடுத்துக்கொண்டு இலங்கைக் கடற்படையினர் சென்று விட்டனர்.

கடந்த புதன்கிழமை இரவு முழுவதும் நடுக்கடலில் குளிர் காற்றுக்கு மத்தியில் உணவின்றித் தவித்த அகதிகள் மயக்கமடைந்தனர்.

அப்பகுதியால் ரோந்து சென்ற இந்தியக் கரையோரக் காவல் படையினர் அகதிகளை மீட்டுக் கரைக்குக் கொண்டு சென்றனர்.

அகதிகள் அறுவரில் மூவர் ஆண்கள்; இருவர் பெண்கள்; ஒரு குழந்தை.

இவர்களுக்கு உணவு, மருத்துவ வசதிகள் அளிக்கப்பட்டு, மண்டபம் அகதிகள் முகாமில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். (ம)

## மூன்றாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

HAPPY BIRTHDAY



### கயந்திகா Kajanthika

13.07.2002

கோண்டாவில் கிழக்கு, கோண்டாவிலைச் சேர்ந்த
**திரு.திருமதி சிறிகரன் - ரதிவதனா**
தம்பதியினரின் செல்வப் புதல்வி

**சி.கயந்திகா**

இன்று தமது இல்லத்தில் மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, அக்கா, அண்ணா, அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பா, சித்தி, மாமா, மாமி, பெரியப்பா, பெரியம்மா, மச்சான், மச்சாள் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் என்றும் இறையாசியுடன் சகல நலன்களும் பெற்றுப் பல்கலையும் கற்று பல்லாண்டுகாலம் நலமாக வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (5879) அப்பா. அம்மா.

---

## 31ஆவது நாள் நினைவஞ்சலி

எழுதுமட்டுவாழ் உபதபாலதிபர்
**சிவானந்தம்-தவமணிதேவி** தம்பதியரின் அன்பு மகனான

**சி.மதிமுகன்**

அவர்கள் 13-06-2002 வியாழக்கிழமை இறைபதமெய்தினார். அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தபாலகம்,
காங்கேசன்துறை.

உபதபால் அதிபர்கள் தொழிற்சங்கம்,
யாழ்.கிளை. (5838)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது நண்பன்
**திரு.தெ.பாலதாஸ்** அவர்களின்
அன்புத் தந்தையாராகிய



**ந.தெட்சணாமூர்த்தி**

அவர்கள் காலமானதையிட்டு துயருறும் அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கல்லடி இளைஞர்கள்,
கலாசாலை வீதி, திருநெல்வேலி.

(5908)

---

## 31ஆவது நாள் அந்திமக் கிரியை அழைப்பு

13-07-2002 சனிக்கிழமை

**நடராசா ஜமுனராதை**

கிழவிதோட்டம், கரவெட்டி மத்தி

காலஞ்சென்ற எனது பாசமகள் ஜமுனராதையின் மேற்படி நிகழ்வின் இன்றைய காலைவேளைக் கிரியை நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்து திருப்தியளிக்குமாறு வேண்டுகின்றேன்.

★ தனித்தனியே அழைப்புவிடுக்க முடியாமையினால் இந்த அழைப்பையே உரிய அழைப்பாக ஏற்று பங்கேற்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

*கிழவிதோட்டம்,
கரவெட்டி மத்தி,
கரவெட்டி.*


வை.நடராசா
(ஓய்வுபெற்ற கிளை முகாமையாளர்,
கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ. சங்கம்)

(5669)

---

## 2ஆம் ஆண்டு நீங்காத நினைவுகளில்

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 23 - 07 - 1928 | 05 - 07 - 2000 |



**அமரர் சுப்பிரமணியம் அரியரத்தினம்**
(ஓய்வுபெற்ற விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர் C.L.D.O.)

மறைந்தும் மறையாத தங்கள்
நினைவிலே வாழ்கின்றோம்.

*உபதபாற்கந்தோர் வளவு,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.*

*மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.*

(5814)

---

## புதிய கட்டட திறப்புவிழா

சாவகச்சேரி,ஜுலை13

சுமார் 30லட்சம் ரூபா செலவில் சாவகச்சேரி பிரதேச சபையினால் கொடிகாமம் சந்தை வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட கட்டடத் தொகுதியின் திறப்புவிழா நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ்பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரீ.வீ.கிருஷ்ணசாமியால் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வு சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் கு.ந.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. (ஒ-31)

## மீளக்குடியமர்வோர் எண்ணிக்கை அதிகரிப்பு

தென்மராட்சி,ஜுலை13

பளைப் பிரதேசத்தில் அல்லிப்பளை, புலோப்பளை கிழக்கு, புலோப்பளை மேற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் புதைக்கப்பட்டிருந்த மிதிவெடிகள் அகற்றப்பட்டதையடுத்து மேற்படி பகுதிகளில் மீளக் குடியமரும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி பகுதிகளிலிருந்து 25ஆயிரத்துக்கும் அதிகமான மிதிவெடிகள் அண்மையில் அகற்றப்பட்டமை தெரிந்ததே. (எ-117)

## சமூகக்கல்வி வலய மட்ட போட்டிகள்

தென்மராட்சி,ஜுலை13

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கான சமூகக் கல்விப் பாட வலய மட்டப் போட்டிகள் எதிர்வரும் 20ஆம் திகதி காலை 9.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (எ-117)

## 'பிக்கப்' கிடைத்தது

தென்மராட்சி,ஜுலை13

யாழ்.மாவட்ட மலேரியா ஒழிப்புப் பிரிவுக்கு புதிய 'பிக்கப்' வாகனம் ஒன்று சுகாதாரத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி 'பிக்கப்' வாகனம் கடந்த புதனன்று யாழ்-கண்டி வீதியூடாக யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டது என மலேரியா தடுப்புப் பிரிவு வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-117)

## அதிபர் நியமனம்

தென்மராட்சி,ஜுலை13

உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தின் புதிய அதிபராக மட்டுவில் கமலாசனி வித்தியாலய அதிபர் செ.சுப்பிரமணியம் நாளைமறுதினம் திங்கட்கிழமை முதல் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

வித்தியாலய அதிபர் ஐ.வரதராசா நாளை முதல் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்வதையடுத்து புதிய அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, வெற்றிடமாகவுள்ள மட்டுவில் கமலாசனி வித்தியாலய அதிபர் பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து தென்மராட்சி கல்வி வலய அலுவலகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (எ-117)

---

சிவமயம்

## காரைநகர் சிவன்கோயில்
## ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானம்
## ஆனி உத்தர விஞ்ஞாபனம்

நிகழும் சித்திரபானு வருஷம் ஆனித்திங்கள் 30ஆம் திகதி 14.07.2002 ஞாயிற்றுக்கிழமை விஷேடபூசை, சமய நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து அதிகாலை 3 மணிக்கு **நடேசர் அபிஷேகமும்** மறுநாள் பகல் விஷேட பூசையும், திருவாசகம் முற்றோதலும், மாலை 3 மணிக்கு சிவகாமி சுந்தரி சமேத நடேசப் பெருமானுக்கு வசந்தமண்டபப் பூசையும், விஷேட அலங்காரங்களுடன் வீதி உலாவரும் காட்சியும் இடம்பெறும்.

***குறிப்பு:*** **14ஆம் திகதி மாலை 4.45, 5.15, 5.30 ஆகிய நேரங்களில் யாழ்நகரில் இருந்து புறப்படும் பஸ்கள் ஆலயத்திற்கும் 15ஆம் திகதி காலை 7.00 மணிக்கு ஆலயத்திருந்தும் பகல் நேர அனைத்து பஸ் சேவைகளும் ஆலயம் வரை நடைபெறும்.**

*காரைநகர்
சிவன்கோயில்.*

(C/22909)

ஆ.அம்பலவிமுருகன்,
மு.சுந்தரலிங்கம்
ஆதீன கர்த்தாக்கள்.

---

உ

புதிய இடத்தில்,
புதிய நிர்வாகத்தில்

## சீன் செனரர்

பலாலி வீதி, திருநெல்வேலி.

(முன்னைய D.C.S. ஒழுங்கையருகில்)

**தரம் 3 முதல் A/L வரை.**

V.N.பத்மநாதன்
நிர்வாகி.

(5901)

---

புதிய

## போரோ சொப்ட்




மிருதுவான, தூய்மையான, அழகிய சருமத்திற்கு கற்றாளைச்சாறு,
கொகும்பட்டர், கிளிசரின் அடங்கிய வாசனை சோப்.
சகல விதமான சருமங்களுக்கும் ஏற்ப சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது.

ஏக விநியோகஸ்தர்:-
JEGHAN PHARMACY.
NO.462/B,HOSPITAL ROAD,
JAFFNA. TEL.021-2194,3191

சந்தைப்படுத்துவோர்
PHARMCO
MARKETING SERVICES (PVT) LTD.

---

## சேவை நலன் பாராட்டு



**டாக்டர் செல்வி ந.கனகரத்தினம்**

(பணிப்பாளர், போதனா வைத்தியசாலை
யாழ்ப்பாணம்)

*போரால் நலிந்த இந்த மண்ணை
யாரும் திரும்பிப் பார்க்கா நாளில்
துணிந்து வைத்திய சாலை தன்னின்
பணிப்பா ளரெனப் பதவி ஏற்று
எத்தனை இழப்பும் இடப்பெயர்வுகளும்
அத்தனை துயரும் அழிவும் கடந்து
மருத்துவ சேவை மங்கிடா வண்ணம்
பெருந்தவஞ் செய்த பெண்மணி இன்று
ஓய்வுறு நாளில் வைத்திய ரெல்லாம்
வாயார வாழ்த்துகின்றோம் வாழி!*

- வைத்தியர்கள்,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

(5843)

# மன்னார், வன்னி பாடசாலைகளில் ஆசிரியர் நியமனம் பெற்றவர் விவரம்

யாழ்ப்பாணம்,ஜூலை13

மன்னார், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு, வவுனியா மாவட்ட பாடசாலைகளில் ஆசிரிய நியமனம் பெற்றுள்ள யாழ் மாவட்ட பட்டதாரிகளின் விவரம் வருமாறு:-

*மன்னார் மாவட்ட பாடசாலைகளில் நியமனம் பெற்றோர் விவரம் வருமாறு:-*

அதிசயதுடன் ஞானேஸ்வரி (மானிப்பாய்), ஞானசேகரம் கலைச்செல்வி (கந்தர்மடம்), கோபாலகிருஷ்ணர் ரஞ்சனா (மந்திகை, புலோலி), குகராஜன் கேதினி (கந்தர்மடம்), மணிவண்ணன் சுமதி (திருநெல்வேலி கிழக்கு).

நடராசா கௌரீஸ்வரி (கோண்டாவில் கிழக்கு), நாகராசா வளர்மதி (பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்), நாகலிங்கம் இந்திரகுமார் (கரணவாய் தெற்கு), நவரத்தினம் இராகுலன் (பிரம்படி, கொக்குவில்), பற்குணராசா பங்கயவதனி (உடுவில் கிழக்கு).

பவிலுப்பிள்ளை மொறீன் (சுன்னாகம்), பிரபாகரன் விமலாதேவி (இணுவில் தெற்கு), இராசேஸ்வரன் கமலினி (கைதடி தெற்கு), சபாரத்தினம் சுகந்தி (தும்பளை), செல்லத்துரை பாதாம்பிகை (சுழிபுரம் கிழக்கு).

சண்முகராஜா பவானி (எழுதுமட்டுவாழ்), வரதராஜசர்மா மாலதி (கொழும்புத்துறை), இலக்கணகுமார் சுஜாதா (வட்டு கிழக்கு), சோமநாதன் சிவனேஸ்வரன் (பருத்தித்துறை), நாகராசா ராதிகா (நவாலி தெற்கு).

சச்சிதானந்தம் பிறேமராஜ் (குடத்தனை), தர்மலிங்கம் தயாநிதி (கொற்றாவத்தை), தர்மன் நகுலேந்திரன் (கரவெட்டி வடக்கு), பரநிருபசிங்கம் விமலநாதன் (இடைக்காடு), ரகுநாதன் பவானி (கொக்குவில் கிழக்கு).

திருவிளங்கம் சிவநேசன் (தும்பளை), குண்டுமணி மனோகரன் (நாவலடி, உடுப்பிட்டி), இரத்தினம் நந்தினி (கரவெட்டி கிழக்கு), சிவநேசன் சிவன்ஜன் (சங்கானை), செகராஜசேகரன் சத்தியசீலன் (துன்னாலை வடக்கு).

இவர்கள் தமது நியமனக் கடிதங்களை வவுனியா மேலதிக மாகாண கல்விப் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம் என வவுனியா மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆர். விசுவலிங்கம் அறிவித்துள்ளார்.

*வவுனியா வடக்கு பாடசாலைகளுக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளோர் விவரம் வருமாறு:-*

டரமசாமி ஆரணி, சிதம்பரப்பிள்ளை யோகமலர், விக்னேஸ்வரன் விமலாதேவி, சொலமன் மில்டன், கிருஸ்ணன் சுவ்வரி, தேவரர்சா ஜெனிஸ் மாலாசோதி, சின்னத்தம்பி சிவானந்தன், மாணிக்கவாசகம் சிவரஞ்சனி, காசிநாதன் தனலட்சுமி, வைரவன் பிரேம்குமார்.

அருளானந்தம் சுகந்தி, சாள்ஸ் றொபர்ட் உதயராணி, மனோகரன் அகிலா, வேலுப்பிள்ளை வசந்தகுமார், செல்வரத்தினம் மதிரூபன், சுப்பிரமணியம் செட்டியார் சிவஞானவதி, டொமினிக் ஜீட் நிர்மலன், முத்துக்குமாரசாமி ராகுலன், பரமசாமி சுபாஜினி, சின்னத்தம்பி மாதினி, சின்னமணி தேவகி.

*முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் கல்வி வலயப் பாடசாலைகளில் நியமனம் பெற்றுள்ளோர் விவரம் வருமாறு:-*

பாலசுந்தரம் துஷ்யந்தி, இராஜரட்ணம் குகநாதன், தனபாலசிங்கம் சுசந்தி, நடராசா கிருஸ்ணகுமார், நாகராசா கோணேஸ்வரன், இராசேந்திரன் ஜெயராணி, சண்முகராஜா சிவஸ்ரீ, சுப்பிரமணியம் சரவணபவன், வேலுப்பிள்ளை ஜெயகௌரி, தர்மசகாயம்பிள்ளை புனிதசீலி (மண்டைதீவு).

செல்லையா உருத்திராதேவி, (கரவெட்டி தெற்கு), வல்லிபுரம் உமையம்மா (துன்னாலை தெற்கு), லீனஸ் ரெட்ணம், மிரோன் லியோனிட்டா (யாழ்ப்பாணம்), வேலாயுதம் இராஜலட்சுமி (கோப்பாய் தெற்கு), பாக்கியநாதர் டொறீன் (பாங்சால் வீதி, யாழ்.), கிரேஷியம் லியோனா மியூரி (குருநகர்), கந்தசாமி முகுந்தன் (கொக்குவில்), அந்தோனிப்பிள்ளை டொறீன் (இராஜேந்திரா வீதி, யாழ்.) சுதாகரன் தர்ஷினி (வதிரி, நெல்லியடி).

சுகுமார் ரூபவதனி (வல்வெட்டி), தர்மலிங்கம் புஸ்பலைஷ்மி (புலோலி மத்தி), நடேசு சிவனேஸ்வரி (துன்னாலை மேற்கு), சண்முகலிங்கம் இந்துமதி (வதிரி), செல்வராசா செல்வாம்பிகை (பருத்தித்துறை), உமாபதி கேதாரகௌரி (ஏழாலை மேற்கு), சோமஸ்கந்தன் நிரஞ்சனா (வவுனியா), தங்கவடிவேல் குமுதினி (அத்தியடி, பருத்தித்துறை), சிவபாதம் தனுசியா (கோப்பாய் வடக்கு), சங்கரலிங்கம் உமாதேவி (அம்மன் வீதி, திருநெல்வேலி).

*முல்லைத்தீவு மாவட்டத்தில் நியமனம் பெற்றோர் விவரம்:-*

அன்ரன் யோகநாயகம் (நல்லூர்), வேலாயுதபிள்ளை இந்திராதேவி (நல்லூர்), ஜெயரட்ணம் தயாபரன் (மானிப்பாய்), மில்ரன் விக்னராணி (கொக்குவில் கிழக்கு), சீவரத்தினம் அன்பரசி (அல்வாய் தெற்கு), சிவசுப்பிரமணியம் அன்பரசி (கந்தர்மடம்), சிவானந்தன் கலாரஞ்சனி (கஸ்தூரியார் வீதி,யாழ்).

பொன்னம்பலம் வசந்தகௌரி (கொக்குவில் கிழக்கு), தபேந்திரம் மைத்திரேஜி (நல்லூர் வடக்கு), கந்தசாமி சிவச்செல்வி (இடைக்காடு), ஜஸ்ரீன் அன்ரோனிட்ரோ அன்ரோனீட்டா மிரகுலா (குருநகர்), வல்லிபுரநாதன் யோகராணி (வரணி).

கணபதிப்பிள்ளை சரோஜினி (வட்டு. வடக்கு), இராசரட்ணம் மகேஸ்வரி (நயினாதீவு), இராமச்சந்திரக் குருக்கள் இராஜேஸ்வரி (இளவாலை வடக்கு), நல்லையா மேரிநந்தினி (காரைநகர்), ஆறுமுகம் யோகராணி (வட்டு. மேற்கு).

சச்சிதானந்தம் சுதர்சினி (ஏழாலை தெற்கு), மூத்ததம்பி வைத்திலிங்கம் (கொக்குவில் கிழக்கு), கைலாசநாதன் அருள் ஞானமலர் (பழைய பூங்காவீதி, யாழ்.), பொன்னம்பலம் தவஈஸ்வரி (நீர்வேலி வடக்கு), நடேசு ஜெயவாணி (கரவெட்டி வடக்கு).

இரத்தினம் ரமணி (பருத்தித்துறை), இளங்கீரன் நிலாமதி (திருகோணமலை), சுதாகர் சல்பந்தினி (கொக்குவில்), பொன்னுத்தம்பி கேதீஸ்வரன் (பருத்தித்துறை), தியாகராசா இராஜரூபினி (வட்டு வடக்கு), மனோகரன் சிவகரன் (சிறுப்பிட்டி தெற்கு), ரதிதரன் சர்மிலா, பாலகாந்தன் பழனிரஞ்சன், இராசநாயகம் ரஜனி, தர்மராசா செந்தில்குமரன்.

தெய்வதயாபாலன் ஜமுனா, அம்பலவாணர் சோதிநாதன், கிறேஸ் தேவநயாளினி, குணரத்தினம் ரமணிதரன், மருஸலீன் பிரிம்றோஸ், பொன்னம்பலம் ரேணுகா, பொன்னம்பலம் தயானந்தன், இராஜசுந்தரம் ஜோய் இன்பராஜ், சங்கரப்பிள்ளை கெங்கா.

*கிளிநொச்சி மாவட்டத்தில் நியமனம் பெற்றோர் விவரம் வருமாறு:-*

சிவநேசன் சரோஜா (தும்பளை), நந்தகோபால் நளினி (தம்பசிட்டி), தர்மதாசன் குமரதாஸன் (வட்டு கிழக்கு), சச்சிதானந்தராசா சங்கரி (வட்டு கிழக்கு), நடராசா சிவனருள்செல்வம் (திருநெல்வேலி தெற்கு).

கந்தசாமி குமணன் (நீராவியடி), தர்மலிங்கம் சிவகுமாரன் (நவிண்டில்), கார்த்திகேசு மதிவதனா (அல்வாய் தெற்கு), முத்தையா சிவநேசன் (வண்ணார்பண்ணை), வேலும்மயிலும் பிரபாகரன் (புலோலி தெற்கு).

வல்லிபுரம் பிரபாகரன் (திருகோணமலை), தனபாலசிங்கம் செல்வமுரளி (கரணவாய் மத்தி), இலங்கநாதன் சுரேந்திரநாதன் (வண்ணார்பண்ணை), பூலோகசேகரம் நளாயினி (சுன்னாகம் கிழக்கு), கந்தையா பிறெட்லி ஜெனற் (சுண்டுக்குளி),

யோகேஸ்வரன் ராதிகா (ஐயனார் கோயிலடி, யாழ்.), சண்முகம் வசந்தி (புலோலி வடமேற்கு), கணேஸ் சிறீகரன் (கோப்பாய்), இரட்ணம் கலாராணி (கோண்டாவில் மேற்கு), சின்னத்தம்பி அற்புதமலர் (சண்டிலிப்பாய்).

தியாகராசா விக்னேஸ்வரன் (புலோலி தெற்கு), சேனகரத்தினம் சோணஸ்வரன் (திருநெல்வேலி கிழக்கு), அந்தோனிப்பிள்ளை கிளிபெற் (பாஷையூர்), நடராஜா குணதேவி (நீர்வேலி தெற்கு), சதாசிவம் சுதாஜினி (இணுவில் மேற்கு),

வாமதேவன் ஜெயலட்சுமி (கைதடி வடக்கு), யோகராஜா ராகினி (யாழ்ப்பாணம்), கனகரத்தினம் சுமதி (யாழ்ப்பாணம்), சின்னத்தம்பி புஸ்பராணி (சிறுப்பிட்டி மேற்கு), அழகையா அஜிவர்சி (யாழ்ப்பாணம்).

நாகரத்தினம் நகுலராணி (வேலணை மேற்கு), இராஜரட்ணம் தர்மசீலன் (ஏழாலை), சங்கரலிங்கம் காந்திமதி (சுன்னாகம்), மகேந்திரநாதன் நக்கீரன் (ஊரெழு), மாரிமுத்து சத்தியநாயகி (தெல்லிப்பழை),

அருளப்பன் றொபின்ஷன் ஜோசப் (ஊர்காவற்றுறை), தங்கவடிவேல் விஜயகுமார் (வல்வெட்டித்துறை), விஸ்வலிங்கம் பிரேமாவதி (பண்ணாகம்), அரசரெத்தினம் சுவேந்திரா (வேலணை மேற்கு), பாக்கியநாதன் ரேணுகாதேவி (வதிரி).

சுந்தரசெல்வன் அனுஷியா (ஆவரங்கால்), சைமன் மேரி பிரான்ஸிஸ்கா (ஆனைக்கோட்டை), ஜோர்ச் மேரி ஜீட் லுமினா (யாழ்ப்பாணம்), அரவிந்தன் சோமினி (வண்ணார்பண்ணை), மயில்வாகனம் ஜமுனா (கொக்குவில் மேற்கு).

குகானந்தா அருந்ததி, செல்லப்பாக்கியம் தில்லைநாயகி, கேதீஸ்வரன் நந்தினி, கோபாலன் விமலாவதி, மங்களேஸ்வரன் மீரா, தங்கவடிவேல் பங்கயற்செல்வி, பாலசுப்பிரமணியம் சுதாகரன், முருகேசு சிவப்பிரகாசம், சிவசோமஸ்குமார் சாந்தம், தவக்குமார் கீதா, பாலசுப்பிரமணியம் ஸ்ரீமோகனா. (எ-ரி-8)

## பிரிந்த மனைவியை காணச் சென்றவருக்கு உலக்கையடி!

யாழ்ப்பாணம்,ஜூலை13

நீண்டநாள்களாகப் பிரிந்திருந்த மனைவியைக் காணச்சென்றவர் உலக்கையடிக்கு இலக்காகிப் படுகாயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

சுன்னாகத்தில் கடந்த புதன் கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் யாழ்ப்பாணம் தட்டாதெருவைச் சேர்ந்த சுப்பையா கந்தசாமி (வயது 53) என்பவரே படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மனைவியுடன் ஏற்பட்ட தகராறால் அவரைப் பிரிந்து தட்டாதெருப் பகுதியில் தனியே வசித்து வந்த இவர், மனைவியைச் சந்திக்க எண்ணி, சுனாகத்தில் இருக்கும் தன் மனைவி வீட்டுக்குச் சென்றவேளை, அங்கு நின்ற மனைவியின் உறவினர் சிலர் தன்னை உலக்கையால் அடித்துத் தாக்கியதாகக் காயமடைந்தவரால் தெரிவிக்கப்பட்டது. (ஒ-15)

## வேம்பொடுகேணி சீ.சீ.த.க.

## பாடசாலை சுற்றாடலிலிருந்து வெடிக்காத 50 ஷெல்கள் மீட்பு!

தென்மராட்சி,ஜூலை13

பளை வேம்பொடுகேணி சீ.சீ. த.க. பாடசாலை வளவில் இருந்து வெடிக்காத நிலையில் 50க்கு மேற்பட்ட ஷெல்கள் வெண்புறா மிதிவெடி அகற்றும் பிரிவினரால் நேற்று முன்தினம் காலை மீட்கப்பட்டன.

பாடசாலையின் சுற்றாடல் மற்றும் விளையாட்டு மைதானம் ஆகிய இடங்களில் நூற்றுக்கணக்கான மிதிவெடிகள் இன்னும் உள்ளதாகவும் -

இப்பகுதியில் மக்கள் நடமாட்டத்தைத் தவிர்த்துக்கொள்ளுமாறும் -

மிதிவெடி அகற்றும் பிரிவின் பளைப் பிரிவுப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

பாடசாலை அயலில் எந்நேரமும் வெடிக்கும் அபாய நிலையில் ஷெல்கள் புதைந்துள்ளதால் அவற்றினை அகற்றும் பணிகள் தொடரும் எனவும் தெரிவிக்கப்பட்டது,

இதேவேளை -

கண்ணிவெடிகள் அகற்றும் பிரிவினருடன் சென்ற இப்பாடசாலை அதிபர் இ.இராமலிங்கம் அங்கு கட்டட இடிபாடுகளுக்குள் காணப்பட்ட நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களின் பிறப்புச் சான்றிதழ்களை மீட்டுள்ளார்.

இவற்றில் சில சான்றிதழ்கள் சேதமடைந்த நிலையில் காணப்படுவதாகவும் அவற்றினை மாணவர்களுக்கு விரைவில் வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ம-117)

## சுகாதார தொண்டருக்கு!

யாழ்ப்பாணம்,ஜூலை13

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சுகாதாரத் தொண்டர்களுக்கான அவசரக் கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-ரி)

## கொமர்ஷல் வங்கி யாழ்.கிளை 'கொம் நெற்'றில் இணைப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை13

கொமர்ஷல் வங்கியின் யாழ். கிளை ஏனைய கிளைகளுடன் 'கொம் நெற்' வலைப்பின்னலூடாக இணைக்கப்பட்டுள்ள நிகழ்வின் அங்குரார்ப்பண வைபவம் நேற்றுமுன்தினம் காலை 8.30 மணியளவில் வங்கியின் நவீன மயப்படுத்தப்பட்ட கட்டடத்தில் நடைபெற்றது.

யாழ்.கிளையின் முகாமையாளர் எஸ்.ரவீந்திரா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கொமர்ஷல் வங்கியின் முகாமையாளர் அமித்த குணரட்ண பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

இந்நிகழ்வின்போது யாழ்.கொமர்ஷல் வங்கியின் வாடிக்கையாளர் சிலருக்கு தன்னியக்கப் பணப் பரிமாற்ற அட்டை, முகாமையாளர் அமித்த குணரட்ணவினால் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், யாழ்.மறைக்கோட்ட குருமுதல்வர் ஜே.பி.சு.செல்வராஜா, நாகவிகாரையின் பிரதமகுரு, அங்கிலிக்கன் திருச்சபையின் யாழ்.குருமுதல்வர் எஸ்.பி.நேசகுமார், மௌலவி மொகைதீன் ஆகியோரும் யாழ்.அரச அதிபர் க.சண்முகநாதன், ஏனைய வங்கிகளின் முகாமையாளர்கள், யாழ்.பல்கலைக் கழகத்தின் கல்விசார் அதிகாரிகள், வாடிக்கையாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஒ-8)





யாழ்.கொமர்ஷல் வங்கியில் 'கொம் நெற்' இணைப்பு அங்குரார்ப்பண வைபவம் கடந்த வியாழனன்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட கொமர்ஷல் வங்கியின் முகாமையாளர் அமித்த குணரட்ண வாடிக்கையாளர் ஒருவருக்கு தன்னியக்க பணப்பரிமாற்ற அட்டையை வழங்குவதை முதலாவது படத்திலும் -

நிகழ்வில் கலந்துகொண்ட சமயத் தலைவர்களை இரண்டாவது படத்திலும் காணலாம்.

*(படங்கள்: தேவராஜன்)*

## புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் விடைகள்

நேற்றைய உதயனில் வெளியான புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் இல.2இற்கான விடைகள் வருமாறு:-

பகுதி I

1. (2) 2. (3) 3. (4)
4. (4) 5. (3) 6. (2)
7. (4) 8. (3) 9. (2)
10. (3) 11. (4) 12. (2)
13. (3) 14. (3) 15. (3)
16. (2) 17. (1) 18. (2)
19. (3) 20. (1) 21. (3)
22. (2) 23. (3) 24. (2)
25. (2) 26. (1) 27. (3)
28. (2) 29. (4) 30. (3)
31. (2) 32. (4) 33. (2)
34. (IV) 35. (II) 36. (V)
37. (I) 38. (III) 39. (2)
40. (4)

பகுதி II

1. தங்கத் தட்டுக்கு, தங்கை முகத்திற்கு
2. நிலவைத் தழுவுகின்றன.
3. அலைகள்
4. வதனம்
5. பொய்கை, தடாகம், வாவி.
6. ஆழி, சாகரம்
7. திரைகள்
8. I. அழுகை II.கவலை/துக்கம்
9. தங்கை
10. SKY 11. POND
12. CLOUDS 13. FACE
14. 750 மில்லிலீற்றர்
15. 350 சென்ரிமீற்றர்
16. 282 ரூபா
17. 32 ரூபா 50 சதம்
18. 4kg 500g
19. 95ரூபா 50சதம்
20. 24 சதுரங்கள்
21. 9 மேசைக்கரண்டி
22. (4) 23. (5)
24. (6) 25. (1)
26. (3) 27. (2)
28. நாதசுரம்
29. வயலின்
30. வீணை
31. புல்லாங்குழல்
32. இறுக்கமாக
33. ஸ,ரி,க,ம,ப,த,நி.
34. நாதசுரம் (A)
35. பாய்தல் நிகழ்ச்சி
36. எறிதல் நிகழ்ச்சி
37. குறுந்தூர ஓட்டம்
38. நெடுந்தூர ஓட்டம்
39. பாய்தல் நிகழ்ச்சி
40. குழு நிகழ்ச்சி
41. குறுந்தூர ஓட்டம்
42. மழைமானி
43. மின்காந்தம்
44. மண்ணின் கூறுகள்
45. காற்றுத் திசைகாட்டி
46. கும்மி
47. காய்ச்சல்
48. சுக்கிரன்
49. செதில்
50. காளமேகம்
51. (-2) 52. (3)
53. (1) 54. ([illegible])
55. (3)
56. புல்லும் ஆயுதம்
57. ஆமை
58. கிழிக்கின்றான்.
59. சதை
60. மாணவன் புகைவண்டியில் பிரயாணஞ் செய்து பாடசாலையை அடைந்தான்.
61. உருளை
62. (1) 63. (2)
64. (2) 65. 20 முறை
66. XLV 67. 1110g
68. கருவு 69. பூக்கள்
70. கிராமம்
71. புத்தகங்கள்
72. நைல் நதி
73. நாகமரம்
74. பேராதனை தாவரவியற் பூங்கா
75-80 கருத்துடைய வசனங்கள்.

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

45நாள் நிரம்பிய மண்நிற பொம் மனேரியன் ஆண் நாய்க்குட்டியும், கறுப்பு பொம்மனேரியன் ஆண், பெண நாய்க்குட்டியும், 11மாதம் நிரம்பிய பெண் அல்சேசன் நாயும், 3மாதம் நிரம்பிய அல்சேசன் (ஜேர்மன் செப் பேட்) குட்டிகளும் விற்பனைக்குண்டு. க.நடராசா செல்வநாயகம் ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் (கோண்டாவில் சந்தி பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில்). (5912)

அல்சேசன் நாய் ஜேர்மன் செப்பேட் விற்பனைக்குண்டு (6மாதம் நிரம்பியது). தொடர்பு: த.குமாரசாமி 352, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் பார்வையிடும் நேரம் சனி காலை 8.30 மணிக்கு முன்பும், ஞாயிறு முழுவதும். (5889)

நவாலி வடக்கு, புலவர் வீதியில் வீடு ஒன்று உடன் விற்பனைக்கு உண்டு (சங்கக்கடை முன்பாக). தொடர்பு:- 9மணி தொடக்கம் 1.30 வரை 15-07-2002 இற்கு பின் தொடர்பு. T.P 01-733144 (5916)

மல்லாகம் பங்களா வீதியில் சகல வசதிகளும் உள்ள 51/2 பரப்புக் காணியுடன் வீடும், அதேவீதியில் வெற்றுக் காணியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ச.சூரியகுமார், பங்களாவீதி, மல்லாகம். (5880)

கொண்டா பிறஸ் கப் 50cc புதிய மோட்டார் சைக்கிள், அகிறா ரீ.வி. 14", ஒடியோ - வீடியோ பிளே யர் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: லக்கி, மதவடி ஒழுங்கை, திருநெல்வேலி. (5919)

MD90 HONDA மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: R.விஜோதகுமார்(கம்பன் கோட்டம் அருகில்), கோயில் வீதி, நல்லூர். (5922)

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி சுத் தம் செய்து உங்களுக்குத் தேவை யான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ள லாம். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (5767)

புறோயிலர் இறைச்சிக் கோழி, ஊர்ச்சேவல், பேடு, சூப் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. மொத்தமாகவும் சில்லறையாகவும் வேண்டிய நிறை களில் பெற்றுக்கொள்ளலாம். 1Kg -160/= தொடர்பு: லக்கி, மதவடி ஒழுங்கை, திருநெல்வேலி. (5920)

நல்ல நிலையில் வளர்க்கப்பட்ட பிறிமா புறோயிலர் இறைச்சிக்கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். 'மல்லிகாபதி' மானிப்பாய். (C/22910)

### மணமகள் தேவை

1964, பூராட நட்சத்திரம், செவ் வாய்க்குற்றமற்ற, U.K.இல் வேலை செய்பவருக்கு Sponser செய்யக் கூடிய மணப்பெண் தேவை. தொடர்பு: துரைவிமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (5734)

### தேவை

புறோயிலர் இறைச்சிக் கோழி கள் தேவை. நல்ல விலை தரப்படும். தொடர்பு:- சிவா, பருத்தித்துறை வீதி (வட்டக்குளம் முன்பாக), கட்டப் பிராய். (C/22914)

### வகுப்புக்கள்

Maths, English விசேடமாக O/L பரீட்சையில் A,B,C பெறுபேறடைய, Paper Class உட்பட தரம் 8,9,10 ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும். ஆசிரியர், 85, சிவன்கோயிலடி மேற்கு வீதி, திருநெல்வேலி. (5779)

### தவறிவிட்டது

சிவசக்தி கோயிலடி, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி என்னும் முகவரி யைச் சேர்ந்த செ.பாலேந்திரா என்ப வரது ஒருதொகைப் பணம்,தே.அ.அ (311760769V),வி.அ.அ.என்பன அடங் கிய பேர்ஸ் ஒன்று 11.07.2002 அன்று புத்தூர் கிராமிய வங்கிக்கும் உரும் பிராய் சந்திக்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (5924)

சந்திரபுரம் வைத்தியசாலை வீதி, மட்டுவில் வடக்கைச் சேர்ந்த நிக் கிளஸ் அன்ரனி தேவதாஸ் என்பவரின் தே.அ.அ(இல.550063352V),வி.அ.அ (இல.09104661б),சாரதி அனுமதிப் பத்திரம் என்பன அடங்கிய பேர்ஸ் நாக தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் அல்லது நாக லிங்கம் முதலியார் வீதி, பருத்தித் துறையில் ஒப்படைத்து உதவவும்.(5923)

## பதவி வெற்றிடம்

கிளிநொச்சியில் இயங்கும் மொத்த விற்பனை நிலையத் திற்கு பின்வரும் பதவிகளுக்கு ஆள்கள் தேவை.

1. காசாளர்
2. சிட்டை லிகிதர்
3. விற்பனையாளர்

மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தமது சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை 20.07.2002 இற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

விளம்பர இல. 1567,
C/o உதயன், யாழ்ப்பாணம்.

(5896)

## யாழ். பல்கலைக்கழகம்

## கேள்விப் பத்திர அறிவித்தல்

**70 GSM கனதியான**
**கென்யோ பாங்க் பேப்பர் (வெள்ளை நிறம்)**
**வழங்கல் - 100 றீம்கள்**

யாழ். பல்கலைக்கழகத்திற்கு 70 GSM கனதியான கென்யோ பாங்க் பேப்பர் 100 றீம்கள் வழங்குவதற்குத் தகுதி வாய்ந்த விநியோகஸ்தர்களிடம் இருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்விப் பத்திரதாரர் மீளளிக்கத் தகாத வைப்புப் பணமாக ரூபா 250/-உம், மீளளிக்கும் வைப்புப் பணமாக ரூபா 2,500/-உம் நிதிக்கிளையில் பணமாகச் செலுத்தி, அதற்கான பற்றுச் சீட்டுடன் மாதிரிப் பேப்பரும் இணைத்து கேள்விப் பத்திரத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் **நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி** என முகவரியிடப்பட்டு 25.07.2002 பிற்பகல் 2.00 மணிக்கு முன்பதாக, பதிவுத் தபால் மூலமாகவோ அன்றி நேரடியாகவோ சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் *"70GSM கனதியான கென்யோ பாங்க் பேப்பர் (வெள்ளை நிறம்) வழங்கலுக்கான கேள்விப் பத்திரம"* எனக் குறிப்பிடப்படல் வேண்டும். கேள்விப்பத்தி ரங்கள் அன்றைய தினம் 2.30 மணிக்கு யாழ்.பல்கலைக் கழக சபை அறையில் திறக்கப்படும்.

*பதிவாளர்,*
*யாழ். பல்கலைக்கழகம்.*

(C/22907)

## அழைப்புக் கட்டளை

இல.16 - பிரிவு 55(1)

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

1. செல்லத்துரை ஜெகநாதனும்
2. பெண் தவராணியும்

இருவரும் சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

வழக்காளிகள்

வழ.இல.காணி/28

எதிராக

1. இரத்தினம் ஆனந்தராசாவும்
2. பெண் ஜெயலட்சுமியும்

இருவரும் சுதுமலை வடக்கு, மானிப்பாய், தற்போது

மே/பா, சிவனேசமூர்த்தி இரணை இலுப்பைக்குளம், வவுனியா.

3. பொன்னையா சுவாகரத்தினமும்
4. பெண் யோகநாயகியும்

இருவரும் சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

எதிராளிகள்

மேலே பெயர் குறிப்பிடப்பட்ட எதிராளிகளுக்கு

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வழக்காளிகள் பிராதின் நிவாரணத்தில் வேண்டி நிற்கும் நிவாரணங்களைப் பெறுவதற்கு இந்நீதிமன்றத்தில் உமக்கு எதிராக வழக்குத் தொடுத்துள்ளாராதலினால் உமது மறுமொழி ஏதேனும் இருப் பின், 2002ஆம் ஆண்டு ஆவணி மாதம் 07ஆம் நாளன்று அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்திற் கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதோடு சொல் லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத் தவறும் சந்தர்ப்பத்தில், வழக்காளிகள் மறுகட்சிக்காரரில்லாமலே மேற்கொண்டு நடத்தப் பட்டு விளங்கப்படுமென அறிந்துகொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத் தவும்படுகின்றீர்.

பதிவுபெற்ற தரணி மூலம் நீர் தோன்றாவிடின் சட்டமுறையான எல்லா அறி வித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விவரக் குறிப் பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

வரைந்தது
இ.வசந்தசேனன்
வழக்காளிகளின் சட்டத்தரணி.

நீதிமன்றக் கட்டளைப்படி.
*செ.விக்னேஸ்வரமூர்த்தி*
பதிவாளர் /ப.பிஸ்கால்/
சமாதான நீதிவான்
மாவட்ட நீதிமன்றம், மல்லாகம்.

(5914)

*குறிப்பு: விளக்கத் தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு எடுபடும் தேதி பற்றிய அறிவித்தலை, நீவிர் பெறவிரும்பினால் பதிவுசெய்யப்பட்ட முகவரியொன்றை இந்நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும் பதிவஞ்சல் மூலம் அனுப்பிவைப்பதற்காகும் செலவை ஈடுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும், 83ஆம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.*

கையொப்பம் பதிவாளர் 2002ஆம் ஆண்டு ஜூலை மாதம் 10ஆந் திகதி.

## துங்குமிட வீடுகள் தேவை

யாழ்ப்பாணத்தில் 500பேர் தங்குவதற்கு வசதியான வீடுகள் ஓகஸ்ட் முதலாம் திகதியிலிருந்து ஓகஸ்ட் 7ஆம் திகதி வரையில் தேவைப்படுகின்றது.

தொடர்புகொள்ளவும்.
072-233275
01-674950-51 அல்லது 675695

(C/22906)

## OLD - BOYS ASSOCIATION OF St.PATRICK'S COLLEGE - JAFFNA

### ANNUAL GENERAL MEETING - 2002

| | | |
|---|---|---|
| திகதி | : | 14.07.2002 |
| நேரம் | : | மு.ப. 9.30 மணி |
| இடம் | : | பழைய மாணவர் சங்கப் பணிமனை<br>59, சம்பத்தரிசியார் வீதி,யாழ்ப்பாணம். |

சகல பழைய மாணவர் சங்க உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

*No: 59, St.Patrick's Road, Jaffna.* (5913)

கௌரவ செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்.

## எமது ஆழ்ந்த அனுதாபங்கள்

### ஏழாலை பண்டிதர் மு.கந்தையா

அவர்களின் மறைவினை அறிந்து எமது வேதனையையும் ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஈழத்திருநாட்டின் முதுபெரும் சைவசித்தாந்த அறிஞராக விளங் கிய பண்டிதர் அவர்கள், சைவசித்தாந்தத்துறையில் பல ஆய்வுகளை மேற்கொண்டு பதினைந்துக்கும் மேற்பட்ட நூல்களை ஆக்கி வெளி யிட்டவர். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் எழுதிய பெரியபுராண வசனத்தை முழுமைப்படுத்திய பெருமையும் இவருக்குரியதாகும். அறுபது ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழுக்கும், சைவத்திற்கும் அவர் ஆற்றிய தொண்டு அளப்பரியதாகும். 1993ஆம் ஆண்டு இந்துசமய கலாசார அமைச்சு பண்டிதர் அவர்களுக்கு 'ஞானசிரோன்மணி' எனும் பட்டமளித்து வாழ்த்தியது. இவ்விருதினை அமரர் திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் வழங்கினார்.

அவரது மறைவு சைவத்தமிழுலகிற்குப் பெரும் வெற்றிடத்தை ஏற்படுத் தியுள்ளது. அவரது இழப்பு ஈடுசெய்யமுடியாததாகும்.

அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, அமரரை இழந்து துயருறும் அவர்தம் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தியாகராசா மகேஸ்வரன்,
இந்துசமய விவகார அமைச்சர்,
அமைச்சு அதிகாரிகள்,
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் அனைத்து உத்தியோகத்தர்கள்.

(C/22904)

## 31ஆம் நாள் நீங்காத நினைவலைகள்

### சிவானந்தம் மதிமுகன்

திங்கள் ஒன்று சென்றதே மதிமுகா!
எங்கள் உள்ளமதில் குடிகொண்ட
கள்ளம் இல்லா கட்டழகுத் தெய்வமே!
துள்ளி ஓடி வந்து தோள்மீதேறி
உள்ளத் துயர் தீர்த்தாயே!
பள்ளி சென்று ஆண்டு ஒன்றாகவில்லை
அள்ளி அணைத்த அன்னை தந்தையைத் துயர
வெள்ளத்தில் துடிதுடிக்கவிட்டு
பிள்ளையார் திருவடி சேர்ந்தாயே!
பிள்ளை உன்றன் ஆன்மா சாந்தி அடைவதாக.

பிரிவால் துயுறும்:
உப-அஞ்சலக ஊழியர்கள்,
எழுதுமட்டுவாழ்.

(5891)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியை திருமதி வி.சற்குணரட்ணம் அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி நாகரட்ணம் சோமசுந்தரம்

அவர்கள் 08.07.2002 அன்று இறைபதம் எய்தியமையையிட்டு நாம் ஆழ்ந்த துயரமடைவதுடன் அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலி யைச் சமர்ப்பிக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
ஏனைய ஊழியர்கள்,
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.

(5897)

# கைதாகியுள்ள வைகோ பிணையில் வெளிவருவாரா?

சென்னை,ஜுலை13

'பொடா' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ பிணையில் வெளியே வருவது அவ்வளவு எளிதான காரியமல்ல என்று கூறப்படுகிறது.


'பொடா' சட்டத்தின் பிரிவு 21 (3) இன் கீழ் வைகோ கைதுசெய்யப்பட்டுள்ளார். தீவிரவாத இயக்கத்துக்கு ஆதரவு திரட்டுவதற்காகக் கூட்டப்பட்ட கூட்டத்தில் கலந்துகொண்டு, அதை ஆதரித்துப் பேசுவோரை, இச்சட்டப் பிரிவின் கீழ் கைதுசெய்யலாம். குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால், 10 ஆண்டுகள்வரை சிறைத் தண்டனை விதிக்கமுடியும்.

இச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப் படுவோரை சிறப்பு நீதிமன்றங்கள் மூலம் மட்டுமே விசாரிக்கவேண்டும். ம.தி.மு.க. தலைவர்களை விசாரிக்க இதுவரை சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்படவில்லை.

மேலும், இக்குற்றச்சாட்டு நியாயமானதுதானா என்பதை விசாரிக்க மாநில அரசு ஓர் ஆய்வுக்குழுவை நியமிக்கவேண்டும். உயர்நீதிமன்றத்தில் தற்போது பணியில் உள்ள நீதிபதியோ அல்லது ஓய்வுபெற்ற நீதிபதியோ அக்குழுவின் தலைவராக இருக்கவேண்டும். அவருடன் மேலும் இரு உறுப்பினர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

அந்த உறுப்பினர்களாக யாரை நியமிப்பது என்பது குறித்து உயர்நீதிமன்றம் விதிமுறைகளை வகுக்க வேண்டும். இக்குழுவின் தலைவராக எந்த நீதிபதியை நியமித்தாலும், உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியின் ஒப்புதல் பெறவேண்டும்.

எந்த அடிப்படையில் சம்பந்தப் பட்ட நபர்கள் 'பொடா' சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டார்கள். என்பதற்கான ஆவணங்களை ஆய்வுக் குழுவிடம் பொலீஸார் தாக்கல் செய்யவேண்டும். பொலீஸார் தெரிவிக்கும் காரணங்கள் நியாயமானதுதானா என்பதை ஆராய்ந்து 10 தினங்களுக்குள் அக்குழு முடிவைத் தெரிவிக்க வேண்டும். பொலீஸின் முடிவு தவறு என்று ஆய்வுக்குழு நிராகரித்தால், சம்பந்தப்பட்ட பொலீஸ் அதிகாரிமீது நடவடிக்கை எடுக்கமுடியும். அவருக்கு இரண்டு ஆண்டுகள்வரை கடுங்காவல் தண்டனை விதிக்கலாம். அதுமட்டுமன்றி, பாதிக்கப்பட்டவருக்கு நஷ்டஈடும் தரவேண்டும்.



கைது செய்யப்பட்டவர் பிணைகோரி மனுத்தாக்கல் செய்தால், அரசுத் தரப்பு வழக்கறிஞரின் கருத்தை நீதிமன்றம் கேட்கவேண்டும். அவர் ஆட்சேபம் தெரிவிக்கும் பட்சத்தில், அந்த நபர் குறிப்பிட்ட குற்றத்தைச் செய்திருக்கமுடியாது என்று நம்புவதற்கான காரணம் உள்ளதாக நீதிமன்றம் கருதினால் மட்டுமே அவரை பிணையில் விடலாம் -

'பொடா' சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்ட வெளிநாட்டவர்களுக்கு பிணை வழங்கமுடியாது. இந்தியப் பிரஜைகளும் பிணை பெறுவது அவ்வளவு எளிதான காரியம் அல்ல.

இந்தச் சூழ்நிலையில் 'பொடா' சட்டத்தில் கைதாகியுள்ள வைகோ உடனடியாகப் பிணையில் விடுதலையாக வாய்ப்புக் குறைவாகவே உள்ளதாகக் கூறப்படுகிறது. (ஒ-9)

## மத்திய அரசு தலையிடுமா?

பழிவாங்கும் நோக்கத்துடன் ஒருவரை 'பொடா' சட்டத்தில் கைதுசெய்தால், அந்த மாநிலத்தில் அவருக்கு நீதி கிடைக்காது என்று மத்திய அரசு கருதினால், வேறு மாநிலத்திற்கு அந்த வழக்கை மாற்றக்கோரி உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசே மனுத்தாக்கல் செய்யலாம். கைது செய்யப்பட்ட நபரும் இவ்வாறு மனுத் தாக்கல் செய்யலாம்.

வைகோ விவகாரத்தில் இது போன்ற முறையீடு இருக்குமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# எய்ட்ஸுக்கு எதிராக அணிதிரள்வீர்; நெல்சன் மண்டேலா அறைகூவல்!

பர்சிலோனா,ஜுலை13

'எய்ட்ஸ்' நோய்க்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ள உலக மக்களுக்கு தென் ஆபிரிக்காவின் முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலா அறைகூவல் விடுத்துள்ளார்.

ஸ்பெயினின் தலைநகர் பார்ஸிலோனாவில் இடம்பெற்றுவந்த எய்ட்ஸ் குறித்த சர்வதேச மாநாட்டின் இறுதி நாளான நேற்று சிறப்புரையாற்றிய போதே அவர் இந்த அறைகூவலை விடுத்தார்.

நெல்சன் மண்டேலா மேலும் கூறுகையில்:-

'எய்ட்ஸ்' நோய் மேலும் பரவாமல் தடுப்பதில் மனித சமுதாயம் கூடுதல் அக்கறை காட்டவேண்டும். இதற்காக பின்தங்கிய சமுதாயத்தினருக்கு அதிக உதவிகள் வழங்கப்படவேண்டும். எய்ட்ஸ் நோய்க்குக் காரணமான எச்.ஐ.வி. கிருமிகளால்



நெல்சன் மண்டேலா

ஏற்பட்டுள்ள தாக்கம் முடிவுக்குக் கொண்டுவரப்படவேண்டும் - என்றார்.

இந்த மாநாட்டில் அமெரிக்க முன்னாள் அதிபர் பில்கிளின்ரன் சிறப்புரையாற்றுகையில்:-

"அமெரிக்கா உட்பட பணக்கார நாடுகள் 'எய்ட்ஸ்' நோய்க்கு எதிரான நடவடிக்கைகளில் தமது பங்களிப்பை மிகக் குறைவாகவே வழங்குகின்றன. அந்த நாடுகள் உதவிகளை வழங்குவதுபோல் நாடகமாடி பெருமைப்படைகின்றன" - என்றார்.

மாநாட்டில் பங்கேற்ற பல பொது அமைப்புகளும் கிளின்ரனின் கருத்தை வரவேற்றுள்ளன.

இதேசமயம் 'ஒக்ஸ்பார்ம்' என்ற பிரிட்டிஷ் அமைப்பின் பிரதிநிதி கூறுகையில்,

இந்த 5 நாள் மாநாட்டின் முடிவிலும்கூட, பணக்கார மற்றும் வளரும் நாடுகளின் பங்களிப்புகள் குறித்து எதுவித தீர்க்கமான முடிவுகளும் எட்டப்படவில்லை' என்று குறை கூறினார்.

ஐ.நா. பிரதிநிதி கூறுகையில், 'எய்ட்ஸ்' நோயால் 2 கோடிப்பேர் பலியாகி, 4 கோடிப்பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் செயல் ஏதுமின்றிப் பேசிப்பொழுதைக் கழிப்பதாகவே உள்ளது. - என்றார். (ஒ-9)

## உலக அரங்கில்

# காஷ்மீர்ப் பத்திரிகையாளர் மீது தீவிரவாதிகள் துப்பாக்கிச் சூடு!

இஸ்லாமாபாத்,ஜுலை13

இந்தியக் கட்டுப்பாட்டு காஷ்மீரில் தீவிரவாதிகள் செய்தியாளர் ஒருவரைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்தியதில் அவர் படுகாயமடைந்தார்.

இந்திய அரசின் உருதுமொழிப் பத்திரிகையாளரான ஷாகிட் ரஷிட் என்பவரே படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஸ்ரீநகர்ப் பகுதியில் பஸ்ஸிற்காக காத்துநின்ற அவர் மீது தீவிரவாதிகள் சரமாரியாக துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர்.

காஷ்மீரில் பிரிவினைகோரும் தீவிரவாதிகள் குழுவில், ஷாகிட் முன்னர் உறுப்பினராக இருந்ததாகவும் -

பின்னர் சிறைப்பிடிக்கப்பட்ட அவர் 1990ஆம் ஆண்டு சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டதாகவும் - கூறப்படுகிறது.

பின்னர் அரசுப் பத்திரிகையாளராக ஷாகிட் பணியாற்றுவதால் ஆத்திரமடைந்த தீவிரவாதிகள் அவரைக் கொலை செய்ய முயன்றிருக்கிறார்கள் என்று பொலீஸார் தெரிவித்தனர். (ஒ-9)

# பெண்களைக் கண்டதும் முதலில் - கண்களையே பார்ப்போம்!

## ஜேர்மனிய இளைஞர்கள் கூறுகின்றனர்

ஹம்பர்க்,ஜுலை13

ஒரு பெண்ணைப் பார்க்கும்போது முதலில் அப்பெண்ணிடம் இளைஞர்கள் எதனை அவதானிக்கிறார்கள் என்பது குறித்து ஜேர்மனியில் அண்மையில் கருத்துக் கணிப்பொன்று எடுக்கப்பட்டது.

'போர்சா' என்ற நிறுவனம் ஜேர்மனிய இளைஞர்கள் ஆயிரம் பேரிடம் இக்கருத்துக் கணிப்பை மேற்கொண்டது. அதில் இளைஞர்கள் அளித்த பதில் எதிர்பாராததாக இருந்தது. 'பெண்களின் கண்கள்தான் எங்களை முதலில் கவரும்' என்று 40 சதவீதமான இளைஞர்கள் தெரிவித்தனர்.

பத்து சதவீதமான இளைஞர்களே பெண்களின் மார்பகத்தைக் குறிப்பிட்டிருந்தனர். 'கூந்தல் அழகை முதலில் பார்ப்போம்' என்று 6 சதவீதமானவர்கள் கூறியிருந்தனர்.

இதேபோன்றதொரு கருத்துக் கணிப்பை பெண்களிடம் நடத்திய போது; 46 சதவீதமான பெண்கள் 'ஆண்களின் கண்களைத்தான் முதலில் பார்ப்போம்' என்றும் -

எட்டு சதவீதமான பெண்கள் ஆண்களின் கைகளையே முதலில் பார்ப்பதாகவும் - கூறியுள்ளனர். (ஒ-9)

## பலஸ்தீன தீவிரவாதி சுட்டுக்கொலை

பலஸ்தீனத் தீவிரவாத அமைப்பான இஸ்லாமிய ஜிகாத் தமது முக்கிய உறுப்பினர் ஒருவரை இஸ்ரேலியப் படையினர் சுட்டுக் கொன்றுவிட்டதாக அறிவித்துள்ளது.

மொமார் டர்கனே (வயது 30) என்ற அந்த உறுப்பினர் ஜெனின் நகர் அருகே காரில் சென்றுகொண்டிருந்தபோது இஸ்ரேலிய இராணுவத்தினர் அந்தக் காரைச் சுற்றிவளைத்து சுட்டதில் அவர் உயிரிழந்ததாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையில் ஜெருசலேம் நகரில் பலஸ்தீனிய, இஸ்ரேலிய பிரதிநிதிகள் சந்திப்பொன்றை நடத்தியுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஒ)



இந்தியாவின் மேற்குப்புற மாநிலமான குஜராத்தின் தலைநகர் அஹமதாபாத்தில் உலகப் புகழ் பெற்ற பூரி ஜகந்நாதர் ஆலய ரதோற்சவம் நேற்று ஆரம்பமானது. ஆலயத்திலிருந்து ஜகந்நாதர் விக்கிரகம் ரதத்துக்கு எடுத்துச்செல்லப்படுவதைப் படத்தில் காணலாம்.

# தகாத உறவால் தாய்மை; கல் எறிந்து கொல்ல ஆணை!

தகாத உறவின் மூலம் குழந்தை பெற்றுக்கொண்டதாகக் கூறப்படும் இஸ்லாமிய பெண்ணொருவரை கல்லால் எறிந்து கொல்லுமாறு இஸ்லாமிய நீதிமன்றமொன்று தீர்ப்பளித்துள்ளது.

நைஜீரியாவினைச் சேர்ந்த அமினா லாவல் (வயது30) என்ற பெண் இருமுறை திருமணமானவர். அந்த இரு திருமணங்களும் விவாகரத்தில் முடிவடைந்தன. விவாகரத்துப் பெற்ற பின்னர் இந்தப் பெண் தகாத உறவின் மூலம் கர்ப்பமடைந்து குழந்தை ஒன்றைப் பெற்றுள்ளதாகக்கூறி இஸ்லாமிய நீதிமன்றம் அமினாவுக்கு மரண தண்டனை விதித்துள்ளது. இத்தீர்ப்பை எதிர்த்து அமினா மேன்முறையீடு செய்துள்ளார். (ஒ-9)

# பாகிஸ்தானியரின் கடைகளில் அமெ.பொலீஸார் சோதனை!

## தீவிரவாதிகளுக்கு உதவுவதாக சந்தேகம்!!

வாஷிங்ரன்,ஜுலை13

இஸ்லாமியத் தீவிரவாதக் குழுக்களுக்கு நிதி உதவி செய்கின்றன என்ற சந்தேகத்தின்பேரில், அமெரிக்காவில் பாகிஸ்தானியர்கள் நடத்தும் நகைக் கடைகள் அனைத்தையும் அமெரிக்கப் பொலீஸார் சோதனையிட்டு வருகின்றனர்.

தீவிரவாதிகளுக்கு ரகசியமாக நிதி உதவி செய்யும் வர்த்தக நிறுவனங்களைக் கண்டுபிடித்து, அவற்றை முடக்கும் நடவடிக்கைகளின் ஒரு கட்டமாகவே அமெரிக்கப் பொலீஸார் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

பாகிஸ்தானியர்கள் நடத்தும் நகைக்கடைகளை சோதனையிட்ட பொலீஸார், சோதனையின் பின்னர் சுமார் 10 பேரை கைதுசெய்துள்ளனர்.

அமெரிக்காவின் பிலடெல்பியா, பிட்ஸ்பார்க், அட்லாண்டா, நியூயோர்க் போன்ற பகுதிகளில் இரண்டு வாரங்களுக்கும் மேலாக பொலீஸார் சோதனை நடத்தியுள்ளனர். (ஒ-9)

# உயிரைப் போக்க உதவும் 'பிளாஸ்ரிக் பை' அறிமுகம்!

சிட்னி,ஜுலை13

குணப்படுத்த முடியாத வியாதிகளால் வேதனைப்படும் நோயாளிகள் தங்கள் உயிரை வலி இல்லாமல் மாய்த்துக்கொள்வதற்கு உதவும் 'பிளாஸ்டிக் பைகள்' தயாரிக்கப்பட்டுள்ளன.

இந்தத் தகவலை ஆஸ்திரேலியாவின் கருணைக்கொலை இயக்கத் தலைவர் பிலிப் நிட்ஸ்ஷக் தெரிவித்துள்ளார்.

இந்தப் பிளாஸ்டிக் பைகள், மூச்சைத் திணறச்செய்து உயிரைப்போக்காமல் உடலில் பிராணவாயுவை இல்லாமற்செய்து நோயாளியை மயக்கி அப்படியே உயிரையும் போக்கிடும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதனை தலையில் போட்டுக்கொண்டு தூங்கப்போனாலும் இந்தப் பை தன் 'வேலையை' ஆரம்பித்துவிடும். (ஒ-9)

# ஹொங்கொங் நகரிலேயே வாழ்க்கைச்செலவு அதிகம்!

சிங்கப்பூர்,ஜுலை13

உலகத்திலேயே வாழ்க்கைச் செலவு அதிகம் உள்ள நகரமாக இருந்த ஜப்பானின் டோக்கியோவை பின்னுக்குத் தள்ளிவிட்டு அந்த இடத்தை ஹொங்கொங் கைப்பற்றிக் கொண்டது. வாழ்க்கைச்செலவு குறைந்த நகரம் என்ற பெயரை தென் ஆபிரிக்காவின் ஜோகன்ஸ்பேர்க் தட்டிச் சென்றுள்ளது.

வீட்டு உபயோகப் பொருள்கள், போக்குவரத்து, மருத்துவச்செலவு ஆகியவை ஹொங்கொங்கில் அதிகம். இதன்காரணமாக மிக அதிக வாழ்க்கைச்செலவுடைய நகரமாக ஹொங்கொங் மாறியுள்ளது. ஹொங்கொங்கிற்கு அடுத்த இடத்தை ரஷ்யாவின் மொஸ்கோ பிடித்துள்ளது. டோக்கியோ மூன்றாம் இடத்தையும் 4ஆவது, 5ஆவது இடத்தை சீனாவின் பீஜிங் மற்றும் ஷாங் காய் நகரங்களும் பெற்றுள்ளது.

உலகின் மிக உயர்ந்த வாழ்க்கைச் செலவுடைய 15 நகரங்களில் 11 நகரங்கள் ஆசிய நாடுகளைச் சேர்ந்தவையாகும். மிக உயர்ந்த வாழ்க்கைத்தரத்துடன் வாழ்க்கைச் செலவு குறைந்த நகரங்களாக ஆஸ்திரேலிய நகரங்கள் விளங்குகின்றன. (ஒ-9)

# தீப்பிடித்த படகில் தத்தளித்த சீன மீனவர் 110 பேரும் மீட்பு!

## தைவான் கடலில் சம்பவம்

தைபே,ஜுலை13

தைவானியக் கடலில் தீப்பிடித்து எரிந்துகொண்டிருந்த படகிலிருந்த 110 சீன மீனவர்களைத், தைவான் கடற்படையினர் மீட்டுள்ளனர்.

தைவான் கடலில் அந்நாட்டு நிறுவனமொன்றுக்குச் சொந்தமான படகு ஒன்றில் சீன மீனவர்கள் மீன்பிடித்துக்கொண்டிருந்தனர். அந்தச் சமயத்தில் படகு திடீரெனத் தீப்பிடித்துக் கொண்டது. அதிலிருந்த சீனநாட்டு மீனவர்கள் தப்பிச்செல்ல வழியின்றி தத்தளித்துக்கொண்டிருந்தனர்.

தகவலறிந்த தைவான் கடற்படையினரின் ஹெலிகொப்டர்கள் உடன் விரைந்து சென்று மீனவர்களை மீட்டன. அவர்கள் அனைவரும் நூலேணி மூலம் மீட்கப்பட்டனர்.

உயிருடன் மீட்கப்பட்டுள்ள சீன நாட்டைச் சேர்ந்த இந்த மீனவர்களில் எவரிடமும் விஸா இருக்கவில்லை. தைவானின் காசியங் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இவர்களிடம் தைவான் பொலீஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். தைவான் நாடு தனது நாட்டின் ஒரு பகுதியே என சீனா கூறிவருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-9)

| | | | |
|---|---|---|---|
| | | சனி. ரா. | கு. ▲ |
| | இராசிச் சக்கரம் | | செவ். புத. |
| | | | சந். வீ. வெ. |
| | கே. | | |

*மாற்றம்:*

**14.07.2002 பூரம் - சிங்கம் இராசியில் சந்திரன் நிற்கும். கடகம் இராசியில் புதன் மாறும்.**

**ஆறிய கஞ்சி பழங்கஞ்சி தான் - எல்லாம் பார்த்துச் செய்வம் என்ற நிலை. மக்களுக்கு யுத்த பயம் - அரசியல்வாதிகள் - அரசாங்கம் புத்திசாதுரிய நிலை. அமெரிக்கா இந்தியாவிடம் ஆலோசனை. அரசியலில் ஜனநாயகத் திசை திருப்பம் போன்றநிலை. இந்தியாவில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் விடாப்பிடி அரசியல் கொந்தளிப்பு - எதிர்ப்பு கிளம்புதல் - மத்திய அரசாங்கம் விடாப்பிடி கருத்து வேற்றுமை ஏற்படுதல் என்பன நடக்கும். மேற்குநாடுகள், மத்தியகிழக்கு - முஸ்லிம் நாடுகளில் கடும் நடவடிக்கைகள் எடுக்கும். பசுபிக், இந்து சமுத்திரப்பிராந்திய நாடுகளில் இயற்கையின் சீற்றம் இருக்கும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.**

# இந்தவார இராசிபலன்

# 14.07.2002 ~ 20.07.2002

## மேடம்

ஆஸ்தி, அந்தஸ்தைப் பார்த்து கணவன் - மனைவி உறவு தங்கியிருக்கவில்லை. ஒருவர் மீது ஒருவர் வைத்துள்ள நம்பிக்கையைப் பொறுத்து உறவு தங்கியிருக்கின்றது. தொழில் ஸ்தானத்தில் மாற்றங்கள் சகஜம். படபடப்பு - புதிய செய்திகள், குடும்பச் செலவு அதிகரித்தல், தூர இடங்களுக்குப் போய் வருதல், அயலவர்களைக் கோபித்தல் என்பனவும் வயிற்றுநோ, வாய்வு, சளித்தொல்லை, தலை சுற்றுதல் என்பனவரும். மருந்துத்துறை, குருத்துறை, பாதுகாப்புத்துறை போன்ற துறையினர்கள் நன்மையடைவர்.

*அதிர்ஷ்ட நாள்: ஞாயிறு, சனி (மத்தியானம்)*

## இடபம்

ஒரு குரலில் நின்று உரிமை பெறும் இவ்வேளையில் தமிழ், முஸ்லிம் மக்கள் ஒருவரையொருவர் அடித்து, அழித்துக் கொள்வதில் என்ன சூழ்ச்சிப் பின்னணி தங்கியுள்ளது? உங்கள் தொழில் ஸ்தானத்தில் சிலர் மேலதிகாரிகளுக்கு உங்களைப் பற்றி வேண்டாததைச் சொல்லி கலகத்தை உண்டாக்குதல், இரக்கமற்ற செயல், அதிகாரிகளின் உதவி, காணி, பூமி மாற்றம், பணவரவு, தத்துவக் கதைகள், பிறருக்கு ஆலோசனை சொல்லல், நெஞ்சு வருத்தம், சலநோய் என்பனவும் புடைவைத்துறை, கமிஷன்துறை, மருந்துத்துறை, புத்தகத்துறை, குருத்துறை போன்றவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்: ஞாயிறு, சனி (மத்தியானம்)*

## மிதுனம்

சிலர் அவதியாலும், கோபத்தாலும் பல இழப்புக்களைச் சந்திக்கின்றார்கள். தொழில்ஸ்தானத்தில். அபிப்பிராயபேதம், வாக்குக் கலகம், எதிர்ப்பாலாருடன் நிதானமாக இருக்கவும். பிறருக்கு உதவிகள் செய்து கொடுத்தல், சகோதரர்களுக்காக ஓடியாடித் திரிதல், தொழிலில் கூடிய சிந்தனை, பழைய பொருள்களோ, காசோ வருதல், ஆடை, ஆபரண வசதி வருதல். காயங்கள், குடல் வருத்தம், மலச்சிக்கல், தலை வலி, களைப்பு என்பனவரும். சட்டத்துறை, வியாபாரத்துறை, குருத்துறை போன்ற துறைகளைச் சார்ந்தவர்களுக்கு நன்மைகள் கிடைக்கும்.

*அதிர்ஷ்ட நாள்: ஞாயிறு, சனி (மத்தியானம்)*

## கடகம்

பதவி போனால் எல்லாம் போய் விடுமா? எனவே தொழில்ஸ்தானத்தில் நிதானமாக இருக்கவும். கடும் சொற்களைப் பேசி மனம் வருந்துதல், சோம்பல், சுயநலச் செயல்கள், பொருள்வரவு, புதிய நிலம், வாகனம், புடைவை, நகை போன்றவற்றுக்குப் பிரியப்பட்டுச் செயற்படுதல். எதிர்ப்பாலாருடன் கலகம் என்பன. சல வருத்தம், வயிற்றுநோ, பயவுணர்வு, கைகால் நோ என்பனவரும். உஷ்ண வியாதிகள் வரும். சமயத்துறை, குருத்துறை, அரசியல்துறை, வியாபாரத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்ட நாள்: சனி.*

## சிங்கம்

விதி தன்னகத்தே வேலை செய்யும்வேளை, போராட்டம் மனிதர்களின் உள்ளத்தில் கொந்தளிப்பை ஏற்படுத்தும். மாற்றங்களும் தானாகவே வரும். தொழில் ஸ்தானத்தில் கலகலப்பும் - எதிர்ப்புக்களும் வரும். உறுதியான செயல்கள், பெரியவர்கள், நண்பர்கள் உதவுதல், வீடு வாகன செலவுகள், பெற்றோர் வழியினருடன் கலகம், கருத்து வேற்றுமை அரச அதிகாரிகள் வருதல், புதிய பொறுப்புகள் என்பன வரும். பொருள்வரவு வசீகரப் பேச்சு, தோல் வருத்தம், மனச்சஞ்சலம் என்பன வரும். பாதுகாப்புத்துறை, நிதித்துறை, குருத்துறை போன்ற துறையினர்களுக்கு மாறறங்களும், நன்மைகளும் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்: சனி.*

## கன்னி

தடியடி முண்டனுக்கு தயிரும், சோறும் - பாடுபடுகின்றவனுக்கு வெறும் பிளேன்ரீ மட்டும்தான். இது தான் இன்று நடக்கிறது. ஏதோ கஷ்டப்படும் விதி என தொழில் ஸ்தானத்தில் மனப்புழுக்கம் ஏற்படல், எதிர்பாராத உடல்நிலைத் தாக்கம், நண்பர்கள், அயலவர்களின் உதவிகள் கிடைக்கும். இடமாற்றங்களால் நன்மைகள் ஏற்படல் என்பன ஏற்படும். சளி, கைகால் பிடிப்பு, நாரிநோ, வாத உளைவு, மூலவருத்தம் என்பன வருத்தல். செய்தித்துறை, மருந்துத்துறை, பிரயாணத்துறை, குருத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்ட நாள்: சனி.*

## துலாம்

மண்ணெண்ணெய், பெற்றோல், கரண்ட் எல்லாம் கிடைக்கிறது. அதற்காக அளவு மீறிப் பாவிக்காமல் அளவுடன் பாவித்து மிச்சப்படுத்துவோம் என்ற உறுதி யாருக்கு வருகின்றது? தொழில் ஸ்தானத்திலும் நிதானமான போக்கு, இடமாற்றம் அல்லது பொறுப்புமாற்றம், குடும்பச் செலவுகள் இழப்புகள் வரலாம். கருத்து வேற்றுமை வரலாம். எதிரிகளை வெல்லுதல் வயிற்றுநோ, தலைவலி, பயம், யோசனை, உஷ்ணபீடைகள், வைத்தியச் செலவு, அலைச்சல் என்பன வரும். ரீ.வி., டெக், சினிமா, இசைத்துறை, குருத்துறை, ஹோட்டல்துறை, போக்குவரத்துத்துறை, செய்தித்துறை போன்ற துறையினர்களுக்கு பல மாற்றங்கள் ஏற்படும் பலன்கள் காணப்படுகின்றன.

*அதிர்ஷ்ட நாள்: சனி.*

## விருச்சிகம்

நகைச்சுவையாகப் பேசித் தாம் துன்பப்பட்டு மற்றவர்களைச் சிரிக்க, சிந்திக்க வைக்கும் நடிகர்கள் அவர்களின் வாழ்க்கை பரிதாபமாக முடிவுறுவதை பார்ப்பதில்லையா? தொழில் ஸ்தானத்திலும் உங்கள் கஷ்டங்களை மறைத்து கருத்துடன் மற்றவர்களைச் சிரிக்கவைப்பீர்கள். புதிய சிந்தனைகள், பேச்சுச் சாதுரியம், தருமசிந்தனை, புதியவர்களின் வரவு, குடும்பச் சிறப்பு, தூரதேசச் செய்திகள், கிருமித்தாக்கம், மூக்கு, தொண்டை வருத்தம், நரம்புப் பலவீனம், சலவருத்தம் என்பன வரும். எண்ணெய்த்துறை, இரும்புவேலை, வியாபாரம், மருநதுத்துறை போனற துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரித்தபடி இருக்கும்.

*அதிர்ஷ்ட நாள்: சனி.*

## தனுசு

உலகைத் திருத்த ஒரு பயநிலையில்தான் எதையும் செயற்படுத்த வேண்டும் போலிருக்கிறது. அன்புக்குப் பதிலில்லை. அதிகாரத்திற்குப் பதிலளித்துத்தான் தீரவேண்டியிருக்கின்றது. தொழில்ஸ்தானத்தில் அன்பாக இருப்பீர்கள். அதிகார உணர்வு, புதிய நட்பு, தூரத்துச் செய்திகள், பிறருக்கு உதவிகள் செய்தல், வசீகரப் பேச்சு, புடைவை, நகைச் செலவுகள் அதிகரித்தல், இடுப்புவலி, எலும்புநோ, வயிற்றுநோ சிலருக்கு அல்சரால் தொல்லைகள் என்பனவும் வாய்வுத் தொல்லையும் அதிகரிக்கும். ஆலயத் திருப்பணி, வியாபாரத்துறை, அரசியல்துறை, குருத்துறை போன்ற துறையினர்கள் ஆதாயம் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்: ஞாயிறு, சனி.*

## மகரம்

காகம் செய்தியுடன் வந்து கத்தும், ஏன் சாப்பாட்டு வேளை தன்னினத்தவர்களை எல்லாம் கூப்பிட்டு விருந்து கொடுக்கும். மனிதர்கள் சாமர்த்திய வீடு, கலியாண வீடு, விருந்துகள் செய்கிறார்கள். புதிய செய்திகளும் கொண்டு வருவார்கள். நீங்களும் புதிய செய்திகளை தொழில் ஸ்தானத்தில் விமர்சித்து பலரின் ஆதரவையும் எதிர்ப்புக்களையும் பெறுவீர்கள். எதிரிகளுடன் நிதானம், குடும்பப் பொறுப்பு, தூரத்துச் செய்திகள் வரும். மனக்குழப்பம், நரம்புப் பலவீனம், கைகால் தாக்கம், மூட்டுவலி, தலைவலி என்பனவரும். சினிமாத்துறை, ரீ.வி., டெக், கொம்பியூட்டர்துறை, குருத்துறை, அரசியல்துறை, விடுதி, ஹோட்டல் துறையினர் அதிக இலாபங்கள் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்: சனி.*

மகாதேவா ஜோதிடம்

## கும்பம்

மனிதர்களிடம் ஏற்படும் சந்தேகங்களை நீக்க மிகப் பிரயத்தனங்கள் செய்யவேண்டும். தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகள் சந்தேகப்படுவார்கள். புதிய பொறுப்புக்களை ஏற்காதீர்கள். ஏற்றால் இழப்பு, கலக்கம் வரும். அடிக்கடி மனப்பயம் ஏற்படும். தெய்வ வழிபாடு முக்கியமாகும். எதிர்ப்பாலாருடன் நிதானமாக நடக்கவும். ஆடை ஆபரண வரவு சிலருக்குக் கிடைக்க வாய்ப்பு உண்டு. கால் வருத்தம், நீர் வடிதல், தலையிடி, உஷ்ண பீடைகள், சலவருத்தங்கள் கொடுக்கும். குருத்தொழிலில் பதற்றநிலை தோன்றும். அரசியல்துறை, வியாபாரத்துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்: சனி.*

## மீனம்

பொருளாதாரச் சீர்தூக்கல், உலகத்தில் பொருள்நிலை பார்த்துத் தான் கணிப்பீடுகள் நடக்கின்றன. எனவே, உங்கள் தொழில்ஸ்தானத்தில் நிதானமாக இருங்கள். மேலதிகாரிகளின் கண்காணிப்பு மேலிடும். தொழிலில் சிறப்பு, பழைய பணவரவு கிடைக்கும். புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்துவீர்கள். திடீர் பிரயாண வாய்ப்பு கிடைக்கும். நற்பலன் அதிகரிக்கும். கால் வருத்தம், சளித்தொல்லை, தலையிடி, மறதி கொடுக்கும். மருந்துத்துறை, வியாபாரத்துறை, குருத்துறை போன்ற துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்: சனி.*



**பியூஜி புகைப்படச்சுருள்களை இலங்கையில் இறக்குமதி செய்து விற்பனை செய்யும் ஹேலிஸ் நிறுவனம் கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் நடத்திய இருவேறு நிகழ்வுகளில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.**

**வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற புகைப்படக் கண்காட்சியை யாழ்.வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் என்.வரதராஜா திறந்துவைப்பதை முதலாவது படத்திலும் -**

**லொயலாஸ் மண்டபத்தில் நடைபெற்ற புகைப்படப் பிடிப்பாளர்களுக்கான கருத்தரங்கில் ஹேலிஸ் நிறுவனத்தின் வர்த்தக முகாமையாளர் யூட் சில்வா உரையாற்றுவதை இரண்டாவது படத்திலும் காணலாம். மேற்படி இரு நிகழ்வுகளிலும் கலந்துகொண்ட பிரமுகர்களையும் படங்களில் காணலாம்.**

**(எ-8)**

# சமய சந்நிதிகளில்

காரைநகர்,ஜூலை13

காரைநகர் ஈழத்துச்சிதம்பர ஆனி உத்தர நடேசர் அபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு 2 மணி முதல் ஆரம்பமாகி மறுநாள் திங்கட்கிழமை அதிகாலை ஆனி உத்தர தரிசனம் இடம்பெறவுள்ளது.

திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து நடேசர் திருவீதி உலா வரும் காட்சி இடம்பெறும்.

இந்த இரு தினங்களும் யாழ். பஸ்தரிப்பு நிலையத்தில் இருந்து ஆலயம்வரை நேரடி பஸ் சேவை நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-73)

★ ★ ★

வடமராட்சி,ஜூலை13

கரணவாய் மூத்தவிநாயகர் கோயில் வருடாந்த மஹோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும் இம்மஹோற்சவத்தின் ரதோற்சவம் எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமையும், தீர்த்தோற்சவம் மறுநாள் 23ஆம் திகதி செவ்வாய்க் கிழமையும் இடம்பெறும். (எ-173)

★ ★ ★

சண்டிலிப்பாய்,ஜூலை13

பண்டத்தரிப்பு காலையடி ஞான வேலாயுத முருகன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளது.

இம்மாதம் 24ஆம் திகதி சங்காபிஷேகம், விசேட பூசை, திருக்கலியாணம் ஆகியன நடைபெறவுள்ளன. (எ-135)

★ ★ ★

நவாலி அந்திரான் முருகமூர்த்தி ஆலயத்திற்கு புதிதாக வார்க்கப்பட்ட முருகன் வள்ளி, தெய்வானை உருவசிலைகளை ஊர்வலமாக எடுத்து வரும் நிகழ்வு இன்று பிற்பகல் 3 மணி தொடக்கம் இடம்பெறவுள்ளன. (எ-100)

### காயத்திரி பீடத்தில் சமய தீட்சை

மீசாலையில் அமைந்துள்ள ஸ்ரீ காயத்திரி காமகோடி பீடத்தில் இன்று சனிக்கிழமை 100 சைவச் சிறுவர்களுக்கு சமய தீட்சை வழங்கப்படவுள்ளது. பீடாதிபதி, சுவாமி ஸ்ரீ ராஜ்குமார் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் சிவஸ்ரீ க.கிருபானந்தக்குருக்கள் தீட்சையை வழங்கவுள்ளார். (ஓ-9)

### யுவதியிடம் சேஷ்டை; வாலிபருக்கு அடி உதை

யாழ்ப்பாணம்,ஜூலை13

ஒழுங்கை ஒன்றினுள் மக்கள் நடமாட்டம் இல்லாத சமயம் சென்று கொண்டிருந்த இளம்பெண்ணை பாலியல் இம்சைக்குள்ளாக்கியவர், அவ் ஒழுங்கையால் வந்த வேறு சிலரால் அடித்து நையப்புடைக்கப்பட்டார்.

அந்த நபர் தனது அடையாள அட்டையையும், சைக்கிளையும் அவ்விடத்திலேயே விட்டுவிட்டுத் தப்பி ஓடினார்.

கோப்பாய் மத்தியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் கோண்டாவிலைச் சேர்ந்த இளைஞரே பொதுமக்களால் நையப் புடைக்கப்பட்டவராவார். பாதிப்பிற்குள்ளான பெண்ணின் தந்தை இது பற்றி கோப்பாய் பொலீஸில் முறைப்பாடு செய்துள்ளார். (ஓ-15)

## மாணிக்கவாசகர் குருபூசை நிகழ்வுகள்

வலிகாமம் தெற்கு,ஜூலை13

உடுவில் இந்து இளைஞர் மன்றம் நடத்தும் மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை நிகழ்வுகள் இன்று மாலை 4 மணிக்கு முருகமூர்த்தி ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை மாணவர்களின் பஜனை, முன்னாள் அதிபர் கா.கணேசதாசன் நிகழ்த்தும் சமயச் சொற்பொழிவு என்பன சிறப்பு நிகழ்வுகளாக இடம்பெறும். (எ-152-17)

☆ ☆ ☆

யாழ்.சைவபரிபாலனசபை நடத்தும் மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை நிகழ்வுகள் இன்று காலை 9.30 மணிக்கு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளன. (எ)

☆ ☆ ☆

பிரான்பற்று கலைமகள் வித்தியாலயத்தில் இன்று காலை 7.45 மணி முதல் சமயகுரவர் நால்வரின் உருவச்சிலை பிரதிஷ்டையும், மணிவாசகர் சுவாமிகளின் குருபூசையும் நடைபெறவுள்ளன.

மாணவர்களின் கலை நிகழ்வுகள், செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன், அருள்மொழியரசு வசுமாரசாமி ஆகியோரின் சமயச் சொற்பொழிவு மற்றும் சிற்ப ஓவியக் கலைஞர்களின் கௌரவிப்பு என்பன சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம்பெறும். (எ)

☆ ☆ ☆

சுழிபுரம்,ஜூலை13

பனிப்புலம் அம்பாள் ஆலயத்தில் இன்று மாணிக்கவாசகர் குருபூசை தின நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

திருவாசக முற்றோதல் காலை முதல் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறும். (எ-28)

## ஜனாதிபதி வரவ[illegible] வாகனங்கள்:
# சரியான தகவல் தராவிட்டால் வழக்குகள் தொடருவோம்!
## அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க கூறுகிறார்

கொழும்பு,ஜூலை13

"ஜனாதிபதியினால் கொண்டு வரப்பட்ட குண்டு துளைக்காத வாகனங்கள் தொடர்பாக சரியான தகவல்கள் தெரிவிக்கப்படவேண்டும். அல்லது ஜனாதிபதியின் செயலாளர் மீதும் நிதி அமைச்சின் செயலாளர் மீதும் வழக்குத் தொடரப்படும் புதிய சட்டத்திருத்தங்கள் கொண்டு வரப்பட்ட பின்பு ஜனாதிபதி மீதும் வழக்கு தொடரப்படும்" என்று அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க கூறினார்.

நேற்றுமுன்தினம் அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டின்போது அமைச்சர் எஸ். பி.திஸாநாயக்க இவற்றைக் கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

"குண்டு துளைக்காத வாகனங்கள் தொடர்பாக ஜனாதிபதி கூறியிருக்கும் பதிலை ஏற்றுக்கொள்ள முடியாது. அமைச்சரவை உபகுழுவின் கேள்விகளுக்கும் பதிலளிக்கவில்லை. இந்த விடயத்தில் ஜனாதிபதி தெளிவாகப் பதிலளிக்க வேண்டும். அல்லது சம்பந்தப்பட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

"2கோடி ரூபாவுக்கு மேலாகச் செலவு செய்யும்போது அதற்கான அமைச்சரவை அனுமதிபெறவேண்டும். கேள்விப் பத்திரம் கோரப்பட்டு அதற்கு நாடாளுமன்றமும் அனுமதி வழங்கவேண்டும்.

"இவ்வாறான எந்தவொரு நடைமுறையும் இல்லாமல் இரண்டரைக் கோடி ரூபா செலவில் வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இதற்கான பணத்தை ஹொங்கொங்கில் உள்ள ஒரு தரகர் நிறுவனத்திற்கு செலுத்துமாறு நிதி அமைச்சின் செயலாளர் கடிதம் மூலம் அறிவித்திருக்கிறார். இது சட்டத்திற்குப் புறம்பான ஒரு செயல்.

"எந்த அடிப்படையில், இந்த ஹொங்கொங் நாட்டு தரகர் நிறுவனத்தின் ஊடாக வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டன என்பது இங்கு கேள்வியாக உள்ளது" என்றார் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க.

இந்த விடயம் தொடர்பாக அமைச்சர் ரவி கருணாநாயக்க கூறுகையில்:-

இந்த வாகன விவகாரத்தை 'அரசியல் பழிவாங்கல்' என்று ஜனாதிபதி கூறியுள்ளார். இது முற்றிலும் தவறான ஓர் அபிப்பிராயம். விசேடமாகக் கொண்டுவரப்பட்ட வாகனங்களின் பதிவுகளைத்தான் நாம் கேட்டோம். இந்த விவகாரம் தொடர்பான அமைச்சரவை உபகுழுவும் ஜனாதிபதியின் பணிப்புரையில்தான் அமைக்கப்பட்டது.

ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு மட்டும் பதிலளித்தால் போதும் என்று கூறியுள்ளார். அதேபோன்று ஊழல்களைச் சுட்டிக்காட்டும் தார்மீகப் பொறுப்பு எமக்குண்டு என்று அவர் கூறினார். (ஒ)

# நாட்டை 4 வலயங்களாகப் பிரித்து 'அப்பீல்' நீதிமன்றங்கள் அமைப்பு!
## அமைச்சரவை தீர்மானம்

கொழும்பு,ஜூலை13

நாடு நான்கு நீதிமன்ற வலயங்களாகப் பிரிக்கப்பட்டு அவை ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே மேல் முறையீட்டு(அப்பீல்) நீதிமன்றங்கள் ஸ்தாபிக்கப்படும்.

இதன்மூலம், மேல் நீதிமன்றத் தீர்ப்பை ஆட்சேபித்துத் தாக்கல் செய்யப்படும மேனமுறையீட்டு வழக்குகளுக்கு முடிவு காண்பதற்கும் இடையில் ஏற்படும் நீண்ட காலதாமதம் பெருமளவில் குறைக்கப்படும்.

அமைச்சரவைப் பேச்சாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரீஸ் இத்தகவலைக் கூறினார். நேற்றுமுன்தினம் தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அமைச்சரவை முடிவுகளை வெளியிட்ட போது இதனை அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

பிராந்திய ரீதியாக மேல் முறையீட்டு நீதிமன்றங்களை ஏற்படுத்துவது தொடர்பாக சட்டத்தரணிகள் சங்கங்களுடன் கலந்தாலோசிக்கப்படுகிறது. இந்தப் புதிய முறைக்கு பிரதம நீதியரசரும் விருப்பம் தெரிவித்திருப்பதாக அறிகிறோம்.

உயர் நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்ட ஒரு வழக்கு, மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு வருவதற்கு கால இடைவெளி அதிகமாக உள்ளது. புதிய வலய மட்டத்திலான மேல்முறையீட்டு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டால் இந்தக் கால விரயத்தைத் தவிர்க்கலாம். அதேவேளை, அந்தந்தப் பிரதேசங்களில் உள்ள சட்டத்தரணிகள் மேன்முறையீட்டு வழக்குகளிலும் ஆஜராகித் தமது தொழிலை மேலும் விருத்தி செய்துகொள்ளலாம் - என்றார் பேராசிரியர் பீரிஸ். (ஒ)

# 'வற்' வரிகள் சட்டமூலம் குறித்து ஜூலை 25ஆம் திகதி விவாதம்

பல்வேறு விமர்சனங்களுக்கும் சர்ச்சைகளுக்கும் உள்ளான 'வற்' (பெறுமதி சேர் வரி) வரிகள் சட்ட மூலம் எதிர்வரும் 25ஆம் திகதி நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

அதேவேளை, உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு எதிரான நம்பிக்கை இல்லாப் பிரேரணை தொடர்ந்து நான்கு நாள்கள் நடைபெறும்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இவை குறித்து ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

சபாநாயகர் ஜோஸப் மைக்கல் பெரேரா தலைமையில் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற்றது.

ஆளும் கட்சியின் சார்பில் நீதி அமைச்சரும் சபை முதல்வருமான டபிள்யூ.கே.எம்.லொக்கு பண்டார, எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சார்பில் இரா.சம்பந்தன், ஜே.வி.பியின் சார்பில் விமல் வீரவன்ஸ, ராஜா கொலுரே எம்.பி. ஆகியோர் கலந்துகொண்டனர்.

'வற்' வரி சட்டமூலம் நீண்டகாலமாக இழுபறி நிலையில் இருப்பதால் அதற்குத் தீர்வுகாணப்பட வேண்டியதன் அவசியத்தை அமைச்சர் லொக்கு பண்டார அங்கு வலியுறுத்தினார். அமைச்சரின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட உறுப்பினர்கள், அது தொடர்பான விவாதத்தை எதிர்வரும் 25ஆம் திகதி காலை 10.00 மணி முதல் மாலை 5.30 மணிவரை ஒரே தினத்தில் நடத்தி முடிப்பதெனத் தீர்மானித்தனர்.

அதைத் தொடர்ந்து உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு எதிராக எதிர்க்கட்சிகளால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாக நான்கு நாள்கள் விவாதம் நடத்த இணக்கம் காணப்பட்டது. ஆனால், அதற்கான திகதிகள் தீர்மானிக்கப்படவில்லை.

உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் எதிர்க்கட்சிகளின் தலைவர்களான மஹிந்த ராஜபக்ஷ, தினேஷ் குணவர்த்தன, ராஜா கொலுரே, விமல் வீரவன்ஸ உட்பட 24 எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கையெழுத்திட்டிருக்கின்றனர்.

நாட்டில் குற்றச் செயல்கள் நாளுக்குநாள் பெருகிவருவதாகவும், இதனால் பொதுமக்கள் சுதந்திரமாக வாழும் உரிமை மறுக்கப்பட்டிருப்பதாகவும், தனது கட்டுப்பாட்டிலுள்ள பொலீஸ் திணைக்கள அதிகாரிகளைப் பயன்படுத்தி எதிர்த்தரப்பினரை அடக்கி சிவில் சட்டத்தைச் சீர்குலைப்பதாகவும் அமைச்சருக்கு எதிரான பிரேரணையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (ஒ)

## கவிதைநூல் வெளியீட்டுவிழா

யாழ்ப்பாணம்,ஜூலை13

க.தணிகாசலம் எழுதிய 'வெளிப்பு' கவிதை நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல், 3 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கவிஞர் இ.முருகையன் தலைமையில் நடைபெறும். இந்த விழாவில் யாழ்.பல்கலைக்கழக தமிழ் துறைத்தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் வெளியீட்டுரையையும், யாழ்.பல்கலைக்கழக மெய்யியல் துறைத் தலைவர் கலாநிதி சோ.கிருஷ்ணராஜா, கவிஞர் கல்வயல் வே.குமாரசாமி ஆகியோர் மதிப்பீட்டுரையையும் நிகழ்த்துவர். (எ-ரி)

## பேராதனை வெளிவாரி பரீட்சைகள்

யாழ்ப்பாணம்,ஜூலை13

பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகளான கலை முதற்தேர்வு மற்றும் இறுதித் தேர்வுகளில் தோற்றும் யாழ்.மாவட்டப் பரீட்சார்த்திகளுக்கான பரீட்சைகள் யாழ். பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் அடுத்த மாதம் 16ஆம் திகதி தொடக்கம் 26ஆம் திகதிவரை நடைபெறவுள்ளன.

இப்பரீட்சைகளுக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் மற்றும் கால அட்டவணை என்பன பேராதனை வெளிவாரிப் பரீட்சைப் பகுதியால் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக் யாழ்பல்கலைக் கழகப் பதிவாளர் தெரிவித்துள்ளார். (ஒ-ரி)

## காணி ஆணையாளர் யாழ்.வருகிறார்

யாழ்ப்பாணம்,ஜூலை13

வடக்கு-கிழக்கு மாகாணக் காணி ஆணையாளர் திருமதி எஸ்.தனுஜா எதிர்வரும் 16ஆம் திகதி செவ்வாய்க் கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார்.

அன்றையதினம் காலை 10 மணிக்கு யாழ்.செயலகத்தில் கூட்டமொன்றை இவர் நடத்தவுள்ளார். சகல பிரதேச செயலகங்களிலும் காணி தொடர்பான விடயங்களைக் கையாளும் இரு அதிகாரிகளை இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு யாழ்.அரசாங்க அதிபர் க.சண்முகநாதன் கேட்டுள்ளார். (ஒ-10)

## ஓவியக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஜூலை13

கொழும்பு திருமறைக் கலாமன்றம் சமாதானத்தை வலியுறுத்தும் ஓவியக் கண்காட்சி ஒன்றினை எதிர்வரும் 20ஆம், 21ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடத்தவுள்ளது.

நக்கா வீதியிலுள்ள கவின் கலைகள் பயிலகத்தில் நடைபெறவுள்ள இந்தக் கண்காட்சியில் கடந்தகால யுத்தத்தின் பிரதிபலிப்புகள் மற்றும் சீமாதான முயற்சிகள் தொடர்பான முக்கிய நிகழ்வுகள் ஓவியங்களாக வரையப்பட்டு காட்சிப்படுத்தப்படவுள்ளன.

இக்கண்காட்சிக்கான ஏற்பாடுகளை யாழ்.திருமறைக்கலாமன்றம் மேற்கொண்டுள்ளது. (ஒ-4)

## தொலைக்கல்வி செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஜூலை13

யாழ்.இந்துக் கல்லூரியில் இயங்கும் தொலைக் கல்வி நிலையத்தில் பயிற்சிபெற்று வருகின்ற ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் சகல போதனாசிரியர்களையும், ஆசிரிய மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு சிரேஷ்ட போதனாசிரியர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கீழ்க்காணும் 9 பேரும் தமக்குரிய சான்றிதழ்களை ஞாயிற்றுக்கிழமைகளில் தொலைக் கல்வி நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சிவபாலசேகரம் சிவயோகம், சிவசுப்பிரமணியக்குருக்கள் ரஞ்சினி, சந்திரரஜனி நடராசா, வசந்தகுமாரி யோகலிங்கம், கனகரட்ணம் உதயநிலா, முனியாண்டி செல்வம, கேதீஸ்வரி தனபாலசிங்கம், ரட்ணசபாபதி ரவீந்திரன், விஜயபாலன் வான்மதி ஆகியோரே சம்பந்தப்பட்டவர்களாவர். (ஒ-10)

## றோட்டரிக் கழக கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூலை13

சுன்னாகம் றோட்டரிக் கழக உறுப்பினர்களுக்கான அவசர கலந்துரையாடலொன்று இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு கழக அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

முக்கிய விடயங்கள் பல ஆராயப்படவுள்ளதால் கழக உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு தலைவர் கேட்டுள்ளார். (ஒ-9)

## நினைவு மலருக்கு ஆக்கங்கள் தர வேண்டுகோள்

வடமராட்சி,ஜூலை13

தமிழ்த் தலைவர்களில் ஒருவரான உடுப்பிட்டிச் சிங்கம் அமரர் மு.சிவசிதம்பரம் நினைவாக நெல்லியடி கட்டைவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் மலர் ஒன்றை வெளியிடவுள்ளது.

இந்நினைவு மலருக்கு அன்னாரைப் பற்றிய கட்டுரைகள், அரசியல் தலைவர்களின் நினைவுரைகளைத் தந்துதவுமாறு பொதுமக்களை சங்கம் கேட்டுள்ளது. (ஒ-173)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூலை13

கடந்தகால யுத்த அனர்த்தங்களினால் சேதமடைந்த தென்மட்டுவில் வேரற்கேணி கந்தசுவாமி ஆலயத்தின் புனருத்தாரணம் மற்றும் பூசையை மீண்டும் ஆரம்பித்தல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கலந்துரையாடலில் ஆலய நிர்வாக சபை உறுப்பினர்களையும், உபயகாரர்கள் மற்றும் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-ரி)

## மணல் அகழத்தடை

நவாலி,ஜூலை13

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த ஆனைக்கோட்டை கிராம சேவையாளர் பிரிவில் அனுமதியின்றி சொந்தக் காணிகளிலோ தனியார் காணியிலோ மணல் அள்ளுவது சண்டிலிப்பாய் பிரதேச செயலரினால் தடைசெய்யப்பட்டுள்ளது.

மேலும் கல்லுண்டாய் காக்கை தீவு பிரதேசத்திலும் அனுமதியின்றி மணல் அள்ளுபவர்கள் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்படுவார்களென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-100)

## திறமைகாண் பரீட்சை

சண்டிலிப்பாய்,ஜூலை13

பொதுச் சுகாதாரப் பரிசோதகர் வகுப்பு 2-பி பிரிவைச் சேர்ந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை அடுத்த மாதம் 25ஆம் திகதி நடைபெறவுள்ளது. இப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 22ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கப்படவேண்டும் என்று கொழும்பிலுள்ள சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம் விடுத்துள்ள சுற்று நிருபம் ஒன்றில் அறிவித்துள்ளார். (ஒ-135)

## பிந்துனுவெவ படுகொலை வழக்கு
# சம்பவ இடத்துக்குப் போனபோது கட்டடங்கள் எரிவதைக் கண்டேன்!
## முகாம் பொறுப்பதிகாரி சாட்சியம்

"சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு விரைந்தபோது கட்டடங்கள் எரிந்து கொண்டிருந்தன. ஏதோ அசம்பாவிதம நடந்திருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டேன்."

பிந்துனுவெவ படுகொலைகள் வழக்கு விசாரணை நேற்றுமுன்தினம் கொழும்பு மேல் நீதிமன்றில் நடைபெற்றபோது, அங்கு சாட்சியமளித்த பிந்துனுவெவ முகாம் பொறுப்பதிகாரி மஹாநாம பெரேரா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த 2000ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 25ஆம் திகதி பிந்துனுவெவ தடுப்பு முகாமில் இடம்பெற்ற படுகொலைகளில் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த 41 இளைஞர்களில் 27 பேர் மரணமாகினர்; 14 பேர் படுகாயமடைந்தனர்.

இப்படுகொலைகளில் சம்பந்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்பட்ட 42 பேருக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களம் வழக்குத் தாக்கல் செய்திருந்தது.

இவ்வழக்கு மேல்நீதிமன்ற நீதிபதிகள் மூவர் கொண்ட குழுவினால் விசாரணை செய்யப்படவேண்டுமென ஏற்கனவே சட்டமா அதிபர் கமலசபேசன் சிபாரிசு செய்திருந்தார்.

அதனையடுத்து மேல் நீதிமன்ற நீதிபதிகள் சரத் அம்பேபிட்டிய, எரிக் பஸநாயக்க, உபாலி ஆகிய மூவரும் நியமிக்கப்பட்டனர்.

தொடர்ந்து சாட்சியமளித்த மஹாநாம பெரேரா கூறியதாவது:-

பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் தங்கியிருந்தவர்கள் எல்லோருமே பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு பின் சரணடைந்தவர்கள். இவர்களில் சிங்கள இளைஞர்களும் இருந்தனர். ஆனால், அவர்கள்குறிப்பிட்ட காலத்திற்குப் பின் வெளியேறிவிட்டனர். சம்பவம் நடைபெற்றபொழுது 41 தமிழ் இளைஞர்கள் மாத்திரமே அந்த முகாமில் தங்கியிருந்தனர். 41 பேருக்கும் அவர்கள் சம்பந்தப்பட்ட விவரங்கள் அடங்கிய கோவைகள் இருக்கின்றன. அந்தக் கோவைகளின்படி 27 பேர் மரணம் அடைந்துள்ளனர்; 14 பேர் படுகாயமடைந்துள்ளனர் என்றும் அறிந்துகொண்டேன்.

படுகாயமடைந்த 14 பேரில் 13 பேர் அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர். ஒருவர் மாத்திரம் தற்போது தெல்லிப்பழை புனர்வாழ்வு முகாமில் இருக்கின்றார் - என சாட்சி தெரிவித்தார்.

சாட்சியமளித்த மஹாநாம பெரேரா தற்போது தெல்லிப்பழை புனர்வாழ்வு முகாமில் கடமை புரிகிறார்.

விசாரணையின்போது புனர்வாழ்வு ஆணைக்குழுவின் சார்பில் முகாமில் கடமையில் ஈடுபட்டிருந்த வை.கே. அபேரத்ன பண்டார என்பவரும் சாட்சியமளித்தார்.

அவர் தமது சாட்சியின்போது தாம் ஒக்ரோபர் மாதம் 19ஆம் திகதி விடுமுறையில் சென்று 24ஆம் திகதி முகாமிற்கு கடமைக்குத் திரும்பியதாகவும், 24ஆம் திகதி இரவுவரை அசம்பாவித சம்பவம் நடைபெறக் கூடிய சாத்தியக்கூறுகள் எதுவும் இருக்கவில்லையென்றும் தெரிவித்தார்.

மேலதிக விசாரணை இம்மாதம் 15ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

முதலாவது எதிரியின் சார்பில் சட்டத்தரணி சரீனாஜா பிரேமரட்னவும், 2ஆம், 3ஆம், 12ஆம், 34ஆம், 37ஆம், 41ஆம் எதிரிகளின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி தயா பெரேராவும், 34ஆம், 35ஆம், 38ஆம், 39ஆம் எதிரிகளின் சார்பில் சட்டத்தரணி செனரத் ஜயசுந்தரவும், 4ஆம், 31ஆம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி உதய ரோஹான் டி சில்வாவும் ஆஜராகியிருந்தனர்.

சட்டமா அதிபர் சார்பில் சட்டத்தரணி பிரசன்ன நாவான ஆஜராகி சாட்சியங்களை வெளிப்படுத்தினார். (ஒ)

## 31ஆம் நாள் நன்றி செலுத்தும் வழிபாடு

அமரர்

### பண்டிதர் தம்பிமுத்து செல்வரத்தினம்

*(ஓய்வுபெற்ற ஆசிரியர்)*

நமது குடும்பத்தின் இரத்தத்தின் இரத்தமாகவும் உள்ளத்தாலும், உருவத்தாலும் மாசுஅறவற வாழ்ந்து ஆண்டவர் சந்நிதியில் இன்புற்று வாழ்கின்றவரது நினைவு நாள் நிகழ்வு இன்று (13.07.2002) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் பி.ப.3 மணியளவில் நடைபெறுகின்றது. அதனால் அன்பர்கள், சுற்றத்தார் இதிற் கலந்து அவரின் ஆன்ம ஈடேற்றத்திற்கு பிரார்த்தனை செய்யுமாறு வேண்டுகின்றேன்.

*ஏழாலை வடக்கு,*
*ஏழாலை.* (C/22912)

- க.பாலசிங்கம் (மைத்துனர்).

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 19 - 07 - 1927

மறைவு 07 - 07 - 1997

### அமரர் சிற்றம்பலம் தளையசிங்கம்

திதி:13.07.2002

ஐந்தாண்டுகள் ஓடி மறைந்திடினும் தொடர்ந்து
உங்கள் பசுமையான நினைவுகளோடு வாழ்கின்றோம் நாம்.

*அராலி மத்தி,*
*வட்டுக்கோட்டை.* (5857)

*பிரிவால் துயருறும்:* மனைவி, பிள்ளைகள்.

## 25ஆவது ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 01 - 07 - 1920

உதிர்வு 13 - 07 - 1977

### அமரர் கதிர்காமு மார்க்கண்டு

ஆண்டுகள் இருபத்தைந்து கழிந்தோடியும்
ஆறவில்லை எம்துயரம் எம்மைவிட்டு
எம் குடும்பத்தின் குலவிளக்காய்த் திகழ்ந்தவரே!
நீர் செய்த குற்றமேதும் அறியோம் எம்வாழ்நாளில்
மனைவி மக்களை மாண்புடன் நேசித்தவரே!
மாநிலத்தில் நாம் தலைநிமிர்ந்து வாழ வைத்தவரே!
கள்ளம் கபடமற்ற கடிய நெஞ்சத்தால்
காணிக்கை ஆக்குகின்றோம் எம் கண்ணீர்ப் பூக்களை!

*"ராஜ்மலா"*
*மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்.* (5917)

வம்ச வாரிசுகளும், மருமக்களும்.

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 08 ✳ 12 ✳ 1949

ஆண்டவன் அரவணைப்பில் 15 ✳ 07 ✳ 1999

அமரர்

### தம்பித்துரை கமலநாதன்

(இயக்குநர், நொதேன் மோட்டர் வேக்ஸ்,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்)

*ஆண்டுகள் மூன்று சென்றாலும் ஆறவில்லை எம் துன்பம்!*
*ஆறுதல் கூறி அரவணைக்க உங்களைப் போல்*
*யாருளர் இப்புவியில்?*
*ஆண்டவன் அரவணைப்பில் இருந்து எங்களை*
*ஆதரிப்பீர்கள் என*
*ஆறுதலடைந்து உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*ஆண்டவனை வேண்டுகின்றோம்!*

*மிஷன் பாடசாலை வீதி,*
*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.* (5918)

- மனைவி, மக்கள், பெற்றோர், சகோதரர்கள்.

## கணித, விஞ்ஞான வினாடி வினாப் போட்டி

தென்மராட்சி,ஜூலை13

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளிலிருந்து கணித, விஞ்ஞான பாட வினாடி வினாப் போட்டிகளில் கலந்துகொள்ளும் மாணவர்களுக்கான எழுத்துப் பரீட்சை எதிர்வரும் 23ஆம் திகதி காலை 9.00 மணிக்கு நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம், வரணி மகா வித்தியாலயம், பளை மத்திய கல்லூரி ஆகியவற்றில் பரீட்சை மண்டபங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களை அந்தந்தப் பரீட்சை மண்டபங்களுக்கு அனுப்பிவைக்குமாறு சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் அதிபர்களை வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கேட்டுள்ளார்.(ஒ-117)

## ஆசிரியர் சிரமம்!

தென்மராட்சி,ஜூலை13

தென்மராட்சி கல்வி வலயத்தின் நிதிக் கிளை இன்னமும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயக் கட்டடத்தில் இயங்கி வருவதால் மீள இயங்கும் பாடசாலைகளில் கடமைபுரிவோர் தமது தேவைகளுக்கு நெல்லியடிக்குச் செல்லவேண்டியுள்ளது.

வலய நிதிக் கிளை இயங்குவதற்கென கட்டட வசதி வலய அலுவலகத்திற்கு அருகில் ஏற்படுத்திக் கொடுத்துள்ளபோதிலும் இன்னமும் இங்கு கொண்டுவரப்படாதது குறித்து ஆசிரியர்கள் கவலை தெரிவித்தனர். (ஒ-117)

## பணியாளர் தேவை

கால்நூற்றாண்டுக்கு மேலாக அரச வங்கியில் கடமையாற்றி ஓய்வுபெற்ற முகாமையாளர் ஒருவருக்கு சமையல் செய்வதற்கு பணியாளர் தேவைப்படுகின்றார். உணவு, உறையுள், போதிய ஊதியம் வழங்கப்படும்.

*தொடர்பு:*
ச.பாலசுந்தரம் B.A. (Hons)
இல.20, குறெசெற் லேன்,
கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (5921)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
**திருமதி யோசப்பின் ஜெபரெட்ணம்**
அவர்களின் அன்புத் தந்தையார்

### திரு.V.M.யோசவ்

அவர்களின் மறைவை ஒட்டி அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆன்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

யா/ திருக்குடும்ப கன்னியர்மடம்
(5929) அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள்.

## ஓராண்டு நீங்காத நினைவலைகள்



தோற்றம் 02 - 09 - 1950

மறைவு 24 - 06 - 2001

### அமரர் நவரத்தினம் கதிர்காமநாதன் (கிச்சான்)

திதி:ஆனிமாத பூர்வபக்கச் சதுர்த்தி 13.07.2002

ஆண்டொன்று சென்றதுவோ
ஆருயிரே நீர்மறைந்து
பூண்டதிதி சதுர்த்தியும்
பூர்வபக்கமானதுவே - எம்மை
வேண்டாத உறவென்று நீர்
விட்டகன்ற போதிலும் நாம்
மாண்டு மடியுமட்டும்
மறவாது உம் நினைவலைகள்!

லண்டன் மாநகரில் திடீர் சுகவீனத்தால் எம்மையெல்லாம் ஏங்கித் தவிக்கவிட்டு இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் பாதக் கமலங்களில் எங்கள் கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்கி அன்னாரது ஆத்மா சாந்தியுறப் பிரார்த்திக்கின்றோம்.

*தகவல்:*
*க.கணேசலிங்கம்,*
*கல்லூரி ஒழுங்கை, கொக்குவில்.*

- மனைவி, மகன், தாய், சகோதரர்கள், மைத்துனிமார், பெறாமக்கள் மற்றும் சுற்றத்தார். (5925)



## வடக்கு, கிழக்கில் கடந்த 50 ஆண்டுக்கும் கூடுதலாக மீன்பிடி தொழில்துறையில் முதல் இடத்தை பெற்றிருக்கும்

YANMAR

**YANMAR**
**MARINE DIESEL ENGINES**

### டீசல் இயந்திரங்களில் சிறப்புற்று விளங்குகிறது

ஆழ்கடல் மீன்பிடித்தலுக்கும் இழுவைப்படகுகளுக்கும்
நீண்டகாலம் பாவிப்பதற்கும் குறைந்த செலவில்
இயக்குவதற்கும் பொருத்தமான என்ஜின்கள்



- அதி உயர்தர தொழில்நுட்பத்தில் செய்யப்பட்டது.
- குறைந்த எரிபொருளில் சிறப்பாகவும் வேகமாகவும் படகுகளை இயங்க வைக்கக் கூடியது.
- உதிரிப்பாகங்களை இலகுவில் வாங்கமுடியும்.
- விற்பனைக்கு பின்னர் சிறந்த சேர்விஸ் வசதிகள் அளிக்கப்படும்.

**BROWNS GROUP INDUSTRIES LIMITED**
292, Galle Road, Colombo 3,
Tel: 301381-3 Fax: 565621

(C/22913)

# இன்றைய நிகழ்வுகள்

பருத்தித்துறை ஐக்கிய வி.கழகம் வடமராட்சிக்குட்பட்ட கழகங்களுக்கிடையில் பருத்தித்துறை திக்கமுனை மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

மாலை 4 மணி - நவிண்டில் கலைமதி 'ஏ' அணி எதிர் அல்வாய் நண்பர்கள் வி.க. 'ஏ' அணி.

மாலை 5 மணி - பருத்தித்துறை ஐக்கிய வி.க.'பி' அணி எதிர் கரணவாய் கொலின்ஸ் வி.கழகம். (ம-ரி)

☆ ☆ ☆

ராஜன் கதிர்காமர் வெற்றிக் கிண்ணத்திற்காக வருடாந்தம் நடத்தப்பட்டுவரும் ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் 14 ஆவது போட்டி இன்று வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறுகின்றது.

இந்த ஆட்டத்தில் யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணக் கல்லூரி அணி விளையாடுகின்றது. (ம-ரி)

## சித்தமருத்துவ மாணவர் ஒன்றியம் அறிவித்தல்

சித்தமருத்துவ மானவர் ஒன்றிய வளர்ச்சி நிதிக்காக நாளை (14.07.2002) ஞாயிற்றுக்கிழமை இணுவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்தப்படவிருந்த யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இணைந்து வழங்கும் தாளம் இசை நிகழ்ச்சி தவிர்க்கமுடியாத காரணத்தால் நிறுத்தப்பட்டுள்ளது என்பதை மிக்க மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.

இந்நிகழ்ச்சிக்காக விற்பனை செய்யப்பட்ட சீட்டுக்கள் எதிர்வரும் ([illegible].07.2002) ஞாயிற்றுக்கிழமை யாழ். கைலாசபதி கலை அரங்கில் நடைபெறும் [illegible] செல்லுபடியாகும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சித்தமருத்துவ மாணவர் ஒன்றியம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(5943)


## விஷேட பஸ் சேவை
### கதிர்காம தீர்த்த உற்சவ தரிசனமும் சுற்றுலாவும்

சென்றுவரும் இடங்கள் -

1. வெந்நீர்க் கிணறு, கோணேசர் ஆலயம் - திருகோணமலை
2. முத்துமாரி அம்மன் ஆலயம் - மாத்தளை
3. தலதா மாளிகை - கண்டி
4. தேசியப் பூங்கா - பேராதனை
5. ஆஞ்சநேயர் ஆலயம் - றம்பொடை
6. சீதைக்கோயில் - நுவரெலியா
7. தேசியப் பூங்கா - கக்கல
8. இராவணன் நீர்வீழ்ச்சி
9. கதிர்காமம்
10. கொழும்பு
11. முனீஸ்வரம் - சிலாபம்

பயணக் கட்டணம் ரூபா 3,000/- மாத்திரம்!

ஆசனப் பதிவிற்கான இறுதி நாள் - 18.07.2002

ஆசனப் பதிவிற்கும் மேலதிக விவரங்களுக்கும்:-

டீலக்ஸ் கொமினிகேசன்

இல. 24, கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.
தொ.பே.எண்: 021-3568, 021-3569.

(5937)


## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### சோமசுந்தரம் சஞ்ஜீவன்

(யாழ். இந்து உயர்தர கணித மாணவன்)

தோற்றம் : 26-07-1982
மறைவு : 13-07-2000

உன்துயர் என்றுமே எம்மை விட்டு நீங்காது
ஆத்மா சாந்தி அடைய
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

28, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(5951)

## நன்றி நவில்கின்றோம்



### திருமதி. மரியம்மா பத்திநாதர்

(இளைப்பாறிய ஆசிரியை, அளவெட்டி)

எமது தாயாரின் மரணச்செய்திகேட்டு எமக்கு அனுதாபச் செய்திகள் அனுப்பி வைத்தவர்களுக்கும் எமது இல்லத்துக்கு வந்து எமக்கு ஆறுதல் கூறி அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் அவரின் இறுதிச்சடங்குகளில் கலந்துகொண்டு அவரின் ஆன்ம இளைப்பாற்றுக்காகச் செபித்த எமது ஆயர், குருக்கள், அருட்சகோதரிகள், அருட்சகோதரர்கள், எமது உறவினர்கள், நண்பர்கள் ஆகிய உங்கள் அனைவருக்கும் எமது இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அலுக்கை,
அளவெட்டி.

திரு.ஞா.பத்திநாதர் குடும்பத்தினர்,
அருட்திரு.ப.யோ.ஜெயரட்ணம்,
அருட்சகோதரி புளோறினா.

(5948)


CALL
Computer Assistance, Language Learning
For Grade 4 to 10 School Students
Saturday & Sunday
For further details
Director
STP T.P. 2674

விற்பனைக்கு
மான்மார்க் ஓடுகள் எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
பூங்கனிச்சோலை,
முடமாவடி. T.P. 2976
(C/22924)

அறிவொளி - NALLUR.
A/L 03 சேதன இரசாயனம்
(தனிப்பட்ட வகுப்பு - பிரிவு II)
S.கருணாகரன் B.Sc.
ஆரம்பம்: 13.07.02 Sat. 12.30
எழுதுவினைஞர் பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்புகள்
திரு.செ.திருநாவுக்கரசு
ஆரம்பம்: 20.07.02 9.00 a.m.
Sat., Sun. 9.00 - 12.00
(5934)

ஜோ. எகட்டனின் ஜெசித்தாரா
வழங்கும்
* சிக்கன் புரியாணி
* தான் தோறி சிக்கன் உணவு வகைகள்
இப்பொழுது சுடச்சுட உணவுப் பெட்டிகளில் பெற்றுக்கொள்ளலாம்.
வழமையான உணவுப் பொதிகள் நண்பகல் 12மணிமுதல் 3 மணிவரை.
* முன்கூட்டிப் பதிவுசெய்து கொள்ளவும்.
ஜெசித்தாரா
11/3, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
(5941)

லஷ்சுமி இணுவில்.
அஜித், ப்ரியாகில், ரகுவரன்
சிட்டிசன்
தினசரி: 10.30, 2.30, 6.30 (ப.நே.)
(5903)

நாகம்ஸ் சுன்னாகம்
11.00, 3.30 மணி காட்சிகள்
சூர்யா, லைலா, ராஜ்கிரண் நடித்த
நந்தா
மாலை 6.30மணிக்கு மட்டும்
ஜேம்ஸ் பொண்ட் 007 நடித்த
THE WORLD IS NOT ENOUGH
(ஆங்கிலப்படம்)
(5931)

ராஜா யாழ்ப்பாணம்.
அஜித், ஜோதிகா, வடிவேல், ராதாரவி நடித்த
ராஜா
தினசரி 10.30, 2.30, 6.30
(C/22253)

நிறைஞ்சனாஸ் சங்கானை
ரஜனி, சிவாஜி, சௌந்தர்யா நடித்த
படையப்பா
காட்சிகள்: 11.00, 2.30, 5.30 (புதியநேரம்)
(C-22784)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி நாகரட்ணம் சோமசுந்தரம்
### (ரத்தினம்)

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகரட்ணம் சோமசுந்தரம் 08.07.2002 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா-ஆச்சிக்குட்டி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சரவணமுத்து சோமசுந்தரம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னம்மா, நாகம்மா, தில்லைநாயகி மற்றும் தில்லையம்பலம் (ஓய்வுபெற்ற ரிக்கற் பரிசோதகர்-இ.போ.ச.) ஆகியோரின் அன்புச் சகோதரியும் விஜயலக்ஷமி (ஆசிரியை, யாழ்/மானிப்பாய் மகளிர் கல்லூரி), தனலக்ஷமி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சற்குணரெட்ணம் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், நீர்ப்பாசனத் திணைக்களம்), ஸ்ரீசெந்தில்ராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் தட்சாயினி (2 ஆம் வருடம், கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்), கோகுலன் (முதலாம்வருடம், பொறியியற்பீடம், மொறட்டுவ பல்கலைக்கழகம்), அஜந்தாயினி (A/L உயிரியற்பிரிவு, யாழ். வேம்படி மகளிர் கல்லூரி), குணசீலன் (B.A.), அபினஜா (பிரான்ஸ்), ஆரண்யா (பிரான்ஸ்), ஆரணன் (பிரான்ஸ்), ஆதித்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் நாளை (14.07.2002) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரு.திருமதி விஜயலக்ஷ்மி சற்குணரெட்ணம்
திரு.திருமதி தனலக்ஷ்மி ஸ்ரீசெந்தில்ராஜா

"நாகதுவீபம்",
இணுவில் தெற்கு,
இணுவில்.

(5939)

## கந்தையா செல்வராசா
### (சீமெந்துக் கூட்டுத்தாபனம் - காங்கேசன்துறை)

கீரிமலை, போயிட்டியைப் பிறப்பிடமாகவும் கொல்லங்கலட்டி, வடலியடைப்பை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா செல்வராசா 11.07.2002 வியாழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் புஷ்பராணியின் அன்புக் கணவரும் கிருஷ்ணஜெயந்தி, விஜயகாந்தன், மனோகரி, சத்தியவாணி ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2002) சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் விளாவெளிமயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"பூம்புகார் இல்லம்",
இந்துக்கல்லூரி வீதி,
பண்டத்தரிப்பு.

தகவல்:
செ.கிருஷ்ணஜெயந்தி
(மகள்)

(5938)

## திருமதி முருகேசு பூலோகசுந்தரம்

ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி முருகேசு பூலோகசுந்தரம் நேற்று (12.07.2002) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பேப்பர் முருகேசு அவர்களின் அன்பு மனைவியும் ஸ்ரீகாந்தா (கனடா), குமாரகுலசிங்கம் (விசுவமடு), ராஜராஜேஸ்வரி (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கோசலாதேவி (கனடா), இந்திரா (விசுவமடு), யோகநாதன் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஸ்ரீகணேசன், ஸ்ரீகரன், லவன்யா, விதுர்சன், விமலன், வினேஸ், விஜிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2002) சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஓட்டுமடம் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
யோகநாதன்
(கண்ணன் - மருமகன்)

(5947)

## பொன்னம்பலம் சுப்பிரமணியம்
### (ஓய்வுபெற்ற விற்பனைத் திணைக்கள முகாமையாளர்)

மகாதனை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் தொம்பை வீதி, உடுவில் கிழக்கு, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சுப்பிரமணியம் நேற்று (12.07.2002) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - சிவகாமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மூத்த மகனும் காலஞ்சென்ற பூதப்பிள்ளை மற்றும் சின்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் செல்வராணியின் அன்புக் கணவரும் கௌசலா (லண்டன்), சகுந்தலா, சுசீலா (சம்பந்தர் வைத்திய ஆலோசனை, யாழ்ப்பாணம்), சியாமளா, இந்திரகுமார், சந்திரகுமார், சுரேஸ்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும் தயாபரன் (லண்டன்), குணசேகரம், மகாதேவன், திவ்வியநாதன் (தேவன் வாச் வேக்ஸ், சுன்னாகம்), சுமதினி, சர்மிளா, தவச்செல்வி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.07.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பூவோடை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொம்பை,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

தகவல்:
இந்திரன், சாந்தன், சுரேஸ்
(மகன்மார்)

(5950)

## திருமதி தயாவதி சிவலிங்கம்
### (ஆஸ்பத்திரி வீதி, சங்கானை)

ஆஸ்பத்திரி வீதி, சங்கானையை வதிவிடமாகக் கொண்ட திருமதி தயாவதி சிவலிங்கம் நேற்று (12.07.2002) வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் தாமு சிவலிங்கத்தின் அருமை மனைவியும், சங்கானை சுப்பிரமணியம் தில்லைநாயகியின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான தாமு - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அருமை மருமகளும், சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய மாணவர்களான நாகப்பிரேமன், அருணோதயன், பவித்திரன் ஆகியோரின் அன்புத்தாயாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (12.07.2002) வெள்ளிக்கிழமை பி.ப.3.30 மணியளவில் கரைச்சி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆஸ்பத்திரி வீதி
(சிலம்புப்புளியடி),
சங்கானை.

தகவல்:
தா.சிவலிங்கம்
(கணவர்).

(C/22926)

# வைகோவுக்கு 28 நாள் காவல்! வேலூர்ச் சிறையில் அடைப்பு!!

சென்னை,ஜுலை13

சென்னை விமான நிலையத்தில் நேற்றுமுன்தினம் மாலை கைதுசெய்யப்பட்ட ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோவை மதுரைச் சிறையிலா அல்லது வேலூர் சிறையிலா அடைப்பது என்பதை அறியாது பொலீஸார் திக்குமுக்காடினார்கள். இறுதியில் ஒருவாறு வேலூர் சிறையிலேயே அடைத்தார்கள்.

மும்பாயிலிருந்து நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணியளவில் சென்னை விமான நிலையத்தை வந்தடைந்ததும் கைதான வைகோ, ஓகஸ்ட் மாதம் 7 ஆம் திகதிவரை 28 நாள்களுக்கு சிறை வைக்கப்பட்டிருக்கிறார்.

கைதுசெய்யப்பட்ட வைகோ, பலத்த பாதுகாப்புடன் முதலில் திருமங்கலத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டார். சுமார் 9 மணிநேர பயணத்துக்குப் பின்னர் நேற்று அதிகாலை 2 மணிக்கு திருமங்கலத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட வைகோ, நீதிமன்றக் குடியிருப்பில் நீதிவான் வனிதா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

'பொடா' சட்டத்தின் 25 ஆவது பிரிவின்கீழ் வழக்கமான நீதிமன்றங்கள் பிணையில் வெளிவரமுடியாத பிடியாணை பிறப்பிக்கமுடியாது; கைது செய்யப்பட்டாலும் சிறையில் அடைக்கும்படி வழக்கமான நீதிமன்றங்கள் உத்தரவிடமுடியாது - என்று வைகோ அங்கு வாதாடினார்.

வைகோவின் வாதங்களை நிராகரித்த நீதிவான் அவரைச் சிறையில் அடைக்குமாறு பொலீஸாருக்கு உத்தரவிட்டார். அதனையடுத்து பொலீஸார் அதிகாலை 3 மணிக்குத் திருமங்கலத்திலிருந்து வைகோவை மதுரை மத்திய சிறைக்குக் கொண்டுசென்றனர். அவர் சிறைக்குள் கொண்டுசெல்லப்பட்ட சிறிதுநேரத்தில் வைகோவை வேலூர் சிறையில் அடையுங்கள் என்று 'உயர்மட்டத்திலிருந்து' பொலீஸாருக்கு உத்தரவுவந்தது.

இதையடுத்து அங்கிருந்து அதிகாலை 4 மணிக்கு வைகோவை ஏற்றிக்கொண்டு பொலீஸ் வான் வேலூருக்குப் பறந்தது. வான் புறப்பட்டு 2 கிலோமீற்றர் தூரம்தான் சென்றிருக்கும். வைகோவை மதுரைச் சிறையிலேயே அடைக்கும்படி பொலீஸாருக்கு மற்றோர் உத்தரவுவந்தது. உடனே வாகனத்தைத் திருப்பிக்கொண்டு மதுரைக்குத் திரும்பினர் பொலீஸார்.

அதிகாலைவேளை வைகோவை மதுரையிலிருந்து வேலூருக்குக் கொண்டுசெல்லும்போது ம.தி.மு.க. தொண்டர்கள் வழியில் வானை மறிக்கக்கூடும் என்ற அச்சத்திலேயே அவர் மீண்டும் மதுரைக்குக் கொண்டுசெல்லப்பட்டதாகக் காரணம் கூறப்பட்டது. சிறிதுநேரத்தில் - காலை 6 மணியளவில் - அடுத்த உத்தரவு சென்னையிலிருந்து வந்தது. அதன்படி வைகோ ஒருபடியாக வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார்.

(ம-12)

# கைதடி சித்த மருத்துவமனையில் ஒரு பிரிவு மீண்டும் இயங்குகிறது

யாழ்ப்பாணம்,ஜுலை13

கைதடி சித்த ஆயுர்வேத வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு கடந்த இரண்டு வருடங்களின் பின்பு முழுநேரமாக இயங்கிவருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த 2000ஆம் ஆண்டு மே மாதத்தில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலையினால் வைத்தியசாலையின் பெரும் பகுதி முற்றாகச் சேதமடைந்தது. இதனை அடுத்து வைத்தியசாலை கொக்குவில் சந்திக்கு அருகில் உள்ள தனியார் கட்டடமொன்றில் தற்காலிகமாக இயங்கிவந்தது.

சேதமடைந்த வைத்தியசாலையின் சிறுபகுதி தற்பொழுது புனரமைக்கப்பட்டதையடுத்து அது மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது. ஆயினும் மலசலகூடங்கள், கழிவு வாய்க்கால்கள் மற்றும் நீர் விநியோகக் குழாய்கள் என்பன புனரமைக்கப்படவில்லை. இவை யாவும் புனரமைக்கப்பட்டால் உள்நோயாளர் பகுதியையும் ஆரம்பிக்க முடியும் என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன,

(ஓ-10)

## பொ.ஐ.மு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனைகள் முற்றாக நிறைவேற்றப்பட்டவுடன் இருதரப்பினரும் பேச்சுக்களை ஆரம்பிக்க முடியும் எவ்வாறாயினும் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகும் திகதியை அரசே தீர்மானிக்க வேண்டும்.

- இவ்வாறு அவர் தெரிவித்தார்.

(ம)

## சர்ச்சைக்குரிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் திலக் மாரப்பன தனதுரையில் குறிப்பிட்ட சில முக்கிய விடயங்கள் வருமாறு:-

மூதூர், வாழைச்சேனைக் கலவரங்களில் ஆறு முஸ்லிம்களும், மூன்று தமிழர்களும் கொல்லப்பட்டனர். 56 முஸ்லிம்களும் 25 தமிழர்களும் காயமடைந்தனர்.

பொலீஸார் பாரபட்சமாக நடந்து கொண்டனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. இதனை உடனடியாக விசாரணை செய்ய பிரதிப் பொலீஸ்மா அதிபர் ஆனந்தராஜாவை மட்டக்களப்புக்கு அனுப்பினோம்.

உண்மையான குற்றவாளிகள் கைதுசெய்யப்படவில்லை என்பது மற்றொரு குற்றச்சாட்டு. உண்மையான குற்றவாளிகளை அடையாளம் காண்பதற்காக குற்றப்புலனாய்வுப் பொலீஸார் விசாரணையில் ஈடுபட்டிருக்கின்றனர்.

மேலும் திறமையாகச் செயற்படுவதற்காக வாழைச்சேனைப் பொலீஸ் நிலையத்தை நாம் பலப்படுத்தியிருக்கிறோம். அப்பகுதியில் மேலும் பல பொலீஸ் நிலையங்களைத் திறக்கவிருக்கிறோம்.

இரண்டு சமூகத்தவர்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்த இராணுவ, விசேட அதிரடிப்படை ரோந்துகள் மேற்கொள்ளப்படும்.

அதிகாரிகளின் மதிப்பீடுகளின் பின் சொத்து இழப்பீடுகளுக்கு நஷ்டஈடு செலுத்தப்படும் - என்றார் அமைச்சர் மாரப்பன.

(ம)

## பிரபா - ஹக்கீம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெறுவர்.

நேற்றுமுன்தினம் இரவு நடந்த இச்சந்திப்பின்போது தற்போதைய தேர்தல் முறையில் மாற்றம் கொண்டுவரப்படவிருப்பது பற்றியும் ஆராயப்பட்டது.

தேர்தல் மறுசீரமைப்பு முறையை இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டத்துடன் சேர்த்து அறிமுகப்படுத்த வேண்டும் என்பதே சிறுபான்மைக் கட்சிகள் மற்றும் சிறிய கட்சிகளின் ஒட்டுமொத்த விருப்பம் என்று கூட்டமைப்பினர் கூறினர்.

தேர்தல் மறுசீரமைப்புக் குறித்துத் தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளின் ஒட்டுமொத்த முடிவை எடுப்பதற்காக அனைத்துக் கட்சிகளையும் கொண்ட குழு ஒன்றை அமைப்பது என முடிவுசெய்யப்பட்டது.

முஸ்லிம் காங்கிரஸ் குழுவைச் சந்திக்க முன்னர் நேற்றுமுன்தினம் மாலை - கூட்டமைப்பினர் தங்களுக்குள் கூட்டம் ஒன்றை நடத்தினர்.

தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பை அமைப்பு ரீதியாகப் பதிவுசெய்ய வேண்டும் என்று இக்கூட்டத்தில் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ் அணி), தமிழ்க்காங்கிரஸ் ஆகியவை வலியுறுத்தின. ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஒரு சாரார் இதனை எதிர்த்தனர்.

ஆனால் கூட்டமைப்பை ஒரு கட்சியாகப் பதிவுசெய்யும் யோசனை பின்னர் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டதாகத் தெரியவந்தது.

எதிர்வரும் 23ஆம் திகதி கூட்டமைப்புப் பிரதிநிதிகள் மீண்டும் கூடுவர். அப்போது கூட்டமைப்புக்குரிய பதவி நியமனங்கள், யாப்பு என்பவை குறித்து ஆராயப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ம)

## நெடுந்தீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்படும்.

நெடுந்தீவு அரசியல்துறைப் பொறுப்பாளர் கண்ணன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பிரமுகர்கள் பங்குபற்றுவர்

அன்று இரவு 7 மணிக்கு நெடுந்தீவு மகாவித்தியாலய மண்டபத்தில் சமாதானச் சூழலை வலியுறுத்தும் இன்னிசை நிகழ்ச்சி ஒன்று இடம்பெறவுள்ளது.

(ம-3-ரி)


**LOGIC**

தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த அளவையியல் வகுப்புக்கள் யாவும் சகல நிறுவனங்களிலும் நாளை (14.07.2002) ஞாயிறு தொடக்கம் நேர அட்டவணைப் பிரகாரம் நடைபெறும்.

(5949) By:P.கமல்

**ஐடியல் அக்கடமி**

சண்டிலிப்பாய்

**O/L கணிதம்**

ஆசிரியர்: V.N.பத்மநாதன்

ஆரம்பம்: இன்று (13.07.2002)

சனி காலை 10.30மணி

நேர அட்டவணை

சனி, ஞாயிறு

(5902) 10.30 - 12.30 மணி

**MS Office**

புதிய பிரிவுகள் ஆரம்பம்

காலம்: 14-07-2002

DIPLOMA IN MICROSOFT OFFICE

இற்கான புதிய விசேட பிரிவுகள் 14.07.2002 அன்று காலை 10மணிக்கு ஆரம்பமாக இருக்கின்றன. இப்பிரிவில் இணைந்துகொள்ளும் மாணவர்கள் 14.07.2002 இற்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

இயக்குநர்

(C/22841) IIS, யாழ்ப்பாணம்.

**சொகுசு பயணத்திற்கு**

கிலோ மீற்றருக்கு 18 ரூபா மட்டுமே!

அழையுங்கள் 2742

**அம்பாள் ரவல்ஸ்**

கம்பஸ் லேன்,

திருநெல்வேலி. (5854)

**இடமாற்றம்**

அனைத்து கொம்பியூட்டர் ஓவ்(f)செற் பிறின்டிங் வேலைகளுக்கும்

**கங்கை**

ஓவ்(f)செற் பிறின்டேர்ஸ்

184 A, நாவலர் வீதி

(பிறவுண் வீதிக்கு முன்பாக),

பெருமாள் கோயிலடி,

யாழ்ப்பாணம். (5887)


# நெஞ்சைவிட்டகலா 31ஆம் நாள் நினைவஞ்சலி



செல்வன்

## சிவானந்தம் மதிமுகன்

(தரம் -1 பளை மத்திய கல்லூரி மாணவன்)

மலர்வு 12.09.1996 உதிர்வு 13.06.2002

ஆறு ஆண்டுகள் ஆறாயிரம் வித்தைகாட்டி
பள்ளி செல்கையில் பார்த்தோம் உன் அழகை
பதித்தோம் பல கற்பனைகள் எம் மனதில்
பாரினில் பல காலம் வாழ்வாய் என்று
படைத்தவன் பாதியில் பறித்து விட்டான்
பரிதவிக்கின்றோம் மதிமுகா! உனை நினைந்து...

எமது அன்புச் செல்வம் மதிமுகன் நோய்வாய்ப்பட்டு யாழ்., கொழும்பு வைத்தியசாலைகளில் இருந்தபோது பலவிதத்திலும் விரைந்து உதவிகள் புரிந்த அனைவருக்கும் பின்னர் அவர் காலமானபோது எம்முடன் துயர் பகிர்ந்த உறவினர், நண்பர்களுக்கும் மற்றும் தொலைபேசி, தந்தி, தபால் மூலம் ஆறுதல் தெரிவித்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம். மதிமுகன் எம்மை விட்டுப் பிரிந்தாலும் எம் மனதைவிட்டுப் பிரியவில்லை.

*உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

நிரந்தர முகவரி:
*"லிங்க நேய"*
*எழுதுமட்டுவாழ் தெற்கு, எழுதுமட்டுவாழ்.*

பிரிவால் துயருறும்:
கு.சிவானந்தம்
குடும்பத்தினர் (வரன்). (5890)

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி கந்தையா

கலைமகள் வீதி, தையிட்டி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் 89, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கந்தையா நேற்று (12.07.2002) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னாச்சிப்பிள்ளையின் அன்புக் கணவரும் இரத்தினேஸ்வரி, இராசேஸ்வரி, குகனேஸ்வரி (சிங்கப்பூர்), சர்வேஸ்வரி, கணேசலிங்கம் (அஞ்சலகம் - காங்கேசன்துறை), கயிலநாதன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், சுகாதார சேவைகள் திணைக்களம் - யாழ்ப்பாணம்), பாலேந்திரன் (சவூதி அரேபியா), தனேந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் தம்பையா நடராசா (இளைப்பாறிய தபாலதிபர்), சுவாமிநாதன் (பாரதியார் அச்சகம், யாழ்ப்பாணம்), மயில்வாகனம் (விசுவமடு) ஆகியோரின் மாமனாரும் கிருஷ்ணகுமார் (உதவி முகாமையாளர்-இலங்கை வங்கிக் கிளை, கிளிநொச்சி), காலஞ்சென்ற ராஜயோகேஸ்வரர், சுதாமதி (தாதியர் பயிற்சிக் கல்லூரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.07.2002 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது தற்போதைய இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ்ப்பாணம் கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*89, வைமன் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*

(5952) தகவல்: க.கணேசலிங்கம் (மகன்)


**யசோ மோட்டேர்ஸ்**

163, 165 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

மீண்டும் எமது ஸ்தாபனத்துக்கு விற்பனைக்கு வந்துவிட்டன!

- HERO HONDA PASSION
- SPLENDOR
- CD 100 SS
- STREET SMART
- TVS VICTOR
- TVS CHAMP
- SUZUKI FIERO
- BAJAJ BOXER
- ASPER
- MD 90, SUPER CUP C50, C90

மற்றும் ஹெல்மெட் வகைகள்

**YASO MOTORS** 163, 165, STANLEY ROAD, JAFFNA. T.P.:2544

(C/22925)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.07.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.